269

சக்தி

மாத வெளியீடு

சுபானு ௵
ஆனி ௴

-/8



கதைகள்

ஒரு நாள் வாழ்வு
அகோர சம்பவம்
ஆச்சர்ய மருந்து
ஆந்தை விருந்து
புஷ்பா

★

வரலாறுகள்

பஞ்ச பாண்டியர்
வரும் வைஸிராய்

★

கட்டுரைகள்

நமது தமிழ் நாடு
கஷ்டம் ஆபீஸ்
ஏற்றப் பாட்டு
பலவித ஆட்சி

★

பாடல்கள்

நீர் வீழ்ச்சி
பொம்மை

★

குறிப்புக்கள்

உடம்பும் மருந்தும்
பறித்த பூக்கள்
புத்தக உலகம்
காலச்சுழல்
கதம்பம்

சிறந்த ஆபரணங்களுக்கும்
வைரங்களுக்கும்
P.A.ராஜசெட்டியார் & பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்
போன் 218A-தபால்பெட்டி 139-தந்தி "ராஜா"

269

கோகிலத்தின் தீங்குரல்

OF THE REGISTRAR
17 NOV 1943
MADRAS

ஸ்ரீமதி என்.ஸி. வஸந்தகோகிலம்

புதிய வெளியீடு

N. 18207 { இந்த வரம் — கரஹரப்ரியா
{ உதய ஸுந்தரி — விருத்தம்

HIS MASTER'S VOICE

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

M. SAMUEL

"எச். எம். வி." எஃகு ஊசிகள்

சில்லறையில் விற்பனைக்கு நிர்ணயித்த விலை:—சுமார் 200 ஊசிகள் அடங்கிய டப்பியின் விலை ரூ. 1-8-0

எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

மூலதனம்!

சண்டையிலும் சமாதானத்திலும் பொருத்தமானதும் உண்மையானதும்............

வைரங்களே

உறைவிடம்

ஸூரஜ்மல்ஸ்

நாணயத்திற்கும் நம்பிக்கைக்கும்......................... சென்ற அரை நூற்றாண்டுகளாக நிரந்தர நன்மதிப்புப் பெற்றுள்ளது.

ஆகையால்

ஸூ ர ஜ் ம ல் ஸ்

வைரங்களே !!!

313, எஸ்பிளனேட், மதராஸ்



புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது.

'ரிஷ்ய சிருங்கர்' தமிழ் படத்தில் பிரதம ஸ்திரீபாகம் வகித்தவரும், போப் பாண்டவரால் புகழப்பட்டவரும், இனிய சங்கீத சம்பத்துடையவருமான திறமை வாய்ந்த தென்னிந்திய நடிகை ஸ்ரீமதி வஸுந்தரா தேவி சொல்லுகிருர்.

"தனிப்பட்ட நறுமணத்திற்காக நான் எப்பொழுதும் நரஸுஸ் காபி, டீயையே உபயோகிக்கிறேன்."

Vasundhara Devi.

நரஸுஸ் காபி

M N K.—16 TM.

கொலம்பியா புதிய வெளியீடு!

சங்கீத வித்வான்

சித்தூர் சுப்ரமணிய பிள்ளை

மதுரை விஸ்வநாத சர்மா பிடில்
தஞ்சாவூர் ராமதாஸ் ராவ் மிருதங்கம்
மதராஸ் வேணு நாயகர் கஞ்சிரா
மன்னார்குடி நடேச பிள்ளை முகர்சிங்

GE. 6103 [மாவல்ல காதம்ம
குலமுலோன

G.H.RAO

ஸரஸ்வதீ ஸ்டோர்ஸ், மதராஸ்.

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும் :

S. கண்ணன் & Co.,

திருச்சினாப்பள்ளி,

சுபானு
மலர் 8

சக்தி

ஆனி
இதழ் 4

OFFICE OF THE REGISTRAR
17 NOV 1943
MADRAS

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

வைஸிராய் நியமன ரகஸ்யம்

இந்தியாவிலே முதன் முதலாக ஒரு ஸோல்ஜர் வைஸிராய் வரப் போகிறார். தளபதி ஆர்ச்சிபால்டு வேவல், வைஸிராயாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அதன் ரகஸ்யமென்ன?

ராணுவ ஆட்சி நடக்கப்போகிறதா? 'இல்லை' என்கிறார் வேவல். ஆனால், அவசரச் சட்ட ஆட்சி கிற்கும்' என்று அவர் சொல்லவில்லை. தாம் இந்தியாவின் நண்பனே என்று அவர் கூறுகிறார். அவரை இந்தியாவின் விரோதி என்று யார் சொன்னார்களோ? பழைய வாக்குறுதிகளைப் பலவீனப் படுத்த மாட்டாராம். அவ்வளவுதானா? புது வாக்குறுதிகள் கூடக் கொடுக்கலாமே? என்ன மோசம் வந்தது. நிறைவேற்றினால்தானே கஷ்டம்? யுத்த காலத்திலேயே இந்தியாவில் அரசியல் முன்னேற்றம் ஏற்படக்கூடாதென்பதில்லை என்றும் வேவல் சொல்லுகிறார். அது என்ன முன்னேற்றமோ?

இங்கிலையில், டில்லிப் பத்திரிகை ஒன்றில், 'வேவல்தான் வைஸிராயாக வருவார்' என்று போன மாதமே எழுதிய ஒருவர், இப்போது சில ஆச்சர்ய சோதிடங்கள் சொல்கிறார். அமெரிக்காவில் ரூஸ்வெல்டுடன் நடந்த பேச்சின் பலனாகவே, வேவல் வைஸிராயாக நியமிக்கப்பட்டுள்ளாராம். ஸர் பிலிப்ஸனும் திரும்பி வருவாராம். மீண்டும் இந்திய அரசியல் முட்டுக்கட்டையைத் தீர்க்க முயற்சி நடக்குமாம்.

புதிய இந்திய சேனாதிபதி ஆச்சின்லெக், தாராளமனோபாவமுடையவர். இந்திய ராணுவ மந்திரிக்குக் கீழே வேலை பார்க்க அவர் ஆட்சேபம் சொல்ல மாட்டாராம். ஆட்சேபம் 'சொன்னவர்' என்று சந்தேகிக்கப்படுபவர், வைஸிராயாகவே வந்துவிட்டபின், இதில் என்ன பயம்? தவிர, யுத்தப்பொறுப்பு அந்த ஆச்சின்லெக்கிடம் இருக்கப் போவதில்லை. அதற்கு வேறே ஒரு கமிஷன் நியமிக்கப்படுமாம். எல்லாம் மீண்டும் ஒரு கண் துடைப்பு முயற்சி நடக்கும் என்பதையே காட்டுகின்றன. ஆனால், உண்மையான அதிகாரம் இந்தியர் கைக்கு மாறுமா? அதுதான் சந்தேகம்.

★

காலச்சுழல்

அரிசி நெருக்கடி: சென்னை நகரில் இம்மாதம் திடீரென்று அரிசி நெருக்கடி ஏற்பட்டது. அதிகாரிகள் கெடுபிடியான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார்கள். சர்க்காரின் தடை உத்திரவு ஒன்றும் புறப்பட்டது. லைசென்ஸ் இல்லாமல் யாரும் தங்களது ஒரு மாதத் தேவைக்கு மேல், அரிசி, சோளம், கம்பு, ராகி முதலியவற்றைக் குவித்து வைத்திருக்கக்கூடாது என்பதுதான் அது. ஜனங்களில் யாரும் அவ்வாறு குவித்து வைத்திருக்கக் கூடும் என்று நமக்குத் தோன்றவில்லை. முக்கால்வாசி ஜனங்கள், அவ்வப்போது சம்பாதித்து ஜீவிக்கவேண்டியவர்கள். பணத்தை எப்படி அவர்கள் உணவுத் தானியம் ஒன்றிலே முடக்க முடியும்? வியாபாரிகளும் சில பணக்காரர்களுமே இந்த நெருக்கடிகளுக்குக் காரணமாயிருக்கவேண்டும். அவர்களைத் திறமையாகக் கட்டுப்பாடு செய்தால், இந்தத் தொல்லை நேரவே நேராது. அதிகாரிகள் அதைச் செய்வார்களா?

*　　　　*

நிறக் கலகம்: அமெரிக்காவில் டிட்ராயிட் நகரில், ஒருநாள், விளையாட்டு நந்தவனமொன்றிலிருந்து வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு நீக்ரோவுக்கும் ஒரு வெள்ளையருக்கும் ஏதோ வாய்ச் சண்டை தொடங்கி, அது கைச் சண்டையில் முடிந்ததாம். பல வெள்ளையர் கூடினர். நீகிரோக்களும் கூடினார்கள். அடிதடியாகி, கலகம் முற்றியது. 23 பேர் மாண்டார்கள்; அதில் பெரும்பாலோர் நீகிரோக்கள். 1,300 பேர் கைது செய்யப் பட்டார்கள்; அதில் 100-க்கு 80-பேர் நீகிரோக்கள். இந்தக் கலகத்துக்கு மூலம் என்ன? ஐந்தாம் படையின் வேலை என்று தளுக்காகக் காரணம் சொல்லப்படுகிறது. நீகிரோக்களின் குறைகளெல்லாம் தீர்க்கப்பட்டிருக்குமானால், இம்மாதிரி கலகங்கள் நடக்குமா? இன்னும் கூட, அநேகம் பெரிய தொழிற்சாலைகளில் நீகிரோக்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளுவதில்லையாம். ஜனத்தொகையில் 6 சத விகிதத்துக்கு மேல் உள்ள நீகிரோக்களில், 26 சத விகிதம் வேலையில்லாமல் திண்டாடுகிறார்களாம். இந்தப் பிரச்னைகளுக்கு என்னபரிகாரம்?

*　　　　*

அழகப்ப செட்டியார் நன்கொடை: கோட்டையூர் பாரிஸ்டர் கே. வி. எ. எல். ஆர். எம். அழகப்ப செட்டியார் அவர்கள், அண்ணாமலைச்சர்வகலாசாலைக்கு, தொழிற் கல்விக்காக ஐந்து லட்சத்து ஒரு ரூபாய் நன்கொடை அளித்துள்ள செய்தி பெரிதும் பாராட்டத்தக்கது. நாட்டின் வளம் பெருகுவதற்கும், வேலையில்லாத் திண்டாட்டம் குறைவதற்கும் தொழிற்கல்வி பேருதவியாகும்; இன்றியமையாததாகும். அந்த அரிய காரியம் நிறைவேறுவதற்கு, இவ்வளவு பெருந்தொகையை அன்பர் செட்டியார் நன்கொடை அளித்தது இணையற்ற தர்மமாகும். அதற்கு அவரை மனப்பூர்வமாய் வாழ்த்துகிறோம்.

★

கே. வி. ஏ. எல். ஆர். எம்.
அழகப்ப செட்டியார் அவர்கள்,
எம்.ஏ., பார்-அட்-லா.

படியுங்கள்

வெ. சாமிநாத சர்மா எழுதிய

ரூஸ்ஸோ (வரலாறு)

ஜனநாயகம், சுதந்தரம், சமூக உரிமைகள் பற்றிய அற்புதமான நூல்களை இயற்றி, பிரஞ்சு சுதந்தரப் புரட்சிக்கு விதை ஊன்றிய பெரியோரின் வரலாறு.

விலை ரூ. 1—12—0

கார்ல் மார்க்ஸ் (வரலாறு)

பொதுஉடைமை வாதிகளின் வேதமாக விளங்கும் நூல்களை எழுதி பாட்டாளி மக்களின் விடுதலைக்குப் போராடிய மகானின் விரிவான வரலாறு.

விலை ரூ. 3—0—0

சோவியத் ருஷ்யா (சரித்திரம்)

ருஷ்ய சரித்திர வரலாறு, முடியரசின் மறைவு, குடியரசின் தோற்றம், சமதர்மம் என்றால் என்ன? சமதர்மக் கட்சி, சோவியத் அரசியல் அமைப்பு, பொருளாதாரத் திட்டம், விவசாயம்—தொழில், பெண்ணுரிமை, கலை, சுகாதாரம்—ஓய்வு, அந்நிய நாட்டுக் கொள்கை, புதிய நாகரிகம் முதலியவை விளக்கமாக எழுதப்பெற்றிருக்கிறது.]

விலை ரூ. 3—8—0

சமுதாய ஒப்பந்தம் (அரசியல்)

அச்சில்

மனித சமுதாயத்தின் இயற்கையையும், அதன் மூல காரணங்களையும், விளக்குவது. எந்தத் தத்துவங்களைக் கைப்பற்றி மனித சமூகம் முன்னேற வேண்டுமோ, எந்த உரிமைகளையும் கடமைகளையும் அறிந்துகொண்டு வாழ்ந்தால் ஜன சமுதாய ஒழுங்குமுறை மேம்படுமோ அவைகளையெல்லாம் ஆராய்ந்து தெளிவு செய்வது.

(தபாற் செலவு தனி)

சக்தி காரியாலயம்

தபாற் பெட்டி நெ. 1361
சென்னை

வடக்கு வெளி வீதி
மதுரை

கதம்பம்

அமெரி சம்பந்த முண்டா: புதிய வைஸிராய் நியமனம் மிகுந்த கற்பனாசக்தி கொண்டது என்று வர்ணிக்கிறார் அமெரி துரைமகனார். ஆனால், கற்பனை யாருடையது, அவருடையதா அன்றி வேறே யாருடையதேனுமா என்று அவர் தெரிவிக்கவில்லை. இந்திய வைஸிராய் நியமனம் எப்படி நடக்கிறது? ஒரு பெயரை, பிரிட்டிஷ் மன்னருக்கு, பிரதம மந்திரி சிபார்சு செய்வார். அவரையே நியமிக்கவேண்டுமென்று மன்னருக்குக் கட்டாயமில்லை. சில சமயம், மன்னருக்கும் இந்தியா மந்திரிக்கும், பிரதம மந்திரிக்கும் இவ் விஷயத்தில் அபிப்பிராய வேற்றுமை வந்துவிடுவதுண்டு.

எட்வர்டு மன்னர் காலத்தில், மன்னரும் பிரதம மந்திரியும் லார்டு கிச்னரை வைஸிராயாக்க விரும்பினார்கள். லார்டு மார்லியோ, அவரை நியமிக்கவே கூடாதென்று எதிர்த்தார். மார்லியே வென்றார். ஆனால், லார்டு இர்வினுக்கு அடுத்தபடி, தாம் ஒருவரைக் குறிப்பிட்டு வைஸிராயாக்க விரும்பினார் பிரதம மந்திரி ராம்ஸே மக்டானல்டு. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர், அந்தச் சிபார்சை நிராகரித்து, லார்டு வில்லிங்டனையே நியமித்து விட்டார். வேவல் நியமனத்தில், அமெரிக்காவின் கைகூடக் கொஞ்சம் கலந்திருப்பதாக வதந்தி வருகிறதே, அது உண்மையா?

* *

வைஸிராய் அரண்மனையில்: புது டில்லியில் வைஸிராய் அரண்மனை பிரம்மாண்டமானது. எத்தனையோ அறைகள், கூடங்களெல்லாம் இருக்குமாம். "இந்தியாவுக்குப்போய்ப் பலமாதங்கள் ஆனபிறகு கூட, பல வைஸிராய்கள், தங்கள் இருப்பிடத்துக்குப் பிறரை வழிகேட்கும்படி நேர்ந்ததுண்டு" என்கிறது, 'எவரிபடீஸ்' என்ற சீமை வாரப்பத்திரிகை.

புதிய வைஸிராய் வேவல், தமது அரண்மனையில் மட்டிலுமல்ல, இந்திய அரசியல் சுழல்களிலிருந்தே வழி கண்டு பிடிக்க வேண்டியவராய் இருக்கிறார். சாவியை ஆகாகான் அரண்மனைக்குள்ளேபோட்டுப் பூட்டிவைத்துவிட்டு ஊரெல்லாம் தேடுவதில் பயனில்லை என்பதை அவர் அறியப் போகிறாரா?

* *

இந்தியாபற்றி சியாங்: சில வருஷங்களுக்கு முன் இந்திய சர்க்காரின் பிரதிநிதியாக ஸர் ஜாபருல்லா, சீனாவுக்குச் சென்றிருந்தாரே, அப்போது சீனத் தலைவன் தளபதி சியாங் கே ஷேக்கும் இவரும் பேசிக்கொண்டிருந்தார்களாம்.

"இந்தியாவிலேயே பெரிய அரசியல் கட்சி காங்கிரஸ் தான். என்றாலும், முஸ்லீம் லீக், இந்து மகா சபை முதலிய வேறு கட்சிகளும் இருக்கின்றன" என்றாராம் ஜாபருல்லா.

"அப்படியா! நான் இந்தியாவுக்கு வந்து திரும்பியபோது, இந்தியாவே காங்கிரஸ், காங்கிரஸே இந்தியா என்ற அபிப்பிராயத்தோடல்லவா வந்தேன்!" என்றாராம் சியாங் கே ஷேக்.

பிரிட்டிஷ் உதவி: "ருஷ்யாவில் உணவுப் பஞ்ச அபாயம் வரும்போல் இருக்கிறது" என்று எச்சரிக்கிருர் லார்டு ஸ்டிராபோல்கி.

"உடனே பிரிட்டன் பல உணவு நிபுணர்களை ருஷ்யாவுக்கு அனுப்பி உதவுமென்று எதிர்பார்க்கிரேரும்" என்று ஒரு பத்திரிகை யோசனை கூறுகிறது.

ஆனல், இந்த உணவு நிபுணர்களுக்கு வேண்டிய ஆகாரத்தை ருஷ்யா அதி சீக்கிரமாகத் தயார் செய்து வைக்க வேண்டுமென்று பிரிட்டன் ஒரு நிபந்தனை போட்டிருப்பதாகக் கிளம்பும் வதந்தியில் உண்மையே யில்லையாம்.

* *

யுத்தத்துக்குப் பின்னே: பிரிட்டனிலே, யுத்தத்துக்குப் பின்னே யார் பிரதம மந்திரியாக வருவார் என்ற விஷயமாகச் சில பத்திரிகை நிருபர்கள் விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

"டிவாலராதான் வருவார்" என்று சொன்னர் ஒரு நிருபர்.

"அதெப்படி?"

"எப்படி என்ருல், லாயிட் ஜார்ஜ், வேல்ஸைச் சேர்ந்தவர். போயர் யுத்தத்தை அவர் எதிர்த்தார். போயர் யுத்தத்தை வென்றவுடனே, அவரே பிரதம மந்திரியானர். ராம்ஸே மக்டானல்டு, ஸ்காட்லாந்துக்காரர். சென்ற ஜெர்மன் யுத்தத்தை அவர் எதிர்த்தார். அதை வென்ற பின் அவரைப் பிரதம மந்திரியாக்கினேம். டிவாலரா அயர்லாந்துக்காரர். அவர் தற்போதைய யுத்தத்தில் துளிக்கூடத் தாம் சம்பந்தப்பட முடியாது என்கிருர். ஆகையால், இந்த யுத்தத்தை வென்றவுடனே, ஆங்கிலேயர் அவருக்கொரு தூதுக் கோஷ்டியை அனுப்பி, பிரிட்டிஷ் பிரமத மந்திரி பதவியை ஏற்றுக்கொள்ளும்படி அவரை வேண்டிக்கொள்ளுவார்கள் என்பதில் சந்தேகமென்ன?"

* *

சீனக்காரன் வேலே: பழிக்குப் பழி செய்வதில் சீனக்காரர்களின் குணத்தை விளக்கும் ஒரு கதையை, ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார், அமெரிக்காவில் இருக்கையில் செய்ததொரு பிரசங்கத்தில் கூறியிருக்கிருர்.

சிங்கப்பூரில் பிரிட்டிஷ் ஸோல்ஜர்களுக்கு, சீனக்காரச் சிறுவன் ஒருவன் காப்பி தயாரித்துக் கொண்டு வந்து, சப்ளை செய்வானும். அவன் தலை மழுமழுவென்று வழுக்கையாய் இருப்பது கண்டு, பிரிட்டிஷ் ஸோல்ஜர்களுக்கெல்லாம் 'குஷி' பிறந்துவிடும். அவனை எப்போது கண்டாலும் ரொட்டி, பிஸ்கோத் முதலியவைகளை, அவன் தலைமீது எறிந்து, கேலி செய்து சிரிப்பார்கள். அவனே இதையெல்லாம் வெகு பொறுமையாய்ச் சகித்துக் கொண்டான். பலநாள் கழித்து, அந்த ஸோல்ஜர்களுக்கே இவனது பொறுமையால் மனம் இளகிவிட்டது.

ஒருநாள் இவன் வரும்போது, ஸோல்ஜர்களின் தலைவன் இவனைப் பார்த்து "பையா! உன் சாந்த குணத்தை மெச்சுகிரேரும். இனிமேல், நாங்கள் உன் தலைமீது, ரொட்டி, பிஸ்கோத்துக்களை வீசுவதே யில்லை என்று முடிவு செய்திருக்கிரேரும்" என்ருர்.

சிறுவன் மிகவும் நிதானமாகவே, "வந்தனம். அவ்விதமானல் நானும் இனிமேல் உங்களுக்குச் சாக்கடைத் தண்ணீரில் காப்பி தயாரித்துக் கொண்டு வருவதில்லை" என்று கூறினன்!

★

வைஸிராய்

'ஸரஸி'

இந்திய சரித்திரத்திலேயே புதுமையாக, போர் வீரனுக இருந்து வைஸிராய் பதவி பெற்று, அதை வகிக்கப்போகும் தளபதி வேவல் ஒற்றைக்கண்ணர் தான். என்றாலும், ஆப்பிரிக்க வனாந்தரத்திலே வெற்றிவாகை சூடிய பெரிய வீரர் அவர். அவருக்கு ஒரு கண் போனது சென்ற மகா யுத்தத்தில் யைப்பிரஸ் போரிலே யாகும். மகா நெப்போலியனை முறியடித்த நெல்ஸனுக்கும்தான் ஒரு கண் இல்லை; ஆயினும் என்ன? சரித்திரத்திலே அவருடைய பெயர் ஏறிவிட வில்லையா? அதே போல, நம் வேவலுக்கும் இப்போது கீர்த்தி ஓங்கியிருக்கிறது; பதவியும் உயர்ந்திருக்கிறது.

யாரோ அவரை இந்தியாவின் விரோதி என்று சொன்னது போல, "நான் இந்தியாவின் நண்பன்; நண்பன்" என்று உரக்க கோஷித்துக் கொண்டு வருகிறார் தளபதி வேவல். ஒரு ஸோல்ஜர் இந்தியாவை ஆள வருகிறார். எதற்கும் அவருடைய வீரதீரப் பிரதாபங்களை நாம் அறிந்திருப்பது நலமல்லவா?

ஒரு தளபதியை, எதிரியே புகழ்வதென்றால், பெரிய ஆச்சர்யம் அல்லவா? தளபதி வேவலை, ஜெர்மன் ராணுவத் தலைவரான கீட்டல் என்பவரே புகழ்ந்திருக்கிறார். "பிரிட்டிஷார் படைத்திருக்கும் தளபதிகளுக்குள்ளே தலை சிறந்தவர் வேவல் தான்; அவர் மிகமிகச் சிறந்தவர்" என்று கீட்டல் சொல்லியுள்ளார்.

தளபதி வேவல் 1883-ஆம் வருஷம் பிறந்தார். அவருடைய தகப்பனார் ஒரு மேஜர் ஜெனரல். பாட்டனாரும் ஒரு போர்வீரர் தான்; ஸ்பெயினிலும் வெனிஸூலாவிலும் சேவை செய்து, பணம் சம்பாதித்தவர். ஆகையால், தளபதி வேவல், பரம்பரைப் போர் வீரர் ஆவார்.

தளபதி வேவலின் மாமனார் மட்டிலுமென்ன; அவரும் ஒரு கர்னல். வேவலின் மனைவி ஜோன் நல்ல உழைப்பாளி. வேவல் தம்பதிகளுக்கு மூன்று பெண்களும் ஒரு மகனும் உண்டு. மூத்த மக

ளான பாமீலா ஒரு நர்ஸ். மற்ற இரு பெண்களும் ஆப்பிரிக்காவில் தகப்பனரின் ராணுவத் தலைமைக் காரியாலயத்திலே காரியதரிசிகளாய் வேலை பார்த்தார்கள். ஒரே மகனை ஆர்ச்சி, குடும்ப தர்மத்தை ஒட்டி, போர் வீரனக வேலை பார்க்கிறுன்; பிளாக் வாட்ச் என்ற பிரபல ரெஜிமெண்டில் ஓர் ஆபீஸராக இருக்கிறுன்.

தளபதி வேவல் சிறுவயதா யிருக்கும் போது, முதன் முதலில் பிளாக் வாட்ச் ரெஜிமெண்டில் சேர்ந்துதான், தென்னுப்பிரிக்க போயர் யுத்தத்துக்குப் போனர். வின்செஸ்டர் கல்லூரியில் படித்து, ஸாண்ட் ஹர்ஸ்ட் ராணுவக் கல்லூரியில் பயிற்சி பெற்ற பின், 1901-ஆம் வருஷம் அவ்வாறு தென்னுப்பிரிக்க சேவைக்குச் சென்றுர். அதன் பின் 1908-ஆம் வருஷம் கொஞ்ச காலம் இந்திய எல்லைப்புறப் பட்டாளத்தில் சேவை செய்தார். ஆனல், அதில் ஒன்றும் அப்படிக் கீர்த்தி சம்பாதிக்க வில்லை.

1916-ஆம் வருஷம் காக்கஸஸுக்கு ராணுவத் துணைவராக, வேவல் அனுப்பப்பட்டார். அங்கே இரண்டு வருஷ காலம் இருந்ததில், ருஷிய பாஷை மிக நன்ருகப் பேசக் கற்றுக்கொண்டார். பின்னும், ஐந்தாறு தடவை ருஷியாவுக்கு வேவல் சென்றிருக்கிறுர். 1936-ஆம் வருஷம் இவர் அங்கே சென்றபோது, ருஷியப் 'பாரசூட்' படைப் பயிற்சி நடந்துகொண் டிருந்தது அதைக் கண்டுவியந்துபாராட்டி, இங்கிலாந்துக்கும் எழுதி யனுப்பினர். ஆனல், பிரிட்டிஷ் யுத்த மந்திரி காரியாலயத்தார், வேவலின் அபிப்பிராயத்தை அலட்சியம் செய்துவிட்டார்கள்.

சென்ற மகாயுத்தத்தின் போது, பீரங்கிப் படை மேஜராக, வேவல் பதவி பெற்ருர். யைப்பிரஸில் இடது கண்ணை இழந்தாலும், ராணுவச் சிலுவைப் பதக்கம் பரிசு பெற்றுவிட்டார். வேவலின் ராணுவ குருநாதராக ஆலென்பியைத்தான் சொல்லுவது வழக்கம். 1917–18-ஆம் வருஷங்களில் பாலஸ்தீனில் ஆலென்பியின் ராணுவத் தலைமைக் காரியாலயத்தில் பிரதம உத்தியோகஸ்தராக இருந்துகொண்டு, ஆலென்பியின் போர் நுட்பங்களை வேவல் கற்ருர்.

1933-ஆம் வருஷம் மேஜர் ஜெனரலாக, வேவலின் பதவி உயர்ந்தது. அதற்கு ஐந்து வருஷங்களுக் கெல்லாம், லெப்டினண்ட் ஜெனரல் என்ற பதவி உயர்வும் கிடைத்தது.

வேவல் மிகவும் சூட்சும புத்தி உடையவர். பிரிட்டிஷ் யுத்த மந்திரி காரியாலயத்தார், ஒரு சமயம் போர் வீரர்களுக்குச் சில நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தினர்கள். அதாவது, கொசு வலை போன்ற பல பழம் பசலிச் சாமான்களை யெல்லாம் சேனை வீரர்கள் எப்போதும் வைத்திருக்க வேண்டுமென்று நிர்ப்பந்தம். இந்த முட்டாள்தனத்தை உடைக்க வேண்டுமென்று வேவல் விரும்பினர். சாதாரண ராணுவப் பயிற்சி ஒன்று நடந்த போது, தமது படையொன்றை, இந்த ஓட்டை உடைசல் சாமான்கள் அத்தனையோடும் ஒரு ரஸ்தாவிலே விரட்டிவிட்டார். அதனல் சாலையிலே 15 மைல் தூரம், துப்பாக்கி தாங்கி நடக்கும் காலாள் வீரரும், கோவேறு கழுதை வண்டிகளும், வேறு தளவாடங்களுமாய் ரஸ்தாவின் வண்டிப் போக்குவரத்துகளோடு மோதி ஒரே அவந்தரை யாகிவிட்டது!

இதைக் கண்டு, அவர் மீது யுத்தமந்திரி காரியாலயத்தாருக்கு உள்ளுக்குள்ளே எரிச்சல் உண்டாயிற்று. அவரை மெள்ளப் பாலஸ்தீனுக்குச் சேனைத் தலைவராக அனுப்பிவிட்டார்கள். அங்கே போகும் ராணுவத் தலைவர்களுக்கு நல்ல பெயர் கிடைப்பதே யில்லை. வேவலும் அங்கே ரத்தவிளாறுய் ஓடச் செய்து, 'பெரிய ரத்த வேட்டை நாய்' என்று மக்களிடம் பெயர் வாங்கினார். என்ருலும் கலகங்களை அடக்கிய வீரர் என்ற பாராட்டுதலை, பிரிட்டனிடம் அவர் சம்பாதித்து விட்டார்.

மூனிக் முட்டாள்தனத்தை பிரிட்டிஷ் சர்க்கார் உணர்ந்து கொண்டவுடனே, தளபதி வேவலை அழைத்து, இங்கிலாந்தின் தெற்குப் பகுதியின் படைகளுக்குத் தலைவராக நியமித்தார்கள். ஏனெனில், அதுதானே அப்பொழுது மிகவும் 'வபை'யான பாகம்? ஆனல், மத்தியக் கீழ்த் திசையின் நிலைமைதான் மிக அபாயமானதென்று பிறகு தோன்றியதால், அவரை, பிரிட்டிஷ் யுத்தமந்திரி காரியாலயத்தார், எகிப்துக்கு அனுப்பினார்கள். மால்டா, கிரீட் ஆகிய இடங்களிலிருந்து, தெற்கே கென்யா, வட ரொடீசியா வரைக்குமுள்ள விஸ்தாரமான பிரதேசங்களிலிருக்கும் அத்தனை பிரிட்டிஷ் படைகளுக்கும் அவர் தலைவரானர்.

லிபியாவில் இதாலியப் படைகளைத் தாக்குவதில், தளபதி வேவல் கொஞ்ச நாள் தாமதம் செய்தார். இது பிரிட்டனிலிருந்த சிலருக்குப் பிடிக்கவில்லை. வேவலை உடனே அங்கிருந்து அகற்றிவிடவேண்டுமென்றுகூட அவர்கள் கூச்சலிட்டார்களாம். "உடனே படையெடும்" என்று பிரிட்டிஷ் சர்க்காரின் ஓர் உத்திரவை ஜேபியில் போட்டுக் கொண்டு, வேவலிடம் ஆந்தனி ஈடனே ஒரு சமயம் தூது போனராம். அந்த உத்திரவு வேவலிடம் கொடுபட்டதா, இல்லையா என்று தெரியவில்லை. ஆனல், சரியான தருணம் வரும் வரையில் காத்திருந்த வேவல், இறுதியிலே தம் இஷ்டப்படி படையெடுத்து, வெற்றிமேல் வெற்றி பெற்று உலகத்தையே பிரமிக்கச் செய்துவிட்டார்.

யுத்தம் ஆரம்பித்தவுடனே, தளபதி வேவல், கெய்ரோவில் உள்ள பெரிய ஹோட்டல் ஒன்றுக்குத் தமது காரியாலயத்தைக் கொண்டுபோய்விட்டார். மூன்ரும் மாடியில் சாமானியமான ஓர் அறையைத் தமக்கு வைத்துக் கொண்டார். மட்டமான ஒரு மேஜைமீது பல வர்ணப் பென்ஸில்களையும் பளபளப்பான பல பூகோளப் படங்களையும் பரப்பிக்கொண்டு, ஆராய்ச்சியில் முனைந்துவிட்டார்.

போன மகாயுத்தத்தின்போது, நம் வேவலும், இதாலியத் தளபதி கிராஸியானியும் ஆப்பிரிக்காவில் போரிடுகையில், ஒருவருக்கொருவர் நேசர்களாய்ச் சந்தித்தார்கள். குப்ரா வனத்தைக் கலகக்காரர்களிடம் இருந்து தாங்கள் இருவருமாய்ப் பிடித்தபோது, ஒருவருக்கொருவர் நட்பு முறையில் கட்டாரிகள் மாற்றிக்கொண்டார்கள். அந்தக் கட்டாரிகளிலே, "ஒன்றுபட்ட நாமே எஜமானர்கள்" என்ற வார்த்தைகளும் பொறிக்கப்பட்டிருந்தன. ஆனல், விதி யாரைவிட்டது? அந்த வேவலும் அந்தக் கிராஸியானியும், அதே ஆப்பிரிக்க மண்ணில் எதிரிகளாய்ப் போரிட, சமீபத்தில் நேர்ந்தது. இந்தப்

போருக்குமுன் வரையில், வனந்தரப் போர் சம்பந்தப்பட்ட மட்டில் வல்லவர்கள் உலகிலேயே இருவர்தான் என்று மதிக்கப்பட்டு வந்தது. ஒருவர் வேவல்; மற்றவர் கிராஸியானி. அந்த இருவரில் கிராஸியானி தோற்றுவிட்டார். வேவலே வெற்றிபெற்று மிஞ்சியவர்.

இப்பேர்ப்பட்ட வேவல், 1941-ஆம் வருஷம் ஜுலை மாதத்திலிருந்து 1942-ஆம் வருஷம் ஜனவரி மாதம் வரையில், இந்தியாவின் பிரதம சேனதிபதியாக இங்கே பதவி வகித்தார். அதன் பின், ஜனவரியிலிருந்து மார்ச்சு மாதம் வரையில் தென்மேற்குப் பஸிபிக்கில் பிரிட்டனுக்கும் அதன் நேசநாடுகளின் படைக்ளுக்கும் தலைமைச் சேனதிபதியாக இருந்தார்.

1941-ஆம் வருஷம் மார்ச்சு மாதத்திலிருந்து மீண்டும் இந்தியாவின் பிரதம சேனதிபதியாக, அவர் பதவி வகித்திருந்தார். இப்போது, இந்தியாவின் அடுத்த வைஸிராயாக நியமிக்கப் பெற்றுள்ளார். வரும் அக்டோபரில் வைஸிராய் பதவியை ஏற்பார்.

தளபதி வேவல் போர் வீரனக இருந்தவரையில் தலை சிறந்தவர் என்று பெயர் எடுத்துவிட்டார். இப்போது ராஜாங்க நிர்வாகியாக வருகிறார். இதிலே எப்படியோ? ஆண்டவனே அறிவார்!

★

வேஷத்துக்கு ஏற்ற ஆட்டம்

"சாதுக்களுக்குரிய காஷாய வஸ்திரத்தை ஒருவன் தரித்துக் கொண்டால், உண்மையில் ஸாதுவைப் போலவே அவன் நடந்தொழுக வேண்டும். நாடகத்தில் ராஜா வேஷம் போட்டவன் எப்போதும் ஒரு ராஜாவைப் போலவும் மந்திரி வேஷம் போட்டவன் எப்போதும் ஒரு மந்திரியைப் போலவும் நடிப்பதை நாம் பார்க்கிறோம் அல்லவா?

"ஒரு சமயம் ஒரு கிராமத்தின் விதூஷகன் ஒருவன், ஒரு சந்நியாசியைப் போல் காஷாயம் தரித்துக் கொண்டு அவ்வூர்க் கிராமாதிகாரியிடம் போனான். இவனுக்குக் கிராமாதிகாரி கொஞ்சம் பணம் கொடுக்க வந்தார். அதை இவன் வேண்டாமென்று மறுத்து விட்டு அப்பாற் போனான். சற்று நேரம் கழித்து, விதூஷகன் ஸ்நானம் செய்து உடையை மாற்றிக் கொண்டு, அதிகாரியிடம் வந்து, அவர் கொடுப்பதாக வந்த பணத்தைத் தர வேண்டுமென்று கேட்டான். ஸாது வேஷம் தரித்திருக்கையில் அவனுல் பணத்தைத் தொடக்கூட முடியவில்லை. இப்போதோ, கால் ரூபாய் கொடுத்தாலும், அவன் திருப்தியுடையவனயிருந்தான்."

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

பொருளாதார சூட்சுமம்

"ராஜாங்கம், குடும்பம், தனி மனிதன் இந்த யாருடைய பொருளாதாரமாகட்டும், தொழிலை நிர்வகிக்கும் வித்தையே யாகும். ஒரு மனிதனின் தொழில் சரியான முறையில் பிரயோகிக்கப்படுமானல், வாழ்க்கையில் அவனுக்குத் தேவையான பொருள்களும் வேறு பல இன்பப் பொருள்களும் அவனுக்கு எப்போதும் கிடைப்பதற்கேற்றவாறுதான், உலகத்தைத் தெய்வம் படைத்திருக்கிறது. ஒரு தேசத்தின் தொழில் சரியான முறையில் பிரயோகிக்கப்படுமானல் அதே போலவே தேச மக்களெல்லாம் நல்லுணவும் நல்ல குடியிருப்பும் மட்டிலுமன்றி, நல்ல கல்வியும், போகப் பொருள்களும் கலைப் பொக்கிஷங்களும் பெறுவார்கள். தேவை, துன்பம், கேவலம் இவைகளை நீங்கள் எங்கே கண்டாலும், கைத்தொழில் போதாதென்றே, அல்லது தவறுன முறையில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது என்றே நிச்சயமாய் முடிவு கட்டலாம்."

—ஜான் ரஸ்கின்.

பறித்த பூக்கள்

அவன் யாரோ : "ஒரு கிரகம் தன் வழியை விட்டு விலகிச் செல்வதை வான சாஸ்திரி கண்டான். கண்ணுக்குத் தெரியாத வேறு யாதோ ஒரு கிரகத்தின் ஆகர்ஷணமே இதன் காரணமென்று அவன் சாதித்தான். மனிதனுடைய மனமும், அதன் இயற்கையால் வாழ்க்கைக்கு விதிக்கப்பட்ட வழியை விட்டு விலகியது; அநிச்சயமான, புலன்களை மீறியதொரு பொருளை நோக்கி, அது சென்றது. இதன் பலனாகவே, ஆன்ம உலகொன்றை, மனிதன் கற்பனை செய்தான். அங்கிருந்தே தனக்குக் கட்டளைகள் பிறப்பதாகவும், தன் ஆத்மாவின் மூலஸ்தானம் அங்கேதான் இருக்கிறதென்றும், அவன் சாதிக்கலானான். அவ்வான்ம உலகின் தலைவன் யார் என்பது பற்றி, மனிதர்கள் வாதித்துச் சண்டையிடுகிறார்கள். அவன் யாவனேயாயினும் சரி, அவனுக்கு நாம் எப்பெயரிட்டழைப்பினும் சரி; மனிதன், விலங்கு வாழ்க்கையின் வரம்புகளுக்குள்ளே அடைபட்டுக் கிடக்கமட்டில் அவன் அனுமதிக்கவில்லை."

—ரவிந்திரநாத தாகூர்.

*   *

விலங்குகள் : "முழு உலகோருமே சுதந்தர வேட்கைகொண்டு நிற்கிறார்கள்; ஆயினும், ஒவ்வொரு ஜீவனும் தன்னைப் பிணிக்கும் விலங்குகளில் ஆசை கொள்கிறான். இதுவே நமது இயற்கையின் முதல் விடுகதை; புரிக்க முடியாத முடிச்சு. பிறவித் தளைகளிலே, மனிதன் ஆசை கொள்கிறான்; ஆதலால், அந்தப் பிறவியின் தோழனான மரணத் தளைகளிலும் அவன் சிக்கிக்கொள்கிறான். சக்தியிலே மனிதன் ஆசை கொள்கிறான்; அதனால் அவன் பலவீனத்துக்கு ஆளாகிறான். ஏனெனில், உலகமே பல சக்தி அலைகள் ஒன்றையொன்று மோதும் கடலாகும். ஓர் அலைமீதேறிச் சவாரி செய்யும் மனிதன், நூறலைகள் மோதி மூர்ச்சை போட வேண்டி வருகிறது. இன்பத்திலே மனிதன் ஆசை கொள்கிறான். ஆதலால், துன்பம், துயரம் என்ற நுகத்தடிகளைத் தாங்க வேண்டி வருகிறது. ஏனெனில், கலப்பற்ற ஆனந்தம், பந்தமற்று விடுதலையடைந்த நிராசையான ஆத்மாக்களுக்கே கிட்டும்."

—அரவிந்த கோஷ்.

*   *

அதர்மம் வளரும் காரணம் : சீர்கெட்ட சமூக ஒழுங்கையும் மதப்பித்தையும் எதிர்த்துக் கலகம் செய்யக்கூடிய இளைஞர்களையே, வருங்காலம் சார்ந்திருக்கிறது. நிலைமை இவ்வளவு நெருக்கடியாயிருக்கும்போது அசட்டையாயிருப்பவர்கள், கொடிய குற்றவாளிகளாவார்கள். ஜனங்களின் அசட்டையாலேயே, அநீதி வளர்கிறது. பொல்லாத எஜமான், அநியாயச் சட்டம், கேடுகெட்ட தலைவன், பொய் ஆசிரியன் இவரெல்லாம், எதிர்ப்போர் இல்லாததாலேயே வளர்கிறார்கள். நீதிமான்கள் சோம்பிக் கிடப்பதால்தான், அநியாயக்காரர்கள் ஓங்குகிறார்கள். பாதி

நிர்வாணமும் அரைப்பட்டினியு மாய்த் தவிக்கும் ஜனங்கள், உடலிலும் மனத்திலும் அனுப விக்கும் துன்பத்தின் அளவைக் கற்பனை செய்து பார்க்கும் சக்தி உங்களுக் கிருக்குமானால், நீங் கள் அசட்டையா யிருக்க மாட் டீர்கள்."

—ஸர். எஸ். ராதாகிருஷ்ணன்.

* *

நோயும் குற்றமும்: "பிளேக் நோய் பிடித்தவனை நாம் எப்படி நடத்துவோமோ அப்படியே தான், ஒரு குற்றவாளியையும் நாம் நடத்த வேண்டும். இருவ ருமே பொது ஜனங்களுக்கு அபாயமாவார்கள்; இருவர் சுதந் தரத்தையும் குறைக்க வேண்டி யதுதான். ஆனால், பிளேக் நோயாளியிடம், நாம் அனுதாப மும் இரக்கமும் காட்டுகிறோம்; குற்றவாளி யிடமோ குரோதம் கொள்கிறோம். நோய்களைக் குணம் செய்வதில் ஆஸ்பத்திரிகள் அடையும் வெற்றியைவிட, குற் றம் புரியும் ஆசைகளைப் பரிகரிப் பதில் நம் சிறைகள் அடையும் வெற்றி மிகக் குறைவாயிருப்ப தன் காரணம், இந்த வேற்றுமை தான்"

—பெர்ட்டிராண்ட் ரஸ்ஸல்.

* *

ஆரோக்கியத்தின் சாவி: "தேகாரோக்கியத்துக்குப் பல சாவிகள் உண்டு. அவை அனைத் துமே அவசியம்தான். ஆனால், அந்த எல்லாவற்றிலும் மிக முக் கியமானது பிரம்மசர்யம். தூய காற்று, தூய நீர், சுத்தமான உணவு இவை யாவும் தேகத் துக்கு ஆரோக்கியத்தை அளிக் கின்றன. ஆனால், நாம் சம்பா திக்கும் ஆரோக்கியத்தை யெல் லாம் செலவிட்டு விட்டால், எப் படி ஆரோக்கியமா யிருக்க முடி யும்? நாம் சம்பாதிக்கும் பணத் தை யெல்லாம் செலவழித்து விட் டால், 'பாப்பர்' ஆகாமல் எப் படித் தப்ப முடியும்? உண்மை யான பிரம்மசர்யத்தை, ஆணும் சரி பெண்ணும் சரி, அனுஷ்டிக் காவிட்டால், அவர்கள் ஒரு போதும் ஆரோக்கியமா யிருக்க முடியாது; இதில் சந்தேகமே யில்லை."

—மகாத்மா காந்தி.

* *

ஜீவனுள்ள பாஷை: "ஜீவ னுள்ள ஒரு பாஷை உயிர்த் துடி துடிப்பு நிறைந்திருக்கும்; சதா காலமும் மாறிக்கொண்டும் வளர்ந்து கொண்டும் இருக்கும்; பேசுவோர், எழுதுவோரின் எண்ணங்களைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கும். அதன் மூல வேர், பாமர மக்களிடமே பதிந் திருக்கும்; மேற்கிளைகள் வேண்டு மானால், ஒரு சிலரது கலைச் செல் வத்தைப் பிரதிபலிக்கலாம். இவ் வாறிருக்க, மேலேயிருந்து தீர்மா னங்கள் செய்து கட்டளைகள் பிறப்பிப்பதன் மூலம், அதை நாம் எப்படி மாற்ற முடியும்? நம் இஷ்டப்படி யெல்லாம் அதற்கு உருவங் கொடுக்கத் தான் நம்மால் எவ்விதம் இய லும்? ஜனங்களின் தொடர்பை ஒரு பாஷை இழக்குமானால், அது தன் ஜீவ சக்தியை இழந்து, செயற்கைப் பொருளாகிவிடும்; உயிரும் வலியும் இன்பமும் நிறைந்த கருவியா யிருக்க வேண் டியது போக, செத்துச் சவ மான பொருளாகி விடும். குறிப் பிட்ட திசையிலே ஒரு பாஷை யை வளர்க்கச் செய்யும் முயற்சி கள், அதைக் குரூபம் செய்து, அதன் ஜீவனைத்தான் முடிவிலே நசுக்கி விடும்."

—பண்டித ஜவஹர்லால் நேரு.

★

வில்லிக்கு அன்று அபசகுனம் போல் பொழுது விடிந்தது. அஸ்தமிக்கும் வரையில் தான் என்னென்ன அவஸ்தை!

ஒரு நாள் வாழ்வு — து. ரா.

அன்று வருஷப் பிறப்பு.

ராமச்சந்திரன் வீட்டு நாய் வில்லிக்குப் புது வருஷம் மிக்க ஏமாற்றத் துடனே ஆரம்பமாயிற்று. வில்லி தினம் காலை ஆறு மணிக்குத் தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ளுகிற வழக்கம். எழுந்து உட்கார்ந்து, இரண்டு தரம் கொட்டாவி விட்டு, முதுகை வளைத்துச் சோம்பல் முறித்துக் கொண்டபின், சடசட என்று அது காதுகளை அடித்துக்கொள்ளும் சப்தம் கேட்டு, அதைச் சங்கிலியிலிருந்து அவிழ்த்து விடுவார்கள். அந்த நேரத்தில்தான் அந்த வீட்டுக்குப் பால்காரனும் வருவான். அவன் பாலை அளந்து கொடுக்கும்போது பக்கத்தில் பரம சாதுவைப்போல் உட்கார்ந்துகொண்டு, வில்லி எல்லாவற்றையும் கவனிக்கும். பால்காரன் போகும்போது, அதற்கும் கொஞ்சம் பால் ஊற்றிவிட்டுப் போவான். பாலைக் குடித்தபின், தோட்டத்துக்குள் சென்று ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு அது திரும்புவதற்கும், அதன் எஜமான் காப்பி சாப்பிடுவதற்கும் சரியாக இருக்கும். தான் சாப்பிடுகையில், காப்பியில் அதற்கும் கொஞ்சம் ஊற்ற, அவன் தவறுவதில்லை.

ஆனல், இந்த வருஷப் பிறப்பன்று என்ன காரணத்தினலோ காரியங்கள் முற்றும் விபரீதமாக நடந்தன. உலகமே தலைகீழாய்ப் போய்விட்டது போல் தோன்றியது. அன்று வழக்கத்தைவிடப் பத்து நிமிஷம் அதிக நேரம் வில்லி தூங்கிவிட்டது. அது விழித்துக் கொள்வதற்குள் பால்காரன் வந்து போய்விட்டான். வில்லிக்கு வந்த கோபத்துக்கு எல்லையில்லை. என்ன ஐயா இது! ஒரு நாளைக்கு ஒரு பிராணி சற்று அதிகமாய்த் தூங்கிவிட்டால்தான் என்ன! அதை எழுப்பிப் பாலை ஊற்றி விட்டுப்போகத் துப்புக் கிடையாதா ஒரு மனுஷனுக்கு?

ஏமாற்றம் நிறைந்த மனத்துடன், வில்லி வீட்டு ஹாலுக்குள் விரைந்து சென்றபோது, அங்கே அதன் எஜமானையும் காணவில்லை. அன்று அந்த வீட்டில் அதற்குள் காப்பிக் கடையையும் மூடிவிட்டார்கள். எஜமான் ஸ்நான அறையில் குளித்துக் கொண்டிருந்தான். 'அந்தப்புர'த்தில் எஜமானி புதுப் புடவை உடுத்துத் தன்னை அலங்கரித்துக்



கொண்டிருந்தாள். வில்லிக்கு ஒன்றும் விளங்கவில்லை. வீட்டில் காணப்பட்ட பரபரப்பைப் பார்த்தால், என்னவோ விசேஷம் நடக்கப் போகிறது என்று மட்டும் தோன்றியது.

ஆனால், யோசிப்பதற்கு எங்கே அவகாசம்? இதோ தெருவில் ஏதோ ஒரு நாய் குரைக்கிறது. என்ன விசேஷம் என்று போய்ப் பார்த்துத்தானே ஆகவேண்டும்? நாய் ஜன்மத்துக்கு ஒய்ச்சலேது ஒழிவேது? வில்லி தனது ஏமாற்றத்தையும் மறந்து, மனதுக்குள் உறுமிக்கொண்டே, விழுந்தடித்துக்கொண்டு வெளியே ஓடியது.

ஒன்றுமில்லை. தெருக் கோடியில் இருந்த கோபாலன் வீட்டுச் சுந்தர்தான் குரைத்தது. சுந்தருக்கும் கிட்டத்தட்ட வில்லியின் வயதுதான். வில்லியின் வால் நீளமா யிருந்தது சுந்தரின் வாலையோ மொட்டையாய் வெட்டி யிருந்தார்கள். அத்துடன் அதன் நிறமும் கறுப்பு. வில்லியைப் போல் வெண்மை அல்ல. அவ்வளவுதான் வித்தியாசம்.

இல்லை; இன்னொரு வித்தியாசமும் உண்டு. சுந்தருக்குத் தன்னைப்போல் உலக அனுபவம் அவ்வளவு போதாது என்பது வில்லியின் தாழ்மையான அபிப்பிராயம். பாருங்கள்; குடுகுடுப்பாண்டியைப் பார்த்து இப்பொழுது அது குரைக்கிறதே, அதை என்னத்தைச் சொல்ல! குடுகுடுப்பாண்டியிடம் அது என்ன கண்டுவிட்டது? நாய் குரைக்க வேண்டுமானால், கேவலம் ஒரு நரிக்குறத்தியாவது தெருவோடு போகவேண்டாமா? இதை நினைக்கையில், வில்லிக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. "ஹுக்-"

என்று ஒரு தரம் தானும் சாஸ்திரத்துக்காகக் குரைத்துவிட்டு, "தெருவில் வந்ததுதான் வந்தோம்; சுந்தரைக் கண்டு இரண்டு வார்த்தை பேசிவிட்டாவது போவோமே" என்று தோன்றியதால், தெருக் கோடிக்கு ஓடிற்று.

சுந்தருக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. இவ்வளவு தூரம் வில்லி தன்னைக் காண வந்ததே என்று பெருமை. அது வாலைப் பலமாக அசைத்துக்கொண்டு, அருகே வந்து, வில்லியை யோக க்ஷேமம் விசாரித்தது.

"என்ன விசேஷம்?"

"ஒன்றுமில்லை; வெறுமனே தான். இந்தப் பக்கம் என்னவோ புதிய வாசனை வருகிறாப் போல் இருந்தது. பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்."

சுந்தர் மூக்கை மேலே உயர்த்தி இரண்டு மூச்சு இழுத்தது.

"புது வாசனை ஒன்றும் காணேமே. பிஸ்கோத்தும் காப்பியும்தான் சாப்பிட்டு வந்தேன்."

இதைக் கேட்டதும் வில்லிக்கு முதலில் பொறாமை உண்டாயிற்று. பிறகு, "பழையது வாசனை அடிக்கிறது. பிஸ்கோத்தும் காப்பியுமாம்! ஜம்பத்தைப் பார்" என்று அது தன் மனதைத் தேற்றிக்கொண்டபோது, "நேற்றுத்தான் எங்கள் வீட்டில் என்னவோ புதுசாகப் பண்ணியிருந்தார்கள். உங்கள் வீட்டுக்குக் கூட வாசனை வந்திருக்குமே?" என்று கேட்டது சுந்தர்.

"நேற்று மத்தியானமா? நான் அப்போது வீட்டிலில்லை. அவசர

ஜோலியாக வெளியே போயிருந்தேன். டும் டும் என்று அடித்துக்கொண்டு ஒரு பெருமாள் மாட்டுக்காரன் வந்தானே, அவன் பின்னுல் குரைத்துக்கொண்டே கடைத் தெரு வரையில் அவனைக் கொண்டுபோய் விட்டுவர வேண்டியிருந்தது. நான்கூட நினைத்தேன், உன்னைக் காணேமே என்று. இப்போது தான் தெரிகிறது நீ புது வாசனையில் முழுகிப்போயிருந்தாய் என்பது." ...

சுந்தர் தற்பெருமை தோன்ற உடலை அசைத்துக்கொண்டு, தன் மொட்டை வாலை ஆட்டிற்று: "அது என்ன என்று கேட்கவில்லையே? ஐஸ்கிரீமாம்! தட்டிலே கொஞ்சம் வைத்தார்கள். வாயை வைத்தால் சுரீர் என்றது. ஆறட்டும் என்று சிறிது நேரம் உட்கார்ந்திருந்த பின் பார்த்தால், தட்டில் ஒன்றையும் காணேம்!"

லில்லிக்கு நாக்கில் ஜலம் ஊறியது: "அதென்னப்பா அது! வேடிக்கையாய் இருக்கிறதே!" என்றது ஆச்சரியத்துடன்.

அப்பொழுது கோபால மேனனின் வீட்டிலிருந்து யாரோ, "சுந்தர்! வா இங்கே! கண்ட தெரு நாயோடெல்லாம் உறவு கொண்டாடவாவது! வா இங்கே" என்று அதட்டினுர்கள். அவ்வளவுதான்; சுந்தர் வாலை ஒடுக்கிக்கொண்டு உள்ளே ஓடிப் போயிற்று.

லில்லி திரும்பி வீட்டுக்கு வந்தபோது, ஏமாற்றத்தின்மேல் ஏமாற்றம்! எஜமானையும், எஜமானியையும் எங்கேயும் காணவில்லை. அவர்கள் வாசனையையே வீட்டில் காணேம். சமையல்கார வைத்தா, வேலைக்காரி வள்ளியுடன் பேசிக்கொண்டிருந்ததைக் கவனித்ததில், அவர்கள் வருஷப் பிறப்புக்காக அடுத்த தெருவில் உள்ள எஜமானியின் பிறந்த வீட்டுக்குப் போய்விட்டார்கள் என்ற விஷயம் வெளியாயிற்று.

லில்லிக்கு இந்த உலகத்தின் மேல் வெறுப்புத் தோன்றியதில் ஆச்சரியமில்லை. என்ன உலகம்! என்ன மனித ஜன்மம்! எங்கேயாவது போனல்தான் என்ன; தன்னிடம் சொல்லிக்கொண்டு போனல் குறைந்தா போய்விடுவார்கள்? வீட்டில் ஒரு பிராணி இருக்கிறதே என்று சிறிதாவது நினைத்தார்களா?

எப்பொழுதுமே சமையல்கார வைத்தா வீட்டில் இருப்பதும் இல்லாததும் ஒன்றுதான்-லில்லியைப் பொறுத்தவரையில். இன்று வேறு ஒருவரும் இல்லாததால், சொல்லவேண்டியதில்லை. வீட்டில் அவன் ராஜ்யந்தான். சமையல் அறையில் தயிரையும் வெண்ணெயையும் எடுத்து விழுங்குவதிலும், தனக்கென்று ஸ்பெஷலாக டிபனும் காப்பியும் தயாரிப்பதிலும் அவன் முனைந்திருந்தபடியால், லில்லியைக் கவனிப்பார் எவரும் இல்லை.

லில்லி சமையல் அறைக்கு வெளியே போய் நின்று, "ஊம், ஊம்" என்று இரண்டு தரம் கத்திற்று. வெங்காயம் நறுக்கிக்கொண்டிருந்த வைத்தா, கோபத்தோடு திரும்பிப் பார்த்தான். "எஜமான் எங்கே? எஜமானி எங்கே?" என்று லில்லி தன் பாஷையில் கேட்டதை அவன் தவருக அர்த்தம் செய்து கொண்டான். வைத்தா எப்பொழுதுமே புத்திசாலித்தனத்துக்கு அவ்வளவு பெயர் போனவன் அல்ல. தான் பண்ணிக்கொண்

டிருந்த உப்புமாவின் வாசனையை அறிந்துகொண்டு அதற்காகத் தான் வந்து ஆட்டம்போடுகிறது என்று நினைத்து, அவன், "சீ போ, கழுதை! ஓடு வெளியே!" என்று அதட்டியபடி, பக்கத்தி லிருந்த கறிகாய்க் கூடையில் இருந்து அழுகிப்போன ஓர் உரு ளைக் கிழங்கை எடுத்து அதன் மேல் கோபத்தோடு வீசி னான்.

உடம்பை வளைத்துக்கொடுத்து, அந்த அடி மேலே படாமல் தப் பித்துக்கொண்டு, தோட்டத்துக் குச் சென்று, மனச் சோர்வுடன் மரத்து நிழலில் படுத்துக்கொண் டது வில்லி. வைத்தா தன்னை அடிக்க முயன்றதைக்கூட அது பொருட்படுத்தவில்லை. தன்னைப் பார்த்துக் 'கழுதை' என்று அவன் திட்டியதைத்தான், அத னல் சகிக்க முடியவில்லை. காலை யில் எழுந்ததிலிருந்து இதற்குள் இரண்டு இடத்தில் திட்டுக் கேட் கும் துரதிர்ஷ்டம் வில்லியின் மூன்று வருஷ வாழ்க்கையில் இதற்கு முன் நேர்ந்ததில்லை. தெருவில் போனல், சுந்தர் வீட் டில் யாரோ அதைத் 'தெரு நாய்' என்றார்கள். இப்பொழுது அதன் வீட்டிலேயே வைத்தா அதைக் கழுதை என்று திட்டி விட்டான். மனித ஜாதிக்குள் கழுதை என்ற வசவுதான் மிக வும் சாதாரணமானது. சில சம யங்களில் அதுவே புகழ்ச்சிக்கும் கொஞ்சலுக்கும்கூட உபயோ கப்படுவதுண்டு. கணவன் மனை வியைப் பார்த்து "அசட்டுக் கழுதை!" என்று சொல்லிவிட் டால் போதும்; அவள் வாயெல் லாம் பல்லாய்ப் போய்விடும். ஆனல், சுயமரியாதையுள்ள ஒரு நாயைப் பார்த்துக் கழுதை என்றால், அதன் மனம் கேட் குமா?

நடுப் பகல் பன்னிரண்டு மணி இருக்கும். வைத்தா தட்டில் சோற்றைப் பிசைந்து வைத்துக் கொண்டு, "வில்லி! வில்லி!" என்று கூப்பிட்டான். ஆனல், வில்லி ஏன் இடத்தை விட்டு அசைகிறது? காதை உயர்த்தி அவன் கூப்பிடுவதைக் கேட்டு விட்டுத் தனக்கும் அதற்கும் சம் பந்தம் இல்லாததுபோல் அலட் சிய பாவத்துடன் படுத்துக் கிடந்தது.

"ஏ கழுதை! உன்னைத்தான் கூப்பிடுகிறேன். சோறு வேண்டி யிருக்கலையா?" என்று கேட்டு, வைத்தா அதற்குமேல் காத்திரா மல் சோற்றைக் கிணற்றடியில் ஸிமெண்ட் தரையின் மேல் கொட்டிவிட்டு, "இந்தா! தின்று தொலை!" என்று அலட்சிய மாய்ச் சொல்லிக்கொண்டே உள்ளே போய்விட்டான்.

வில்லி எழுந்திருக்க வில்லை. படுத்தபடியே மூக்கை உறிஞ்சி வாசனை பார்த்தது. ஆனல். கிணற்றடியில் சோறு கிடந்தால், காக்கைக் கூட்டங்கள் சும்மா இருக்குமா?

உயரத்தில் தென்னை மரத்தில் உட்கார்ந்திருந்த ஒரு காக்கை யின் திருஷ்டி சோற்றின்மேல் விழுந்தது. அங்கிருந்தபடியே அது "கா! கா!" என்று கூவித் தன் சகாக்களை அழைக்கவே, ஒவ் வொன்றாய் இன்னும் ஐந்தாறு காக்கைகள் எங்கிருந்தோ வந்து சேர்ந்தன. "கா! கா!" என்று சிறிது நேரம் தோட்டத்தில் ஏகக் கூச்சல். 'யார் கீழே இறங்கி வந்து முதலில் சாப்பிடு வது?' என்ற பிரச்னை விவாதத் துக்கு எடுத்துக்கொள்ளப்பட் டிருந்ததாகத் தோன்றியது.

கடைசியில் ஒரு காக்கை எப் படியோ தைரியத்தை வரவழைத்

துக்கொண்டு, கீழே வந்து உட்கார்ந்து, அங்கிருந்து உல்லாசமாக நடைபோட்டுக்கொண்டே சென்று, சாப்பாட்டில் மூக்கை வைத்தது.

தூங்குவதுபோல் பாவனை செய்துகொண்டு எல்லாவற்றையும் ஒற்றைக் கண்ணால் கவனித்துக்கொண்டிருந்த வில்லி, அதற்குமேல் சும்மா இருக்குமா? தான் சாப்பிடாவிட்டாலும் சாதத்தைக் காக்கைள் தின்னும் படி விட அதற்குப் பைத்தியமா என்ன? 'உர்ர்ர்' என்று ஒரு பயங்கரமான உறுமலுடன், வில்லி ஒரே பாய்ச்சலில் கிணற்றருகில் வந்து அந்தக் காக்கையைத் துரத்திற்று.

'க்ர்! கா! கா!' என்று மறுபடி ஒரே கூச்சல். காக்கைகளுக்கும், வில்லிக்கும் ஐந்து நிமிஷம் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

"சாதம் சும்மாத்தானே கிடக்கிறது? நாங்கள் தின்றால் என்ன?"

"சாதம் கிணற்றடியில் வந்து சும்மாக் கிடக்குமா? எனக்குப் போட்ட சாதம் அது. தெரியுமா?"

"நீதான் சாப்பிடவில்லையே. நாங்களாவது சாப்பிடுகிறோமே?"

"நான் சாப்பிடாவிட்டால், நீங்கள் சாப்பிடவேண்டுமென்று எந்தச் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது?"

இந்த வாதம் அவ்வளவு நியாயமானதாக அந்த அசட்டுக் காக்கைகளுக்குத் தோன்றாதபடியால், அவை பின்வாங்க மறுத்தன. வில்லி ஒரு காக்கையைத் துரத்திக்கொண்டு போகையில், இன்னொரு பக்கத்திலிருந்து இரண்டு காக்கைகள் வந்து சாதத்தைக் கொத்திக்கொண்டு போய்விடும். இவ்விதம் கால் மணிநேரம் ஓயாத போர் நடந்து, வில்லிக்குக் களைப்புத் தோன்றுவதற்குள் சாதம் முழுவதும் காலியாகிவிட்டது.

ஏமாற்றத்துடன் வில்லி முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு, "ஒரு தூக்கம் போடலாமா?" என்று யோசித்தபடி உட்கார்ந்திருந்தபோது, வைத்தா சமையல் பாத்திரங்களைக் கொண்டுவந்து தேய்ப்பதற்காகப் போட்டுவிட்டு, "சோத்தைத் தின்னுச்சா? ஒரு பருக்கை பாக்கி விடலையே! இரண்டாள் சோறு வேண்டும் உனக்கு. இங்கே யாரால் இருக்கு உனக்குப் போட?" என்று முணுமுணுத்துக்கொண்டே, மறுபடியும் உள்ளே சென்றான்.

பாவம்! இந்த மாதிரி அவதூறைக் கேட்டால் எந்தப் பிராணிக்குத்தான் வயிற்றைப் பற்றிக்கொண்டு எரியாது? வில்லிக்கு வயிற்றைக் கிண்டியது. ஆத்திரத்துடன் எழுந்து, கிணற்றடியில் தேங்கியிருந்த ஜலத்தை 'மளக் மளக்' என்று வயிறு நிறையக் குடித்துவிட்டு, வீட்டுக்கு வெளியே ஓடிப்போயிற்று.

சாயங்காலம் ஐந்து மணிக்கு வீட்டு எஜமானியும் எஜமானும் திரும்பி வந்தபோதும், வில்லியைக் காணவில்லை. இருட்டுகிற சமயத்தில், பெரிய குற்றவாளியைப்போல் ஒருவர் கண்ணிலும் படாமல் மெதுவாக வீட்டுக்குள் வந்து ஹாலில் போட்டிருந்த சோபாவின் கீழ் அது படுத்துக்கொண்டதைப் பார்த்ததும், எஜமானி பாலுஞ் சாதம் பிசைந்து தட்டில் வைத்துக்

கொண்டு, "வில்லி!" என்று அழைத்தாள். வில்லி அரை மனதுடன் எழுந்திருந்து சாப்பிடாமல் நின்றது. தன்னிடம் சொல்லிக்கொள்ளாமல் காலையில் இவர்கள் போனதற்காக ஓர் ஆறுதல் வார்த்தையாவது வருகிறதா பார்ப்போமே என்ற யோசனையோ என்னவோ!

"ஏண்டா கண்ணு, சாப்பிடேன். உனக்குத்தான்" என்று கொஞ்சத் தொடங்கிய எஜமானி, அதன் கருவிழிகளின் ஓரத்தில் படிந்திருந்த கண்ணீர்க் கரையைப் பார்த்துவிட்டு, "ஐயோ! அழுதிருக்கே வில்லி! சாதத்தைத் தொடமாட்டேன் என்கிறதே. இங்கே பாருங்களேன்!" என்று கணவனை அழைத்தாள்.

"உடம்பு சரியாய் இல்லையோ என்னவோ? நாளைக்குக் கோவிந்தசாமியுடன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விளக்கெண்ணெய் புகட்டச் சொல்லலாம். நாளாச்சு" என்றான் எஜமான்.

அவ்வளவுதான். வில்லிக்கு மனதில் திக்கென்றது. 'லபக் லபக்' என்று இரண்டே வாயில் சாதத்தை அள்ளித் தின்றுவிட்டு, ஆவேசத்துடன் எஜமானியின் மேல் தாவி, வாலைப் பலமாக ஆட்டிக்கொண்டே, அவள் முகத்தை நக்கிக் கொடுத்தது.

"தெரியுமே எனக்கு! கிட்ட வா நாயே என்றால்—" என்று அதட்டியபடி அவள் அதன் முகத்தைத் தூர விலக்கி, ஆர்வத்துடன் முதுகைத் தடவிக்கொடுத்தாள்.

வில்லிக்கு உச்சி குளிர்ந்தது. அன்று அடைந்த ஏமாற்றத்தின் ஞாபகம் எல்லாம் எங்கேயோ போய்விட்டது. பாவம்! நாய் ஜன்மம்தானே?

★

தேநீரின் பெருமை

விமானப் படை யெடுப்பு எச்சரிக்கைப் பயிற்சி ஒரு நகரில் நடைபெற்றது. விமானப் படை யெடுப்பில் காயமடைந்தவள் போல் ஒரு சிறுமியை நடிக்கச் செய்தார்கள். அந்த நடிப்பு முடிந்ததும், அவள் களைப்பாயிருந்தாள். அந்தக் களைப்புத் தீர்வதற்காக, சிறுமிக்கு ஒரு கோப்பை தேநீர் கொடுத்தார்கள். அதைக் குடித்த உடனே, அவள் ஆயாசம் தீர்ந்து, உற்சாகம் அடைந்து, ஓர் உத்தியோகஸ்தரிடம் குதித்தோடிச் சென்று, "நான் இன்னுமொரு தடவை, காயமடைந்தவளாய் நடிக்கட்டுமா?" என்று கேட்டாள்.

ஆச்சர்யமடைந்த அதிகாரி, "என்ன விஷயம்? மறுபடியும் தேநீர் கிடைக்குமென்ற ஆசையா?" என்று கேட்டார்.

"ஆமாம், அது மாத்திரமல்ல; நீங்கள் கொடுத்த தேநீரில் சர்க்கரை போட்டிருக்கிறீர்கள். வீட்டிலே அம்மா கொடுக்கும் தேநீரிலோ சர்க்கரை கிடையாது" என்றாள் சிறுமி.

ஒரு சந்தேகம்

ஒருவர் கேட்டார்: "போலந்திலே பிஸ்ஸிஸ்ஜிக்ஸிகிஸ்கிஸ்கி என்ற நகரம் பூராவையும், ஒரு பூகம்பம் வந்து அழித்து விடுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது என்னாகும் என்று நீ நினைக்கிறாய்?"

மறு நண்பர்: "அதிருக்கட்டும். முதலில் ஒரு சந்தேகம். அந்த நகரத்தின் இந்தப் பெயர், பூகம்பத்துக்கு முன்னால் இருந்ததா, அல்லது பின்னால் இப்படியாயிற்றா?"

தமிழ்ப் பண்ணை புதிய வெளியீடுகள்

அறிஞர் வ. ரா. எழுதிய

தமிழ்ப் பெரியார்கள்

★

ஏ. கே. செட்டியார் எழுதிய

திரையும் வாழ்வும்

★

தமிழ்ப் பண்ணை
தியாகராயநகர் — சென்னை

நாகரீகமுள்ள
ஆடைகளுக்கு
S.R.B. குப்புசாமி அய்யர் & ஸன்
FORMERLY
S.R. பாலுசாமி அய்யர்
83, நைனியப்ப நாயக்கன் தெரு
(போன் 3506) P.T. மதறஸ்,
230, கீழமாரெட் வீதி,
(போன் 36) மதுரை.

நீர் வீழ்ச்சி

ஊழி முடிந்திடும்
ஓசை எழுந்திட
உலகு நடுங்கிடவே
ஆழி கவிழ்ந்தது
போல விழுந்திடும்
அருவி யிதற் பூதமே!

சிதறிய திவலைகள்
சிவனுடை கண்பொறி
சினந்ததுபோல் எழுமே
அதிரும் இசைக் கழல்
அன்னையின் கூத்தென
ஆடிவரும் புனலே.

—'சிட்டி'

பல வித ஆட்சி முறைகள்

வெ. சாமிநாத சர்மா

ஆள்வோர், ஒருவராகவே அல்லது சிலராகவே எப்படியிருந்தபோதிலும், அவர்களுக்கும் ஜனங்களுக்கும் ஏதோ ஒரு வித சம்பந்தம் இருந்து கொண்டே யிருக்கிறது. இந்தச் சம்பந்தத்திற்கே ஆட்சி முறை என்று பெயர். ஆளும் முறையைப்பற்றிக் கூறுவதற்கே ஆட்சி முறை யென்று பெயராயினும், ஆட்படும் முறையும் இதில் அடங்கி யிருக்கிறது. ஏனென்றால், ஆட்படுவோர் இல்லாமல் ஆளுகை இல்லை. ஆளுந் தன்மையையும் ஆட்படுந் தன்மையையும் பொருத்திக் காட்டுவதுதான் ஆட்சி முறை. இரண்டுக்கும் உரிமைகளுண்டு, கடமைகளுமுண்டு.

இந்த ஆட்சி முறையைப் பல விதமாகப் பகுத்துக் கூறுவர் அறிஞர். நாம் இங்கே பொதுவாக மூன்று பிரிவாக வகுத்துக் காட்ட விரும்புகிறோம். இவை முறையே (1) ஒருவர் ஆட்சி (2) ஒரு சிலர் ஆட்சி (3) பலர் ஆட்சி என்பனவாகும். நவீன அரசியல் பரிபாஷையினால் அழைக்கப்படுகின்ற எல்லாவித ஆட்சி முறைகளும், இந்த மூன்று பெரும் பகுதிகளிலே அடங்கும். நாஜிஸம், பாசிஸம், கம்யூனிஸம் முதலிய 'இஸம்'களும், டெமாக்ரஸி, அரிஸ்டாக்ரஸி, தியாக்ரஸி முதலிய 'க்ரஸி'களும், மானார்க்கி, ஆலிகார்க்கி முதலிய 'அர்க்கி'களும் எல்லாம் இந்த மூன்று பெரும் பகுதிகளின் கிளைகளே.

கி. பி. பதினெட்டாவது நூற்றாண்டுவரையில் கீழ் நாட்டிலேயாகட்டும்,மேல்நாட்டிலேயாகட்டும், ஒருவர் ஆட்சி முறைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பெற்று வந்தது. வேறு பலவித ஆட்சி முறைகள் அவ்வப்பொழுது தோன்றியும் மறைந்தும், ஓங்கியும் ஒடுங்கியும் வந்தபோதிலும், அனைத்திற்கும் மையமாயிருந்தது ஒருவர் ஆட்சி முறையே. பின்னரே, அதாவது விஞ்ஞான அபிவிருத்தியின் காரணமாக இடம், காலம் முதலியன சுருங்கத் தொடங்கின பிறகு, ஒருவருடைய ஆட்சிக்கு மகத்துவம் போய்விட்டது; பலருடைய ஆட்சிக்கு மகத்துவம் ஏற்பட்டது. இந்தப் பலருடைய ஆட்சிக்கு மகத்துவமும் முக்கியத்துவமும் கொடுத்தவன் ரூஸ்ஸோ என்ற பிரெஞ்சு அறிஞன். ஜன சக்தி புனித முடையது என்ற இவனுடைய கோட்பாடானது, இவன் காலத்திலே பரிகசிக்கப்பட்டது; இவனும் பல துன்பங்களுக்கு ஆளானான். ஆனால், இவன் இறந்த சில வருஷங்களுக்குள் பிரெஞ்சுப் புரட்சி கிளம்பி, ஒருவர் ஆட்சி முறையை அசைத்துக் கொடுத்து விட்டது.

ரூஸ்ஸோவுக்கு முன்னே தோன்றிய அரசியல் பண்டிதர்கள்

'அரசன் ஒருவன்; குடிகள் பலர்' என்ற கொள்கை வெகு காலம் நிலவி வந்தது. அரசனின் அதிகாரத்தைச் சில பிரபுக்கள் சேர்ந்து கைப்பற்றிக் கொண்டனர் பிற்காலத்திலே. ஜனப் பிரதிநிதிகளே ஆட்சிபுரிய வேண்டுமென்ற தத்துவமும் தோன்றியது அதன் பின்னே. இந்த மூவகை ஆட்சிகளுக்குள்ளே பல கிளைகளும் அடங்குமென்று விளக்குகிறார் அன்பர் சர்மா.

பலரும், ஒருவர் ஆட்சி முறையை ஆதரித்தே தங்கள் அரசியல் சித்தாந்தங்களை வகுத்திருக்கிறார்கள். தாந்தே என்ன, மாக்கியவெல்லி என்ன, லாக் என்ன, ஹாப்ஸ் என்ன இப்படிப்பட்ட பலரும் ஒருவர் ஆட்சியை மன்னராட்சி என்று அழைத்து அதனையே வலம் வந்திருக்கிறார்கள். இந்தியாவிலே கூட, சுக்ராச்சாரியார், கௌடில்யர், திருவள்ளுவர் முதலியவர்கள், ஒருவனாலேயே ஜனங்கள் ஆளப்பட வேண்டுமென்ற கோட்பாட்டை அஸ்திவாரமாகக் கொண்டே தங்கள் அரசியல் நீதிகளை வகுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். எனவே, குடியாட்சி என்றும் ஜனநாயகம் என்றும் இப்பொழுதைய பாஷையில் அழைக்கப்படுகின்ற பலர் ஆட்சி என்பது, ஏறக்குறைய இருநூறு வருஷத்திற்கு முந்தித் தோன்றியதே யாகும்.

ஆதியில் ஒருவருடைய ஆட்சி நிலவி யிருந்ததாகவும், இடைக்காலத்தில் அதுவே சிலருடைய ஆட்சியாக மாறியதாகவும், பிற்காலத்தில், இந்தச் சிலருடைய ஆட்சி, பலருடைய ஆட்சியாகப் பரிணமித்து விட்டதென்றும் சொல்வது அரசியல் மரபு. அரிஸ்டாட்டல் சொல்கிறான்: "ஆரம்பத்தில் சிறிய சிறிய ராஜ்யங்கள் இருந்தன. இவைகளை அரசர்கள் ஆண்டுவந்தார்கள். ஏனென்றால், திறமையுள்ள மேலான மனிதர், அதிகமான பேராக அகப்படுவது அருமையா யிருந்தது. பின்னர், திறமைசாலிகள் பலர் தோன்றத் தலைப்பட்டனர்; ராஜ்ய நிருவாகத்தில் பங்கெடுத்துக் கொள்ளவும் தொடங்கினர். இதனால், அறிஞர் சிலர் சேர்ந்து நடத்துகிற ஆட்சி முறை ஏற்பட்டது. இந்தச் சிலரில் சிலர் பொதுநலத்தை நாடாமல் சுயநலத்தை நாட ஆரம்பித்ததும், தேசத்தின் செல்வம், செல்வாக்கு எல்லாம் இந்தச் சிலரைப் போயடைந்தன. இவர்கள், கொடுங் கோலர்களா யிருந்து, ராஜ்யத்தை ஆட்டி வைத்தார்கள். ஜனங்கள், இதைச் சகித்துக் கொண்டிருக்க முடியாமல், எதிர்ப்பாகக் கிளம்பினார்கள்; ராஜ்ய நிருவாகத்தில் பங்கு கோரினார்கள். ஜன ஆட்சி ஸ்தாபிதமாயிற்று. இதுவே பலர் ஆட்சி.

ஒருவர் ஆட்சி, சிலர் ஆட்சி, பலர் ஆட்சி ஆகிய மூன்றுவித ஆட்சி முறைகளுக்கும் முறையே ஹாப்ஸ் என்ற அறிஞன் பின்வருமாறு வியாக்யானம் கூறுகிறான்: "ராஜ்யத்தின் சர்வ அதிகாரங்களும் ஒருவனிடத்தில் ஒப்படைக்கப்பட்டால், அதற்கு மன்னராட்சி என்று பெயர். சர்வ அதிகாரங்களும் ஒரு சபையினிடத்திலே ஒப்படைக்கப்பட்டு, அந்தச் சபையில் எல்லாப் பிரஜைகளுக்கும் ஓட்டுரிமை இருக்குமானால், அதற்கு ஜனநாயக ஆட்சி யென்று பெயர். ராஜ்ய நிருவாகத்தை நடத்தும் மேற்படி சபையில் ஒரு சிலருக்கு மட்டுமே ஓட்டுரிமை இருக்குமானல், அதற்குப் பிரபுத்துவ ஆட்சி என்று பெயர்."

மேலே சொன்ன மூன்றுவித ஆட்சி முறைகளில் ஏதேனும் ஒன்றுதான் ஒரு நாட்டில் ஒரு காலத்தில் இருக்கமுடியும். ஜனங்களுடைய பக்குவத்திற்குத் தகுந்தபடி, ஓர் ஆட்சிமுறை போய் மற்றோர் ஆட்சிமுறை ஏற்படுதல் இயல்பு. ஆனால், ஒரே சமயத்தில் ஒரு ராஜ்யத்தில் பலவித ஆட்சிமுறைகளும் சேர்ந்து நிருவாகத்தை நடத்த முடியாது. அப்படிப் பல தினுசு ஆட்சி முறைகளும் கலந்திருக்குமானல் அது ஆட்சிமுறையல்ல; குழப்ப

நிலைமை. இந்தக் குழப்பநிலைமையி லிருந்து ஒரு தெளிவான ஆட்சி முறை, எப்பொழுதாவது உண்டாகவே வேண்டும். குழப்ப நிலைமையோ, கலப்பு ஆட்சி முறையோ நீடித்திருக்க முடியாது.

ஆனால், கலப்பு ஆட்சிமுறை ஒரு ராஜ்யத்தில் ஸ்திரமாக இருந்து கொண்டிருக்க முடியு மென்று அநேக அரசியல் அறிஞர்கள் சாதித் திருக்கிறார்கள். இவர்களிலே தலைசிறந்தவன் அரிஸ்டாட்டல். இவன், தனது அரசியல் என்ற நூலில், முற்காலத்தில் கிரேக்க, ரோம சாம்ராஜ்யங்கள் பலவற்றுள்ளும் கலப்பு ஆட்சி முறைகள் ஒரே காலத்தில் இருந்தனவென்று ஆதார பூர்வமாக எடுத்துக் காட்டுகிறான். இவையெல்லாம் பழைய விஷயங்கள் என்று ஒதுக்கித் தள்ளிவிட்டாலும், இப்பொழுது இங்கிலாந்திலே நடைபெறுகிற ஆட்சி முறையானது, கலப்பு ஆட்சி முறையென்று மேற்படி கட்சியினர் கூறுகின்றனர். எப்படி என்றால், இங்கிலாந்திலே அரசர் இருக்கிறார்; பிரபுக்கள் சபையிருக்கிறது; ஜனப் பிரதிநிதிகள் அடங்கிய காமன்ஸ் சபை இருக்கிறது. இந்த மூவரும் சேர்ந்துதான் அரசியல் நிருவாகத்தை நடத்துகின்றனர். இதனால்அங்கே மன்னராட்சியும், பிரபுத்துவ ஆட்சியும், ஜன ஆட்சியும் ஒரே சமயத்தில் ஒழுங்காக நடைபெறுகின்றனவென்று சொல்லுகின்றனர். ஆனால், இந்த முடிவைப் பலர் ஒப்புக்கொள்வதில்லை. மேலே சொன்ன மூன்றுபேரும், அரசியல் நிருவாகத்தில் பங்கெடுத்துக்கொள்கிறார்களென்று சொன்னால், அது பெயரளவுக்குத்தான். உண்மையில் அரச அதிகாரம், காமன்ஸ் சபையினிடத்திலேதான் இருக்கிறது. அரசர் ஒருவர் இருக்கிறார் என்று சொன்னாலும், அவர் மேற்படி காமன்ஸ் சபை செய்கிற முடிவுக்குக் கட்டுப்பட்டவரே.

சமீபத்தில் எட்டாவது எட்வர்ட் மன்னர் முடிதுறந்ததற்குக் காரணம் என்ன வென்பதைப் பற்றி நாம் சிறிது யோசித்துப் பார்த்தோமானால், காமன்ஸ் சபையின் உண்மையான சக்தி புலனாகும். இந்தக் காமன்ஸ் சபையிலே உள்ள அங்கத்தினர்கள் உண்மையான ஜனப் பிரதிநிதிகள் அல்ல என்றும், ஜனங்களின் உண்மையான அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்லுகிறவர்களில்லை யென்றும் கூறலாம். இது உண்மையாக இருக்கக்கூடும். ஆனால், இப்படிச் சொல்வது காமன்ஸ் சபையின் பிரதிநிதித்துவத்தில் உள்ள குறைபாடுகளை எடுத்துக் காட்டுவதாக இருக்குமே தவிர, அதனுடைய பிரதிநிதித்துவ சக்தியைக் கண்டித்ததாக ஆகாது. இங்ஙனமே, பாசிஸ நாடுகள் சிலவற்றுள், பெயரளவுக்குப் பார்லிமெண்ட் என்றும் ஜன சபை யென்றும் இருக்கின்றன. இவை சம்பிரதாயமாகக் கூடிக் கலைகின்றன. ஆனால், இங்கே ஒரு தனி மனிதருடைய ஆட்சியே நடைபெறுகிறது. ஜனசபையின் அபிப்பிராயங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு அந்தத் தனி மனிதர் காரியங்களை நடத்துதல் கூடும். இப்படிப்பட்ட நாடுகளில் ஒருவருடைய ஆட்சியும் பலருடைய ஆட்சியும் கலந்து நடைபெறுகின்றன என்று சொல்ல முடியுமா? முடியாது. ஒரு மனிதருடைய சர்வாதிகாரமே நிலவுகிற தென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

இந்தக் கலப்பு ஆட்சிமுறை, எப்படிச் சாத்தியமற்ற தென்பதைப்பற்றி ஜி. சி. லூயிஸ் என்ற ஓர் அரசியல் பண்டிதன் கூறுவது இங்கே குறிப்பிடத்தக்கது: "மன்னராட்சி என்பது ஒருவருடைய ஆட்சி; பிரபுத்துவ ஆட்சி யென்பது, ஒருவருக்கு மேற்பட்ட சிலருடைய ஆட்சி. எனவே, ஒரு ராஜ்யத்தை ஒரே சமயத்தில் ஒருவரும் சிலருமாகச் சேர்ந்து ஆள முடியாது; அதாவது மன்னராட்சியாகவும் பிரபுத்துவ ஆட்சியாகவும் ஒரே காலத்தில் இருக்க முடியாது. பிரபுத்துவ ஆட்சி முறையில் சமுதாயத்தைச் சேர்ந்த அரைவாசிப் பேருக்குக் குறைந்தவர், நிருவாகத்தில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். ஜன ஆட்சியின் கீழ், ஜனங்களில் பாதிப் பேருக்கு மேல்பட்டவர் நிருவாகத்தில் கலந்துகொள்ள வேண்டும். எனவே, ஒரு ராஜ்யத்தில், பாதிப் பேருக்குக் குறைவானவரும் பாதிப்பேருக்கு அதிகமானவரும் ஒரே சமயத்தில் ஆட்சி செய்ய முடியாது. சிறுபான்மையோருடைய ஆட்சியும் பெரும்பான்மையோருடைய ஆட்சியும் ஒரே சமயத்தில் நிலவமுடியுமா?"

இனி, ஒருவர் ஆட்சி, சிலர் ஆட்சி, பலர் ஆட்சி ஆகிய மூன்று விதமான ஆட்சிமுறைகளும், முற்காலத்திலாகட்டும், இப்பொழுதாகட்டும், என்னென்ன விதமான தோற்றங்கள் அளித்தன, அளிக்கின்றன என்பதைச் சிறிது கவனிப்போம்.

ஒருவர் ஆட்சி: மன்னர் ஆட்சி அல்லது கோனாட்சி, முடியாட்சி அல்லது குடிக்கோனாட்சி, சர்வாதிகார ஆட்சி அல்லது சுயேச்சாதிகார ஆட்சி முதலியன. அதாவது, இந்த ஆட்சி முறைகளிலே மையமா யிருக்கப்பட்டவன் ஒருவன்தான். இவன், தன்னொருவன் பெயரைச் சொல்லிக் கொண்டு ஆளலாம், அல்லது ஜனங்களுடைய பெயரைச் சொல்லிக்கொண்டு ஆளலாம். எப்படி யிருந்தபோதிலும், ராஜ்யத்தின் அதிகார சக்திகள் யாவும் இந்த ஒருவனிடத்தி லிருந்தே உதிக்கின்றன; இந்த ஒருவனிடத்திலே சென்று அடைகின்றன. இந்தச் சக்திகளை ஜனங்களுடைய நன்மைக்காக உபயோகப் படுத்துகிற பொழுது, முடியாட்சி என்றும், குடிக்கோனாட்சி யென்றும் பலவிதப் பெயர்களிட்டு அழைக்கிறோம்; தன்னலத்திற்காக உபயோகிக்கிற பொழுது கொடுங்கோலாட்சி என்றும் சுயேச்சாதிகார ஆட்சி என்றும் சர்வாதிகார ஆட்சி யென்றும் பலவிதமாகச் சொல்கிறோம்.

சிலர் ஆட்சி: இதுவே, பிரபுத்துவ ஆட்சி யென்றும், நிலச்சுவான்தார் ஆட்சி யென்றும், முதலாளிகள் ஆட்சி யென்றும், புரோகிதர் ஆட்சி யென்றும், பல தோற்றங்க ளடைகின்றன. பிளேட்டோ என்ற கிரேக்க அறிஞன், ஆளுங் கலையிலே பயின்ற ஒரு கூட்டத்தார் நிருவாக யந்திரத்தை நடத்திச் செல்ல வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறான். இவர்கள், அறிவும் அன்பும் அநுபவமு முடைய ஞானிகளாய் இருக்கவேண்டு மென்றும், இவர்களால்தான் நாட்டுக்கு நலம் செய்ய முடியுமென்றும் கூறுகிறான். இவர்களுடைய ஆட்சி, சிலர் ஆட்சியின் பாற்படும்.

பலர் ஆட்சி: ஜன ஆட்சி, ஜன நாயகம், குடியரசு முதலிய யாவும் இந்தப் பிரிவில் சேரும். பலர் ஆட்சி யென்று சொன்னால், ஒரு ராஜ்யத்திலுள்ள எல்லாப்

பிரஜைகளும் சேர்ந்து நிருவாகத்தை நடத்த வேண்டுமென்பது அர்த்தமல்ல. அப்படி நடத்தவும் முடியாது. ஆனல், அப்படி நடத்த முடியு மென்றும், ரோம சாம்ராஜ்யத்தின்போது அப்படி நடந்திருக்கிற தென்றும் ரூஸ்ஸோ கூறுகிருன். இது சாத்தியமற்றது என்றே, தற்கால அரசியல் நிபுணர்கள் ஒதுக்கித் தள்ளி விடுகிருர்கள். பலரும், தங்களுடைய பிரதிநிதிகளாகச் சிலரைத் தெரிந்தெடுத்து அவர்களைக் கொண்டு ராஜ்ய நிருவாகத்தை நடத்துகிருர்கள். இந்தச் சிலருக்கே ஜனப் பிரதிநிதிகள் என்று பெயர். இவர்களுடைய நிருவாகத்திற்குப் பிரதிநிதித்துவ அரசாங்கம் என்றும், இவர்கள் கூடுகிற சபைக்குப் பிரதிநிதித்துவ சபையென்றும் பெயர்.

இந்தப் பலருடைய ஆட்சியில், பொதுஜன நன்மைதான் முக்கியத்துவம் பெறுகிறது; ஜனங்களுடைய விருப்பம் எதுவோ அதுவே அரசாங்கத்தின் விருப்பமாக இருக்கிறது. இதனல், ஜன விருப்பத்திற்கு விரோதமாக நடக்கிற யாரும், அரசாங்க யந்திரத்தை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்க முடியாது.

★

ஹங்கேரியின் யுத்தம் யாரோடு?

ஒரு வருஷத்துக்கு முன், ஐக்கிய அமெரிக்காமீது, தாங்கள் போர் தொடங்கியதாக, ஸ்லோவாகியாவும், ஹங்கேரியும், ருமேனியாவும் அறிவிப்புச் செய்தன.

தங்கள் மீது ஹங்கேரி போர் தொடங்கிய செய்தியை, அமெரிக்க மந்திரி கார்டல் ஹல், அமெரிக்க ஜனதிபதி ரூஸ்வெல்டுக்குப் பின்வருமாறு அப்போது அறிவித்தாராம்: "தலைவரே! ஹங்கேரி இப்போது நம்மீது யுத்தம் தொடங்கி யிருக்கிறது."

ஜனதிபதி: "ஹங்கேரியா? அதென்ன?"

மந்திரி: "அது ஒரு சிறிய பால்கன் ராஜ்யம்."

ஜன: "ராஜ்யமா? அதன் ராஜா யார்?"

மந்: "அதற்கு ஒரு ராஜா கிடையாது. ஓர் அட்மிரல் (கடற்படைத் தளகர்த்தர்) அதை ஆள்கிருர்."

ஜன: "அட்மிரலா? அவருடைய கடற்படை எங்கே யிருக்கிறது?"

மந்: "அவருக்குக் கடற்படை கிடையாது; தரைப்படைதான் உண்டு."

ஜன: "தரைப்படையா? அது எங்கே போரிடுகிறது?"

மந்: "ருஷ்யாவுடன் போரிடுகிறது."

ஜன: "ருஷ்யாவுடன் எதற்காகப் போரிடுகிறது?"

மந்: "அதிக நிலம் பெறுவதற்காக?"

ஜன: "ருஷ்யாவிடமிருந்தா? அப்படியானல், ஸ்லோவாகியாமீதும் ருமேனியாமீதும் அன்ரே ஹங்கேரி போர்தொடுக்க வேண்டும்?"

மந்: "இல்லை. அவைகளோடு அது போர்தொடுக்க முடியாது. ஏனெனில், அவைகள் அதன் கூட்டாளிகள்."

சொல் சிக்கனம்

எஜமானி: (புதிய வேலைக்காரியிடம்): "நான் அதிகமாய்ப் பேசும் வழக்கமே கிடையாது. இதை நீ தெரிந்து கொள்ள வேண்டும். நான் கையை அசைத்தேனுனல் 'வா' என்று அர்த்தம்."

வேலைக்காரி: "நானும் அதிகமாய்ப் பேசும் வழக்கமில்லாதவள் தான். இதை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும். நான் தலையை அசைத்தேனுனல் 'வர மாட்டேன்' என்று அர்த்தம்."

நடுநிசி நேரத்திலே அபயக்குரலிடும் அந்த அபாக்கியவானைக் காப்பாற்ற விரைகிறார் இன்ஸ்பெக்டர் ராமச்சந்திரன். ஆனால், அவர் கண்ட காட்சியோ......

அகோர சம்பவம்

சு. குருசாமி, பி. ஏ., எல். டி.

சப் இன்ஸ்பெக்டர் ராமச்சந்திரன் அந்த வீதியின் வழியாகச் சென்றுகொண்டிருந்தபொழுது, இரவு பதினொரு மணிக்கு மேல் ஆகிவிட்டது. அமாவாசைக்கு மறுநாள். எங்கும் மையிருள். தெரு முழுதும் தூங்கிக்கொண்டிருந்த அந்தச் சமயத்தில், கோடி வீட்டில் மாத்திரம் ஏதோ சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. போலீஸ் மனப்பான்மையுள்ள அவருடைய உள்ளத்தில், அது ஏதேதோ எண்ணங்களைக் கிளப்பி விட்டது. அந்த வீட்டுக்குச் சமீபத்தில் அவர் சென்று கவனித்தபோது, சப் இன்ஸ்பெக்டராகிய அவர்கூடத் திடுக்கிட்டுப் போனார்.

"இந்த நள்ளிரவில் யாருமறியாமல் என் படுக்கை யறைக்குள் உருவிய கத்தியுடன் நுழைந்திருக்கிறாயே, உன் உத்தேசந்தான் என்ன?" என்று திகிலுடன் கேட்டது ஒரு குரல்.

"உத்தேசம் இன்னும் தெரியவில்லையா? இன்னும் கொஞ்ச நேரத்தில் விளங்கிவிடும். நீ செய்த அட்டூழியங்களின் பலன் இது" என்றது இன்னொரு குரல்.

இன்ஸ்பெக்டர் ராமச்சந்திரனுக்கு என்ன செய்வதென்று விளங்க வில்லை. எப்படியாவது அந்த மனிதனுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்று தீர்மானித்தார். வேகமாகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடி, போலீஸ் படையைத் திரட்டினார். எதிரியின் ஆள் பலம் எவ்வளவு என்று நிச்சயமாகத் தெரியவில்லை. எதற்கும் துப்பாக்கிகளை எடுத்துக் கொள்ளுமாறு கான்ஸ்டேபிள்களிடம் சொல்லிவிட்டுத் தாமும் தமது ரிவால்வாரைத் தூக்கிக் கொண்டார். இவ்வளவு ஏற்பாடுகளும் செய்யப் பத்து நிமிஷங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இதற்குள் அங்கே என்ன நடந்திருக்கிறதோ என்று அவரது உள்ளம் துடித்தது.

வேகமாகத் தமது போலீஸ் படையுடன் அவர் அந்த வீட்டுக்குச் சென்றபோது "எனக்காக இல்லாவிட்டாலும், பால் மணம் மாறாத இந்தப் பச்சைப் பாலகனுக்காகவாவது எனக்கு உயிர்ப்பிச்சை கொடப்பா; உனக்குக் கோடி புண்ணியம்!" என்று கெஞ்சியது, இன்ஸ்பெக்டருடைய இரக்கத்துக்குப் பாத்திரமான குரல்.

"உயிர்ப் பிச்சை! உனக்கு உயிர்ப் பிச்சை வேறா?" என்று உறுமினான் அந்தப் பாதகன்.

அதற்குமேல் தாமதிக்க நேரமில்லை. முன் கதவு தாளிடப்பட்டிருந்தது. என்ன செய்வது! எப்படியும் அந்த ஏழையின் உயிரைக் காப்பாற்ற வேண்டும். பின்புறம் சென்று பார்த்

தார்கள். அவர்கள் வந்த வேளை நல்ல வேளை. அவனுக்கும் ஆயுள் பலம் இருந்ததுபோலும். கொல்லைக் கதவு திறந்திருந்தது!

'அந்தப் பாவி உயிர்ப் பிச்சை கொடுக்காவிட்டாலும், நான் கொடுக்க முடியும்' என்று நினைத்துக்கொண்டு, மாடிப் படிகளில் வேகமாக ஏறிச் சென்றார் இன்ஸ்பெக்டர். படுக்கையறை வாசலை மிதித்தார். அதுவும் திறந்தே இருந்தது! 'மனிதன் பிழைத்தான்' என்று நினைத்தார். ஆனால், அதே சமயம், "ஐயோ! பாவி குத்திவிட்டானே! தமையனைக் கொன்ற தறுதலை! உனக்கு நற்கதி கிடைக்.........." என்று சொல்லி, தரையில் ஒரு மனிதன் தடாலென்று விழுந்து துடிக்கலானான்.

"அடே கொலைகாரா! அகப்பட்டுக்கொண்டாய்! கத்தியைக் கீழே போடுகிறாயா, சுடட்டுமா?" என்று ரிவால்வரை நீட்டினார் இன்ஸ்பெக்டர் ராமச்சந்திரன்.

"அட ராமச்சந்திரா! இதென்ன கூத்து? நாளை நடக்கப்போகும் நாடகத்துக்கு ஒத்திகை யல்லவா நடத்திக்கொண்டிருக்கிறோம், ஸார்!" என்றான் அந்தக் 'கொலைகாரன்'!

இந்தச் சமயம், மேலே குத்துண்டு இறந்து கீழே விழுந்திருந்த மனிதனும், 'ஜம்' என்று எழுந்து நின்றான்!

★

வேலையின் பத்திரம்

ஒரு மலையாளத்தான், ஒரு கடைக்குள் நுழைந்தான். கொஞ்சம் டெலிபோன் பேச அனுமதி கேட்டான். அவன் பேசிய விவரமாவது: "ஹல்லோ! ஆவிச்சிச் செட்டியார் வீடா அது?............சரி; பேசறது ஒரு நாயரு. எனக்குச் சமையல் நல்லாத் தெரியுமுங்க. உங்களுக்கு ஒரு சமையல்காரன் தேவையா?......உங்ககிட்ட இருக்கான ஆளு?.............புது ஆள் தேவையில்லையா?............இருக்கிற ஆள் கிட்டே ரொம்பத் திருப்தியா? நிச்சயமாகவா?............சரிதானுங்க. நமஸ்காரமுங்க."

இப்படி அவன் பேசி முடிந்ததும், கடைக்காரர் இரக்கங் கொண்டு, "எனக்குக்கூட ஒரு சமையல்காரன் வேணுமப்பா? இஷ்டமானால், என்னிடம் அமர்ந்து கொள்" என்றார்.

"ரொம்ப வந்தனங்க. வேண்டாமுங்க. எனக்கு வேலை தேவையில்லை" என்றான் மலையாளத்தான்.

ஆச்சரியமடைந்த கடைக்காரர், "இப்போது டெலிபோனிலே யாரையோ வேலைதானே கேட்டாய்!" என்றார்.

"அவர் கிட்டத்தான் நான் சமையல் வேலை பார்க்கிறேனுங்க. அவருக்கு என்னிடம் அதிருப்தி இல்லாமல் இருக்குதான்னு இப்படி அடிக்கடி டெலிபோனிலே பேசித் தெரிஞ்சுக்கற வழக்கமுங்க" என்றான் மலையாளத்தான்.

இருட்டு முன் இடம்

"பட்டணத்துக்குப் புதிதாக வருபவன், ராத்திரி வேளையில் தங்குவதற்குச் சௌகர்யமான ஒரு விடுதியை முதன் முதலில் தேடி அங்கே தன் சாமான்களை வைக்க வேண்டும். அப்பால், அவன் ஊர் சுற்றி வேடிக்கை பார்க்கப் போகலாம். இல்லாவிட்டால், இருட்டில் இடம் தேடுவதில் சிரமப்படுவான். அதே போல, இவ்வுலகத்துக்குப் புதிதாக வருபவனும் ஈசுவரனாகிய நித்திய விடுதியைத் தேடி வைத்து விட்டு, பயமின்றி இவ்வுலகில் திரிந்து, தான் செய்ய வேண்டிய காரியங்களை யெல்லாம் செய்யலாம். இல்லாவிட்டால், மரணமாகிய பயங்கர அந்தகாரம் வரும் போது, துன்பமும் துயரமும் அவன் அனுபவிக்க நேரும்." —ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

புஷ்பா

லா. ச. ராமாமிருதம்

அப்படியும் முதிர்ந்த வயதுமில்லை. தூய பனி போல் மயிர் வெளுத்து, அதற்கீடாய் முகமும் உடலும் வெளுத்து, சுண்டி, ஒன்றிலும் ஒட்டாது, தனியாய், கடலைத் தொட்டுக் கொண்டிருக்கும் வானத்தின் முழு நீலத்தையே பார்த்துக் கொண்டிருந்த அவனிடம் என் மனம் என்னையும் அறியாது இரங்கிற்று.

அவனது முகம் மெள்ளத் திரும்பி, நாட்டம் என்மேல் பதிந்தது. கடலினும் பெரிய கண்கள். ஆண்களுக்கு வாய்ப்பதைவிடச் சற்றுப் பெரிதாய், ரப்பைகள் நுனியில் சுருண்டு உலகின் விசனமெல்லாம் தேங்கி, மாரிக்காலத்து நிலவை நினைவு மூட்டும் கண்கள்! என் தொண்டையில் என்னவோ அடைத்தது. கையிலிருந்த சுண்டலை அவன் பக்கம் நீட்டினேன்.

சிரிப்புக்கும் அந்த முகத்துக்கும் என்றும் ஒவ்வாதோ? அப்பொழுது அதில் நடுங்கிய புன்னகை, ஏதோ காற்றுவாக்கில் அங்கே ஒதுங்கியதுபோல் இருந்ததே ஒழிய, சுயமாய்ப் பிறந்ததாயில்லை. கொஞ்ச நாழிகை இருவரும் கொரித்துக்கொண்டிருந்தோம். இன்னும் எங்களிடையில் வார்த்தை புரளவில்லை.

அப்பொழுது எங்கள் பக்கமாய் ஒரு பெண் 'மந்தை' சென்றது. ஓ, இந்த ஸ்திரீகளுக்கே வேறு வேலையில்லையோ? என்ன சிரிப்பு, என்ன விழியுருட்டல், என்ன சுண்ணும்புப் பூச்சு, என்ன வளையல்களின் கிலுகிலுப்பு, புதுப் புடவையின் சலசலப்பு!

அதில் ஒரு 'குமாரி' கொண்டையில் வான வில்போல் வளைத்துச் சூடியிருந்த பூவை எதோ சரிப்படுத்தினள். அந்த அநாவசியமான சேஷ்டையில், இரண்டு இதழ்கள் பிய்ந்து, மணலில் விழுந்து, அவர்கள் சென்ற பிறகும், குற்றுயிரும் குலையுயிருமாய், தென்றலில் நடுங்கின.

இதில் என்ன இருக்கிறது? ஆனல், என்னுடன் இருந்தவனுக்கு வந்த கோபத்தைப் பார்க்கவேண்டுமே! நெற்றி நரம்புகள் நீலமாய், கரணை கரனையாய்ப் புடைத்துவிட்டன. செம்பட்டை மீசை மயிர் துடிக்க, பற்களை நற நற என்று கடித்த வண்ணம், அந்த இதழ்களை வாரி, நாலு சுக்கலாய்ப் பிய்த்து, ஜலத்தில் எறிந்தான். உடனே அவனைப் பிடித்த வெறியும், பிடித்த சுறுசுறுப்போடேயே தணிந்துவிட்டது. முகத்தைக் கையில் புதைத்துக்கொண்டு, குழந்தை மாதிரி, விசித்து விசித்து அழ ஆரம்பித்துவிட்டான்.

ஐயோ, இந்தச் சங்கடத்துக்கு என்ன செய்வது? இந்தப் பைத்தியத்துடன் நாலு பேர் என்னைப் பார்த்துவிட்டால்......? ஜாடையாய் நகர ஆரம்பித்தேன்.

உடனே, அந்த மனிதன் என் காலைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, "என்னை இப்பொழுது விட்டுவிடாதீர்கள். நீங்கள் போனல், இதோ சமுத்திரத்தில் விழுந்துவிடுவேன் — நான் இனிமேல் சமத்தாய் இருக்கிறேன் — அழ வில்லை — சிரிக்கிறேன் — இதோ பாருங்கள்" என்று குழந்தை மாதிரி சிரிக்கவும் ஆரம்பித்துவிட்டான்.

ஐயையோ!—

ஆனல், சற்று நேரத்துக்கெல்லாம், முகத்தைத் துடைத்துக்கொண்டு அவர்—ஆம், இனிமேல் அவர்தான்—அவர் என்னிடம் பேசியபொழுது, அந்த முகத்திலும் குரலிலும் செறிந்த ஆழமும் நிதானமும் பிரமிக்கத் தக்கவையாய் இருந்தன.

"மன்னிக்கவேண்டும். உங்களை நிரம்பவும் தொந்தரவு செய்துவிட்டேன். ஆஸ்பத்திரியிலிருந்து இப்பொழுதுதான் வெளி வந்தேன். இன்னமும் தனியாயிருக்கச் சரியாய்ப் பழகவில்லை. பூவைக் கண்டால், மனம் இன்னமும் வேதனையடைகிறது. என் என்று சொல்லட்டுமா, அல்லது உங்களுக்குப் பயமாயிருக்கிறதா?—"

அவா என்னும் மனக் குரங்கு, லஜ்ஜையை மீறிவிட்டது. தலையசைத்தேன்.

உடனே வேறு பீடிகையில்லாமல், அவர் சொல்ல ஆரம்பித்தார்:

"எங்கள் வீட்டுத் தோட்டத்தில் — கொல்லைப்புற மில்லை — வாசலின் முன் குறட்டில், ஒன்றிரண்டு தென்னங் கன்றுகள், ஒரு கீரைப் பாத்தி, துளசி, கொத்தமல்லி எல்லாம் பயிராக்கியிருந்தோம். இவற்ருேடு ஒரு பூஞ்செடியும் பயிராகியிருந்தது. நாங்கள் ஒன்றும் அதை வைத்துப் பராமரிக்க வில்லை. தான்

தோன்றியாகவே முளைத்தது அது. நாளடைவில் இதர பயிர்களைவிட, இன்னமும் செழிப்பாய், கப்புங்கிளையுமாய், ஒரு சிறிய மரமாகவே ஓங்கி வளர்ந்துவிட்டது.

"பூவான பூ! அப்படிச் சொரியும். அது ஒரு மாதிரியான காட்டரளியாம். ரோஜாப் பூ மாதிரி; ஆனால், அதைவிடச் சிவப்பாய், இதழ்கள் அடுக்கடுக்காய் விரிந்திருக்கும். மணம் என்று சொல்வதற்கில்லை. அதனுடைய அழகும் எல்லோருக்கும் பிடிக்காது. ஒரு விதமான வெறி பிடித்த அழகு. ரோஜாவைப் போல் மனதுக்கு ரம்யமும், நிம்மதியும் அளிக்காது; ஒரு மாதிரி அவசரமும் அச்சமும்தான் உண்டுபண்ணும்.

"வாசலில் ஒரு வளை படிக்கட்டு. அதன் வழியேறினால், மாடியில் நேரே என் அறை. அதில் ஒரு ஜன்னல்; அதன்மேல், அந்தமரத்தின் இலைகள் உராய்ந்து சப்தித்துக்கொண் டிருக்கும். நான் மாலை வேளையில், நாற்காலியை அங்கே இழுத்துப் போட்டுக்கொண்டு, அந்தச் சப்தத்தில் லயித்து, ஏதாவது குருட்டு யோசனை செய்துகொண்டிருப்பேன்.

"என்ன யோசனை? எனக்கே தெரியாது. ஏதோ அர்த்தமில்லாது, ஆதியும் அந்தமும் இல்லாது.........அந்தச் செடிக்கும் அதன் இலைகளுக்கும், என் கற்பனையில் உயிரைக் கொடுத்துவிடுவேன். அந்த இலைகளின் சலசலப்பெல்லாம், அவை ஏதோ தங்கள் ரகஸ்யங்களைப் பேசிக்கொள்வதுபோலிருக்கும். மனித சக்திக்குப் பிடிபடாது, தாவர உலகுக்கே சொந்தமாய், அர்த்தம் புரியாது, ஆனால், அர்த்த புஷ்டியின் அச்சம் நிரம்பிய, அமானுஷ்யமான ரகஸ்யங்கள்! ஒரொரு வேளை, நள்ளிரவில் விழித்துக்கொண்டேனானால், அந்தச் சந்தடியற்ற சமயத்தில், காற்றின் அலைச்சலும், அந்த இலைகளின் சப்தமும் ஒன்று கலந்து என் அறையில், ஏதேதோ பறப்பதும் நடமாடுவதும் போல் கூடத் தோன்றும். தேவதைகளா? அந்த மதோன்மத்தமான பய வசீகரத்தில் கட்டுப்பட்டு என்னையும் மறந்து, அவைகளின் இரகசியத்தைக் கேட்டுக்கொண்டே கிடப்பேன்.

"ஆம், நான் அவ்வளவு அப்பாவி. உலக அனுபவமே கிடையாது. என்னைப்போல் எத்தனையோ பேர் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். கொஞ்சம் சொத்தும் இருந்து, வீட்டுக்கும் ஒரே பிள்ளையாய் வாய்த்து, செல்வமாயும் வளர்ந்துவிட்டு, இயற்கையாகவே சிந்தனையிலும் கற்பனையிலும் மனம் சென்றவனாய், ஆனால் அதற்கேற்ற அனுபவமில்லாது, சரியான அடிவண்டல் முட்டாளாய் வளர்ந்தேன். ஆகையால், நான் எண்ணிய எண்ணங்களும், சுத்த எட்டுச் சுரைக்காய் எண்ணங்கள்; செய்த சிந்தனையோ உருவும் உபயோகமுமில்லாது, ஆகாயத்தைக் கீறிச் செல்லும் அர்த்தமற்ற சிந்தனை. எவ்வளவோ படித்து, என்னதான் காலேஜில் முதலாயிருந்தும், ஒன்றுக்கும் பயனற்ற படித்த முட்டாள்.

"ஆனால், வயதுக்கேற்ற அனுபவமில்லாவிட்டாலும், இயற்கையின் வயதுக் கோளாறுகள் மாத்திரம் என்னை விடவில்லை. காலேஜில் ஒரு மாணவியிடம் என் மனதைப் பறிகொடுத்துவிட்டேன். ஒரு நாள் வகுப்பில் பாடம் கேட்டுக்கொண் டிருக்கையில், அவ

ளது முன்மயிர் காற்றில் அலைந்து கலைந்து, கண்ணில் குத்தவே, அவள் ஒரு 'சூ' கொட்டி அதைச் சரியாய் ஒதுக்கிவிட்டுக்கொண்டாள். அந்த முகச் சுளிப்பில் அந்த மயிர் அமைந்த வங்கியிலும் அவளுடைய வளையலின் குலுக்கிலும் என்றுங் காணாத ஒரு புது அழகை அன்று கண்டுவிட்டு, என் வசமிழந்தேன். இந்தப் பைத்தியம் பிடிப்பதற்கு, வேளையுண்டா, பொழுதுண்டா?

"நானும் மிஸ் ஹைமாவும் நெருங்கிப் பழகச் சந்தர்ப்பமிருந்தது. ஒரே வகுப்பு. தவிர, வகுப்பில் நான் சற்றுக் கெட்டிக்காரன் என்று பெயர். ஆகவே, எங்களது நட்பு வளர வளர, என் ஆகாசக் கோட்டையும் விந்திய மலைக்குப் போட்டியாய் வளர ஆரம்பித்தது. நாங்களிருவரும் மணம்புரிந்துகொண்டு குடித்தனம் நடத்துவதாய் நான் காணும் கஞ்சாக் கனவில், தேச பக்தி, கிராம முன்னேற்றம், கலாபிமானம், சங்கீதம் இம்மாதிரி அனுபவ சாத்தியமில்லாத, கேட்கக் கேட்கத் தெவிட்டாத பல சுவாரஸ்யமான அம்சங்கள் சேர்ந்து இழைந்தன. இவ்வளவு பைத்தியமாய் நானும் இருந்தேனா என்று எனக்கே இப்பொழுது வெட்கமாயிருக்கிறது. இல்லை, ஒருவேளை நான் நினைத்ததெல்லாம் கைகூடியுமிருக்குமோ என்னவோ! ஆனால், அந்த மனத் திளைப்பிலே இந்தச் சனியன் பிடித்த காட்டரளிப் பூவும் வந்து கலந்து கொண்டது.

"ஒரு நாள் மாலை, வழக்கம் போல் அறையில் உட்கார்ந்து ஊமைக் கனவு கண்டுகொண்டிருக்கையில், ஜன்னலுக்கு வெளியில் ஒரு மொக்குக் கட்டுவதைக் கண்டேன். மரத்தின் நடு மத்தியில் எட்டியும் எட்டாத உயரத்தில், ராஜாளி கூடு கட்டுவதைப் போன்று கட்டியிருந்த அந்த மொக்கினிடம், என் மனம் அம்பு பட்டதுபோல் அழுந்திவிட்டது. ஏதோ ஒரு பெரும் ரகஸ்யத்தை அடக்கி வைத்திருப்பதுபோல் அழுத்தமாய் அதன் இதழ்கள் குவிந்து இதுவரை கட்டிய மொக்குகளைவிட நிரம்பவும் பெரிதாய்.........

"சீ, ஒரு பூ அரும்புவதில், இவ்வளவு பிரமாத யோசனைக்கு என்ன இருக்கிறது என்று உங்களுக்குத் தோன்றுகிறதல்லவா? நீங்கள் அப்படி நினைத்தால், என்னுடைய அப்பொழுதைய மனோநிலையை நீங்கள் சரியாய்ப் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். அவ்வளவுதான்.

"ராத்திரி படுத்து வெகு நேரமாகியும் எனக்குச் சரியாய்த் தூக்கம் வரவில்லை. அந்தப் பூவின் சக்தி, பரிபூரணத்துவத்தை அடையு முன்னரே, என்னுள்ளத்தில் பரவிவிட்டது. நள்ளிரவில் இரண்டு மூன்று தடவை எழுந்திருந்து இருளில் முறைத்து முறைத்துப் பார்த்தேன். மையிருட்டில் ஒன்றும் தெரியவில்லை. என் உடம்பு ஜுரம் கண்டது போலாகிவிட்டது. விடிந்தும்விடியாததும், ஜன்னலண்டையில் தான் போய்நின்றேன். கிழக்கில் இன்னமும் வெண்மை சரியாய்ப் படராத, கோழியும் இன்னும் சரியாய்க் கூவாத, உலகமும் இன்னும் விழிக்காத வேளையில், அதைக் கண்டுவிட்டேன். என் தேகமாத்தியந்தம் ஒரு பயங்கரமான பரவசம் ஊடுருவி, உடலெல்லாம் குப்பென்று வியர்த்துவிட்டது.

"அவ்வளவு பெரிதாய் இதுவரை எந்தப் பூவும் பூத்ததில்லை; நான் பார்த்ததுமில்லை. நன்றாய்

ஒரு கை முஷ்டியளவு பெரிது. அதன் இதழ்களில் ரத்த நரம்புகள் ஓடின என்பதே என் தியானம். சுற்றிலும் பூத்த அத்தனை பூக்களுக்கு மிடையில், நடுநாயகமாய்த் தனி விளக்காய், அது ஆடி நகை செய்தது. அது மலர்ந்தும் அதன் ரஹஸ்யத்தை மாத்திரம் விட்டுக் கொடுக்கவில்லை. என் மனத் திரையில் கோவையற்ற பல எண்ணங்கள் தோன்றி, ஆடி, மறைந்தன.

"ஆதியில், ஆதிபரா சக்தி, கருத்தீண்டாப் புனிதையாதலால், நெருப்பில் பிறந்தாளென்றும் சங்கில் பிறந்தாளென்றும், புராணங்கள் முறையிடுகின்றன. அப்படி அவள் பிறந்த சங்கின் மறு பிறப்போ இது?

"சூரியனையே வரித்து, அவனுக்கே அர்ப்பணமாகும் சங்கல்பத்துடன் யாரும் தீண்ட முடியாத ஒதுப்புறத்திலே உச்சியிலே பிறந்த இந்தப் பதிவிரதை-இவள் எவள்? சர்வ லட்சிய தரிசனத்தின் கடைசி முற்றுப்புள்ளியோ? சகல பூஜ்யர்களும் தேடும் பகவானுக்கு இருப்பிடம் ஆக வேண்டுமெனில், அவர்களுடைய இதயகமலம் இப்படித்தான் மலர வேண்டுமோ?

"அம்மா கீழிருந்து அதைத் துறட்டுக் காம்பால் எவ்வளவோ எட்டிப்பார்த்தாள். அது அவளுக்கு எட்டியும் எட்டாது அவளைப் பார்த்து - இல்லை, இவ்வுலகத்தைப் பார்த்தே - எள்ளி நகையாடியது. ஆம்! இது ஒரு லட்சிய தேவதைக்கு அர்ப்பணமாகத்தான் காத்துக்கொண்டிருக்கிறது.

"இப்படி யெல்லாம் எண்ணினேனோ இல்லையோ, கையை வெளியே நீட்டிவிட்டேன். என் விதிவசமே போல், ஒரு காற்றடித்து, அந்தக் கிளை என் பக்கமாய்ச் சாய்ந்து, தன்னைத் தானே சமர்ப்பித்துக்கொள்வது போல அந்த மலர் குனிந்தது. அதைப் பறித்துக்கொண்டு நேரே ஹேமாவிடம் சென்றேன்.

"மிஸ் ஹேமா டிசம்பர்ப் பூக்களைச் சரமாகக் கோத்துத் தலையில் வைத்துக்கொள்ளுமுன், தன் மேஜையின் மேல் போட்டிருந்த கண்ணாடிப் பலகையில் அவைகளை வளைத்து வைத்து அழகு பார்த்துக்கொண்டிருந்தாள். என் புத்திதான் என் வசமில்லையே! நாடக மேடைப் பிரவேசம் போல் புகுந்து, அந்த 'டிஸம்பர்'ச் சரத்தை அலட்சியமாய் ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டு, என் பூவைப் பெருமிதத்துடன் அவள் முன் வைத்தேன்.

"'ஹேமா, பார்! உனக்கென்றே பூத்த பூவைக் கொண்டுவந்திருக்கிறேன்!'

"அவள் அந்தப் பூவை ஒரு முறை முறைத்துப் பார்த்துவிட்டு, என்னையும் பார்த்து ஒரு தரம் முறைத்தாள். அவளது முகத்தில் தோன்றிய அருவருப்பையும் அலட்சியத்தையும் மனதில் நினைத்துத்தான் பார்த்துக்கொள்ள வேண்டும்.

"'எனக்கென்று இதுதானா பூக்க வேண்டும்—தவளைக்குடல் மாதிரி—'

"சகிக்க முடியாத கண்ணராவி மௌனம் அங்கே திடீரென்று தேங்கிவிட்டது.

"அவளது பேச்சிலும் அப்படி ஒன்றும் பிரமாதமான கல்மஷம் இருந்ததாக, இப்பொழுது தெரியவில்லை. அதற்கு ஏதாவது நானும் சமாதானமாய்ச்

சொல்லியிருந்தால், எல்லாம் சரியாய்ப் போயிருக்கும். ஆனால், நான் என் கற்பனையிலேயே மூழ்கி வந்திருக்கும் ஆவேசத்தில் அவளுடைய வார்த்தைகள் என்னவோ, ஸோப்புப் போட்டுக் கழுவிய முகத்தில் சகதியை வாரி அடித்தாற் போலிருந்தது. என் பூ—குபேர வனத்தின் பாரிஜாதத்துக்கு மேலும் பல படிகள் நான் உயர்த்தி வைத்திருக்கும் என் பூவை—

"அது மாத்திரம் அந்தக் கண்ணாடிப் பலகையில், உட்கார்ந்து கொண்டு, ஒட்டை மறைத்த சிவயோகி போல, தன்னிடமிருக்கும் ரகசியத்தைப் பற்றி, நாங்களிருவரு மிடும் சச்சரவைப் பார்த்துக் கொண்டு, தனக்குள் தானே பொங்கி, இதழ்கள் குலுங்கச் சிரித்துக்கொண்டிருந்தது.

"'அட மடையா, இவளுக்கா! இந்த ஜந்துவுக்கா என்னை அர்ப்பணம் செய்ய வந்தாய்! இவளா உன்னுடைய லட்சிய தேவதை?—சீ—' என்றுதான் சிரித்ததோ?—

"மிஸ் ஹேமா முகத்தைச் சுளித்து, மூக்குக் கண்ணாடியை முன்றானையில் துடைத்து அணிந்து கொண்டாள். நான் என் பூவை எடுத்துக்கொண்டு அவ்விடம் விட்டு அகன்றேன்."

உணர்ச்சியில் அவருக்குத் தொண்டை அடைத்து விட்டது. இரண்டு தடவை இருமினார். கடற் கரையில், நாங்கள் இருந்த இடத்திலிருந்து அநேகமாய் ஒவ்வொருத்தராய் அகன்று விட்டார்கள். கற்றாழை நார் போன்ற அவரது மயிர், காற்றில் வெகு அழகாய் அலைந்தது. மறுபடியும் சொல்ல ஆரம்பித்தார்:

"என் மனமிருந்த கொந்தளிப்பில், நான் எப்போது வீடு வந்தேன் என்றுகூடத் தெரியவில்லை. பூவை என் அறையில் மேஜையின் மேல் வைத்துவிட்டு, தாழ்வாரத்தில் உலாவிய வண்ணம் குருட்டு யோசனையில் ஆழ்ந்தேன்.

"கொஞ்சம் பணக்காரப் பிள்ளையாகவே பிறந்து விடுவதன் அசௌகரியத்தை பார்த்தீர்களா? உலக அனுபவத்தின் முதல் இடி அல்லவா எனக்கு அது? என்னவோ, கப்பலே கவிழ்ந்துவிட்டாற் போலிருந்தது எனக்கு. லட்சியமே மண்ணில் உருண்டது.

"சொல்லப்போனால், லட்சியம் என்பதே எங்கேயிருக்கிறது? அது ஒரு கானல். உலகத்தில் பிரயத்தனம் இருப்பதற்காக லட்சியம் என்று ஒரு சிப்பக் கட்டுக் கட்டி, 'ஹா—ஹூ' என்று இல்லாத வாண வேடிக்கை யெல்லாம் பண்ணி, நமக்கு முன்னிருந்தவர்கள் எல்லாம் நம்மை ஏமாற்றிவிட்டுப் போயிருக்கிறார்கள். எல்லாமே பொய், ஏமாற்றம்; ஆகையால், எதையுமே மனதில் தீவிரமாய் எடுத்துக் கொள்வதற்கில்லை. அதனாலேயே எல்லாம் தமாஷ்—இந்த உண்மையெல்லாம் அப்பொழுது எனக்கு எப்படித் தெரியும்? நான் மறுபடியும் மாடி யேறும்பொழுது, என் மனதில் ஒரே ஒரு கேள்வி தான் உறுத்திக்கொண்டிருந்தது: 'என்னிலும் அபாக்கியவான் இவ்வுலகில் எவனாவது உண்டா?' ஒவ்வொருவனும் அப்படித்தானே நினைத்துக் கொள்ளுகிறான்! என் பித்தம் இன்னும் தெளிந்தபாடில்லை. சலித்த வண்ணம் நாற்காலியில் சாய்ந்தேன். எங்கேயோ என் நினைவு. என் கண்களோ, அறை

யில் கூட்டிக்கொண் டிருக்கும் வேலைக்காரியின் குனிந்த முதுகில் பதிந்து, கொண்டையின் மேல் ஏறின. அதில் என் பூ மிளிர்வதைக் கண்டேன். அந்தக் கொண்டையில், குளிர்ந்த ஒளியை வீசிக்கொண்டு, அது உட்கார்ந் திருந்தது. இன்னமும் அந்த எள்ளிய நகை மாறவில்லை.

"இதுவரை நான் எங்கள் வீட்டு வேலைக்காரியைக் கண்ணெடுத்துப் பார்த்ததில்லை. அன்று தான் கூர்ந்து நோக்கினேன். என்ன ஆச்சரியம்! என் கண்கள் இத்தனை நாள் எப்படி அவிந்திருந்தன?

"அவளுக்குப் பதினாறு பதினேழு வயதுதான் இருக்கும். கருங்காலியில் அச்சு இறக்கியது போல் கடைந்தெடுத்த உடல். அதை, இரண்டொரு ஒட்டுப் போட்ட ஒரு சுங்குடிப்புடவை போர்த்தது. கழுத்தில் ஒரு கறுப்புப் பாசிமணியும் சிவப்புக் கண்ணாடி மணியும். கோணல் வகிடு எடுத்து அழுந்த வாரிப் பின்னிய மயிரினின்றும் எண்ணெய் வழிந்து, நெற்றிப் பொட்டில் பளபளத்தது. பச்சைக் கல்க் குங்குமமும் அதில் கலந்த ஜிகினாப் பொடியும், இரு புருவங்களுக்கு மிடையில் மின்னியது. திராட்சைப் பழக் கொத்துப் போல் கட்டிய பின்னல் கொண்டையின் சந்தினின்று, ஒரு சிவப்பு நூல் எட்டிப் பார்த்தது. அதன்மேல் என் காட்டரளிப் பூ உட்கார்ந்து கொண்டு செருக்குடன் சிரித்தது. இந்தத் தேஜஸுக்கு இத்தனை நாள் என் கண்கள் எப்படி மங்கி யிருந்தன? ஆதியில் அர்ச்சுனனுக்குப் பாசுபதமளிக்க வேடுவனாய்ப் பகவான் கிளம்பிய பொழுது, கூட வேடுவச்சியாய்க் கிளம்பிய சக்தி போலிருந்தாள்.

"எனது நாட்டம் அவள்மேல் பதிந்ததை அவள் தெரிந்து கொண்டுவிட்டாள். சற்று லஜ்ஜையுடன் பின்னடைந்தாள். முகத்தில் புன்னகை பூத்தது. மின் வெட்டுப்போல் முகத்தில் பற்கள் உதித்தன.

"'என்ன ஐயரே?' என்றாள் சிரித்துக் கொண்டு.

"'உன் பேர் என்ன?—' என்றேன்.

"சுவரை நகத்தால் கீறிக் கொண்டு 'புஷ்பா' என்றாள்."

மறுபடியும் அவருக்கு வார்த்தைகள் தடுமாறின. முகம் 'செவசெவ'த்து விட்டது. அஸ்தமனச் சிவப்பு. அது எல்லாவற்றின் மேலும் அடித்த சாயம் தானா, அல்லது அவர் படும் அவஸ்தைதானோ?

"அன்றிரவே நாங்களிருவரும் வண்டியேறி விட்டோம். ஆம்! என்ன விழிக்கிறீர்கள்? அவள் பெயர் 'புஷ்பா' என்றாள். என் புஷ்பத்தைச் சூடி யிருந்தாள். அவ்வளவுதான்.

"எந்த இடத்துக்கு டிக்கட்டு வாங்கினோம் என்பது ஞாபகமில்லை; அவசியமுமில்லை. இரு மருங்கிலும் ஓங்கிய புதர்களுக்கிடையில், இருளைக் கிழித்துக் கொண்டு ரயில் அதி வேகமாய்ப் பாய்ந்து சென்றபோது, எனக்கு இவ்வுலகத்தில்தான் இருக்கிறோமா, அல்லது ஒரு நாவலுக்குள்தான் புகுந்து விட்டோமா என்ற ஆச்சரியமும் ஆனந்தமும் தெளியவில்லை. வானமே ஒரு சல்லடை போலவும், அதன் கண்கள் வழியே தேவலோகத்தின் காந்தி ஒழுகுவதுபோலும் நட்சத்திரங்கள் மின்னின. புதர்களில் அங்கும் இங்குமாய் மின்

மினிகள் மினுக்கின. நாங்கள் இருந்த பெட்டியில், நாங்களிருவர்தான். எதிர் எதிரே உட்கார்ந்து கொண்டிருந்தோம். அவள் ஜன்னலின் வெளியே எட்டிப் பார்த்து வெளியில் பறக்கும் வயல்களையும் கட்டடங்களையும் கண்டு ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தாள். நான் அவளைப் பார்த்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தேன்.

"அவளுக்கு எல்லாம் தமாஷாய்த்தான் இருந்ததென்று நினைக்கிறேன். என் மாதிரி யெல்லாம் படித்து எண்ணாத எண்ணங்களெல்லாம் எண்ணி மூளையைக் குழப்பிக்கொள்ள வில்லை அவள். தந்தையு மில்லை. தாயு மில்லை. வளர்ப்புப் பெண். ஆனல், அவளை வளர்த்த சிற்றப்பன், கஞ்சிக்குத் தகராரா யிருந்தும், ஆள் கொஞ்சம் கண்டிப்பு. கூட்டில் அடைபட்டுத் திடீரென்று தப்பித்து வந்ததுபோ லிருந்தது அவளுக்கு.

"ரயில் வண்டி விளக்கைச் சுற்றி மாத்திரம் விட்டிற் பூச்சிகள் ஏன் அதிகமா யிருக்கின்றன? அந்தச் சந்தேகம் எனக்கு இன்னமும் தீரவில்லை. பறந்து பறந்து சலித்து, அந்தப் பூச்சிகளில் ஒன்று, அவளுடைய மண்டையில் என் புஷ்பத்தின் பக்கத்தில் உட்கார்ந்தது. குறு குறு என்றது போலும்; அல்லது, அவ்வளவு அழுத்தி வாரியும் அதற்கும் தப்பித்த பேன்தான் கடித்ததோ? விட்டில் பூச்சி உட்கார்ந்த இடத்தில் சொரிந்து, கையில் தட்டிய பூவை — என் புஷ்பத்தைப் — பிய்த்துத் திடீரென்று வெளியே எறிந்தாள்.

"'புஷ்—பா—!!!—'

"ரயில் வண்டியின் ஊதல் 'வீல்' என்று அலறியது. அது என்னை என்னவோ பண்ணியது. அந்தச் சங்கடத்தை நினைத்தால் கூடப் பயமா யிருக்கிறது.

"ஜன்னலினின்று மெதுவாய் அவளது முகம் என் பக்கம் திரும்பியது. இருங்கள், சொல்கிறேன் என் மனத் தோற்றத்தின் கோரத்தை. அவளது உடலெல்லாம் மறந்துவிட்டது. வெளியில் கவிந்த இருட் படலத்தினின்று, அவள் முகம் சமைந்து, துஷ்டக் குழந்தையைத் தூங்க வைக்கும் 'பூச்சாண்டி'ப் பொம்மை போன்று, ஜன்னலில் தோன்றியது. புஷ்பத்தின் சோபையால் களை சொட்டிய அந்த முகம், அதை இழந்த பிறகு சுய ரூபத்தை எடுத்ததும்—கற்பனைப் புகை சூழ்ந்த என் மனத் திரையும் கிழிந்தது.

"நினைத்த தெல்லாம், நினைத்த படி யில்லாமல், அடியோடு சரியும் பொழுது, சாதாரண விகாரம்கூடப் பயங்கரமாய்த் தோன்றுகிறது. ஆம், என்ன கோரம்! எவ்வளவு குறுகலான நெற்றி, அதில் ஒரு தழும்பு! ரவிவர்மாப் படத்தில் காணும் ராட்சச ஸ்திரீகளுக்கு இருப்பது போல் அடர்ந்த புருவம், அதன் கீழே பதிந்து மோஹ அசடு வழியும் கண்கள்—சப்பை மூக்கு — மேலாக்கு ஒதுங்கிய நாணமற்ற மார்பு—தடித்த அந்த உதட்டின்மேல் படர்ந்த அரும்பு மீசை பட்டப் பகலில் தெரியாமல், அம் மங்கிய வெளிச்சத்தில் மாத்திரம் எப்படித் தெரிந்தது?

"'என்ன ஐயரே—?—'

"என் மூளைக் கொதிப்பில், எழுந்த எண்ணச் சுழலில், என்னென்ன உருவங்களோ தோன்றி மறைந்தன.

m211,N36.9
N43.8.4

"இரவும், பகலும், அம்மா, அப்பா—மிஸ் ஹேமா, அவள் மூக்குக் கண்ணாடி, — நெருப்பு, வெண்சங்கு—வேடுவச்சி — என்னவோ ஒரு பெரும் அலை எழுந்து —எல்லாவற்றையும் அடித்துக் கொண்டு போயிற்று. அவ்வலை நுரை உச்சியில், ஒரு காட்டரளியும் அலைந்து சின்னபின்னமாய்ச் சிதைந்து கிடந்தது. இத்தனைக்குமிடையில், 'என்ன ஐயரே, என்ன ஐயரே?—' என்று எள ளஞ் செய்யும் ஒரு குரல்.

"ஏதோ துக்கம் மாதிரி தொண்டையை அடைத்தது. என் கைகள் குறுகுறு என்றன. அப்புறம்—

"என் காதில் இரைந்த சமுத்திரத்தில், மனம் ஒரு வெட்ட வெளியா யிருக்கிறது. அடுத்தாற் போல், என் கைகள், அவளது கழுத்தில் இறுகி நெறுக்குவது தான் ஞாபகம் வருகிறது. பிறகு, எல்லாமே நல்ல ஞாபகந் தான். விழிகள் பிதுங்கி, மூக்கிலிருந்து ரத்தம் வழிந்து, நாக்குப் பிதுங்கி, வாயினின்று வெளியில் தொங்கிய பின்புதான், என் கைகள் தளர்ந்தன.

"ரயில்பாட்டுக்கு நல்ல வேகத்தில் 'கட்டக், கட்டக், கட்டக்' என்றீ தாளம் போட்டு ஓடியது. அபாயச் சங்கிலியை இழுத்து விட்டு, ஏதோ ஒரு மகத்தான காரியத்தை முடித்துவிட்டவன் போல், நெற்றி வியர்வையை, இரண்டு விரலால் வழித்து எறிந்து விட்டு, என்னிடத்தில் உட்கார்ந்தேன். பிறகு, அவர்களெல்லாம் வந்த போது, நான் முகத்தை மூடித் தேம்பித் தேம்பி அழுதுகொண் டிருந்தேன்.

"அப்புறம் என்ன? எல்லாம் பழசுதான். போலீஸ், சிறை, கோர்ட் விசாரணை—கலாட்டா எல்லாம்தான். அப்பாவின் மானம் முழுவதையும் பணத்தில் பாதியையும் கரைத்தேன். எனக்கு இருப்பதிலும் அக்கரையில்லை; இறப்பதிலும் அக்கரையில்லை. அப்பா ஓசத்தி வக்கீலாக ஏற்பாடு செய்தார். என் மூளை, சிறு வயதிலிருந்தே ஒரு 'தினுசு' தான், என்று அந்த வக்கீல் சாமர்த்தியமாய் நிரூபித்தார்.

"கடைசியில், என்னை ஆஸ்பத்திரியிலே சேர்த்தார்கள். நிரம்ப நாளிருந்தேன். நான் திரும்பி வருவதற்குள், அம்மா, கஷ்டம் தாங்க முடியாமல், இறந்து விட்டாள்.

"விடுதலை யடைந்து, வண்டியிலிருந்து வீட்டு வாசற்படியிலிறங்கியதும் என்னை யறியாமல் என் கண்கள், மாடி ஜன்னலுக்குத்தான் சென்றன. ஆனல், அந்தக் காட்டரளி மரம் இருந்த அடையாளமே, ஜாடாவுமில்லை; தரை மட்டமா யிருந்தது."

கொஞ்ச நேரம் மௌனமா யிருந்தோம். பிறகு ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு, துணியைத் தட்டி விட்டு அவர் எழுந்தார்:

"நான் மடையன்தான் என்று ஒப்புக் கொள்கிறேன். இப்பொழுது பைத்தியம் தெளிந்து விட்டது. ஆனல், ஒரு சந்தேகம்; பெரியவர்களெல்லாம், 'உணர்ச்சியை நம்பாதே' என்று படித்துப் படித்துப் போதிக்கிறார்கள்; ஆனல், பிறந்ததே ஓர் உணர்ச்சி, வளர்வதும் உணர்ச்சி, சாவதும் உணர்ச்சியே - இப்படியிருக்க, 'உணர்ச்சியை நம்பாதே' என்றால், அதன் அர்த்தம்தான் என்ன?—"

புதுப்பணக்காரன் சும்மா இருப்பானா? கிராமத்துக் கூத்திலே நடக்கும் ஒரு ரகளை. அது அந்தக் கட்டியக்காரனின் வேலை.

நமது தமிழ் நாடு

— வ. ரா.

எனக்கு, சுமார் ஆறு வயது பூர்த்தியாகி யிருக்கும். அதுவரைக்கும், தேர் திருவிழாக்களையும் உற்சவாதிகளையும் சரியாகப் பார்ப்பதற்கு, சந்தர்ப்பமே ஏற்பட்டதில்லை. உத்தமதானபுரத் திண்ணைப் பள்ளிப் படிப்பு, அதற்கு முக்கிய காரணம்.

எங்கள் ஊரில், பிடாரிகோயில் ஒன்று உண்டு என்று சொல்லியிருக்கிறேன். பிடாரிக்கு, 'காப்புக் கட்டு' உற்சவம். இது அனேகமாக, சித்திரை மாதத்தில் வரும். காப்புக் கட்டை அவிழ்க்கிற அன்றைக்கு, பள்ளு ஆடுவது வழக்கம்; கூத்து ஆடுவதும் உண்டு.

கூத்து என்பது இரவு முழுதும் இருக்கும். பள்ளு அனேகமாக, இரண்டு மூன்று நாழிகை வேலைதான். பிடாரிக்குக் காப்புக் கட்டும் காலத்திலேதான், ஊர் ஜனங்களுக்கு உற்சாகம். கடைசி நாளில், கூத்து இருக்கும்; அம்மன் அதாவது பிடாரி புறப்பாடு உண்டு. அதே நாளில் குடியானவர்களும் ஹரிஜனங்களும் கடா வெட்டி, பொங்கல் இடுவார்கள்.

இந்தக் காப்புக் கட்டுக்காக, அயலூரிலிருந்தும் பந்துக்கள் அழைக்கப்படுவார்கள். ஊர், அந்த ஒரு வார காலத்துக்கு, மிகவும் சுத்தமாயிருக்கும். தோரண அலங்காரங்களை, எல்லா வீடுகளுக்கு முன்னேயும் காணலாம். 'கந்தல் கிழிகள்' இல்லாத துணிகளை, அந்தக் காலத்திலேதான் காணமுடியும்.

பொங்கல் இடுவதற்காக, குடியானவ ஸ்திரீகள், அதிகாலையிலேயே ஸ்னானம் செய்து விடுவார்கள். இவ்வாறு மூழ்குவது அவர்களுடைய வழக்கம் அல்ல. கழனி வேலையோ அல்லது கூலி வேலையோ முடிந்த பின்புதான், அவர்கள் நீராடுவது வழக்கம். அதுவும் குளிக்க மட்டும்தான் செய்வார்கள். மாற்றுச் சேலைகள் அனேகருக்கு இருக்காது. எனவே, நீரில் நின்று கொண்டு, முதுகில் நீரை வாரித் தெளித்து, கைகால்களைக் கழுவிக் கொண்டு, குளிப்பை முடித்துக் கொள்ளுவார்கள்.

கூலி வேலை செய்யும் குடியானவப் பெண்களுக்கும் ஹரிஜன ஸ்திரீகளுக்கும் மாற்றுச் சேலைகள் இல்லாததால், அவர்கள் நீரில் அமிழ்ந்து குளிப்பதில்லை என்பது எனக்கு அப்பொழுது தெரியாது. சரியானபடி ஸ்னானம் செய்யச் சோம்பல்படும் முட்டாள் ஜனங்கள் என்று அவர்களைப் பற்றி, நான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

என்ன வித்தை செய்வார்களோ, அது எனக்குத் தெரியாது, பிடாரி காப்புக் கட்டுத் திருநாள் முடியும் அன்றைக்கு, இந்த ஏழைப் பெண்கள் புதுக்

'கண்டாங்கிகளை'க் கட்டிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் சாந்துப் பொட்டு வைத்துக் கொள்ளுவது இல்லை. மங்களூர்க் குங்குமம் என்று இப்பொழுது தெருவில், விற்பனைக்காகக் கூவிக் கொண்டு போகிறார்களே, அதைக் காட்டிலும் உயர்ந்த குங்குமத்தை, அவர்கள் நெற்றியில், விசாலமாக அணிந்து கொண்டிருப்பார்கள்.

ஏழைக் கூலிப் பெண்கள், ரவிக்கை போட்டுக் கொள்ளும் வழக்கம் அப்பொழுது இருந்ததில்லை. பட்டணப் பழக்க முள்ள ஓரிரண்டு பெண்கள் கிராமத்தில் வாழ்க்கைப்பட்டு, ரவிக்கையோடு, கிராமத்தில் சிறிதுகாலம் தான் தரிசனம் கொடுக்க முடியும். கிராமத்துக்கு வந்த சில மாதங்களுக்குள், பட்டணத்துப் பெண், தனது ரவிக்கையைப் பறி கொடுத்து விடுவாள். கிராமப் பிரசாரம் அவ்வளவு கடுமையானது!

அந்தப் பிரசாரத்துக்கு ஒரு சாம்பிள் தருகிறேன். இந்தப் பட்டணத்துப் பெண், அக்கிரகாரத்தின் வழியாகச் சென்றால், எல்லோரும் அவளை உற்றுப் பார்ப்பார்கள். வயது சென்ற பிராமண அம்மாள், அவளைக் கூப்பிட்டு, கிராமத்தில் எப்படி 'அகமுடையானுக்கும் அக்கம் பக்கத்தாருக்கும்' அடங்கி ஒடுங்கி நடக்க வேண்டும் என்பதைப் பற்றி, புராணம் படிப்பாள்.

அக்கிரகாரத்தின் வழியாகத் தான், ஊர்க் குளத்துக்கு, 'கிட்ட அடியாக', போக முடியும். எனவே, அக்கிரகாரத்துக் கிழவிகளின் வாய்க்கு அஞ்சி, பட்டணத்துப் பெண்கள், ரவிக்கைகளை இழந்து விடுவார்கள். குடியானவத் தெருவிலும், பட்டணத்து நாகரிகத்தைப் பற்றி, ஓயாத பிரசங்கம் நடைபெறும். "ரவிக்கை சோறு போடுமா?" என்பாள் கூனிக் கிழவி ஒருத்தி. "எங்க நாளிலே, ரவிக்கை ஏது? நகை ஏது? காதோலை கருமணி தான், நாங்கள் கண்டது. தோடு, ரவிக்கை, பூவேலை செய்த கண்டாங்கி, புழுங்கலரிசி பிடிக்காது என்று சொல்ற கதை—இதெல்லாம் இப்பதான்" என்று இன்னொரு கிழவி அடுக்கிக் கொண்டே போவாள்.

பட்டணத்துப் பெண்ணுக்கு, கிராமத்திலே எந்த ஆதரவும் இருக்காது. நல்லவள் போல இருக்கும் கிழவியினிடம் பட்டணத்துப் பெண், ஆதரவு தேடப் போனால், விபரீதமாய்ப் போய் விடும்.

"கிராமத்திலேதான் எல்லாம் விளைகிறது. பட்டணத்திலே, கப்பி ரோட்டுப் புழுதியைத்தான் பார்க்க முடியும். வராட்டிமுதல் எண்ணெய் வரையில், கிராமத்திலிருந்து பட்டணத்துக்குப் போகாவிட்டால், பட்டணம் "அல்லாக்காத்துப்போகும்" (கஷ்டம் அனுபவிக்க வேண்டும்) பட்டணத்துச் சனங்கள் நல்லாச் சாப்பிடறதேயில்லையே! ரவிக்கை போட்டுக்கிட்டா, உடம்புக்கு வியாதி வருமாம்! அப்படிச் சொல்லிக்கிறாக" என்று நீண்ட பிரசங்கம் செய்வாள் கிழவி.

மேலும், பட்டணத்துப் பெண்களுக்கு, கிராமப் பயிர்ச் செலவு வேலை ஒன்றுமே தெரியாது என்பது ஒரு பொதுவான எண்ணமாகும். "என்னத்துக்குப் பட்டணத்துச் சனியனை விலை கொடுத்து வாங்கிக்கிட்டு வந்து, தண்டச் சோறு போடணும்?" என்று குடியானவத் தெருவில், பெரிய

வர்கள் சொல்லிக் கொள்வார்கள். இப்படி எல்லாம் பேசுவது, அந்தக் காலத்து நாகரிகம்.

இவ்வாறு அசட்டுத்தனமாக அவர்கள் அப்பொழுது பேசினதிஞலோ என்னவோ, ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்ற கதையாக, இப்பொழுது, பெண்கள், 'பாடி' என்றும் ரவிக்கை என்றும் இரண்டுவகைத் தற்காப்புகளை அணிந்துகொள்கிருர்கள்.

பிடாரி கோயில் காப்புக்கட்டுத் திருவிழாக் காலத்தில், பொங்கல் உண்டு. தெருக் கூத்து உண்டு. அதோடுகூட, கரகம் உண்டு. இப்பொழுது கரகத்தில், தண்ணீர் ஒரு சொட்டாவது இருப்பதில்லை. கரகத்தைக் கையில் எடுத்து, இப்பொழுது ஆடுகிருர்கள். சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன், கரகத்தில், நீர் நிறைய இருக்கும். தலையில் வைத்துக் கொண்டு ஆடுவார்கள்.

எங்கள் ஊரில், பிரம்பையன் என்று ஒரு பூசாரி இருந்தார். அவர் மிதக் குடிப் பேர்வழி அல்ல. முழுக்குடி ஆசாமி. 'எல்லாம் பிடாரி ஆத்தா கிருபை' என்பார் பிரம்பையன். முழுக்குடிப் பிரம்பையன், தலையில் கரகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டால், அவர் வேறு ஆள் ஆகிவிடுவார். உதயசங்கராவது அஸ்தமன சங்கராவது, பிரம்பையனுக்குச் சரி சமானமாக, கால் போட முடியுமா?

நாகசுரத்தில் கரகப் பாட்டு உதயமாக வேண்டியதுதான்; பிரம்பையனுடைய கால்கள் தாமாகவே, தாளக்கட்டு விடாமல் நர்த்தனம் செய்ய ஆரம்பித்துவிடும். 'கற கற வென்று பறந்து செல்லுது நீல வேணிக் குதிரை' என்று தேசிங்கு ராஜன் கதையில் சொல்லுவதைப்போல, பிரம்பையனுடைய கால்கள் பம்பர ஆட்டம் ஆடும். தலைமட்டும் அசையாது.

இந்த வித்தையைப் பிரம்பையன் எப்படிப் பழக்கிக்கொண்டாரோ! பிரம்பையன், கையில் பிரம்புகொண்டு, கரகம் ஆடும் காட்சியைக் காண, சுற்றுவட்டாரப் பத்து மைலிலிருந்து, ஜனங்கள் வருவார்கள். கரக நாள் அன்றைக்கு, பிரம்பையனுக்கு இருபது துணிகளுக்குக் குறையாமல் கிடைக்கும். ரொக்கமாய், பத்து ரூபாய் கிடைக்கும்.

'இவ்வளவுதானு? இதைப் பெரிதாகப் பேச வேண்டுமா?' என்று சிலர் வியப்போடு கேட்கலாம். ஐம்பது வருஷத்துக்கு முன் கிடைக்கும் பத்து ரூபாய், இப்பொழுது நூறு ரூபாய்க்குச் சரி என்று சொல்லவேண்டும். நூறு ரூபாய் ஒரு நாள் இரவில் வருமானம் என்ருல், அது சிறிய விஷயமாகுமா?

பிடாரிக்கு விழா வந்தால், ஒரு விபரீதமும் கூட வரும். காப்பு அறுக்கிற நாளில் எருமைக் கடா ஒன்றை, பலி கொடுக்க வேண்டும் என்பது சம்பிரதாயமாம்! பிரஸ்தாப வருஷத்தில் தான், இது எனக்குத் தெரியும். தெரிந்தது இப்படித்தான்:

எங்கள் வீட்டில், கறுப்பன் என்ற மகா போக்கியன் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். அவர், என் தாத்தாவிடம் பேசிக் கொண்டிருந்தார். "இந்த வருசம், பிடாரி ஆத்தாவுக்கு நல்ல எருமைக் கடாவாகக் கிடைக்காது போலிருக்கு" என்ருர் அவர். "நம்ம கோணக் கொம்புக் கடாவைக் கொடுக்கிறதுதானே?" என்

ளூர் பாட்டனார். "பலிக்கு வீட்டு மாடு உதவாதுங்க. விலைக்கு வாங்கிப் பலியிடணுங்க" என்றார் கறுப்பன்.

கறுப்பன் சொன்னதில் விகடம் இருக்கிறது என்று எனக்கும் அவருக்கும் அப்போது தெரியவே தெரியாது. "விலைக்கு வாங்குகிற மாடும் (ஒரு) வீட்டு மாடு தான்" என்பது கறுப்பனுக்கு எப்படிப் புலப்படாமல் போயிற்று என்றுதான் எனக்கு இப்பொழுது (அப்பொழுதல்ல) சந்தேகம் வருகிறது.

"தாத்தா! நம்ம கோணக் கொம்புக் கடாவையா வெட்டப் போருள்?" என்று நான் அழுது கொண்டே கேட்டேன். என் அழுகையை, பாட்டனாரால் தாங்க முடியவில்லை. அந்த வருஷம் எருமைக் கடாப் பலி இல்லை.

தெருக்கூத்தில், பெரும்பாலும் மூன்று நாடகங்கள்தான் நடைபெறும்: ராமநாடகம், அரிச்சந்திர நாடகம், வள்ளி கலியாணம். வள்ளி கலியாணம் பின்னால் வந்து சேர்ந்துகொண்ட நாடகம். அரிச்சந்திர நாடகம் பெரும்பாலும் இருக்கும். இந்த நாடகத்தில் கட்டியக்காரன்தான் விகடகவி. அவனுடைய விகடத்துக்கு, ஒரு துக்கடாக் கொடுக்கிறேன்.

'மத்தளத் தோசை கிணுக் கிண்ணு' என்று சொல்லுவான். விகடம் என்ன என்கிறீர்களோ? 'மத்தளத்து ஓசை' என்றும் 'மத்தளத் தோசை' என்றும் பிரிப்பதுதான் விகடமாகும். கூத்து விடிய விடிய நடக்கும். ஊர் வண்ணான்பாடுதான் திண்டாட்டம். அவன்தான், கண்விழித்துக் கொண்டிருந்து, பெரிய அகல் விளக்குகளுக்கு எண்ணெய் வார்த்துக் கொண்டிருக்க வேண்டும். பெட்ரோமாக்ஸ் லைட் அப்பொழுது கிடையாது.

கூத்து ஆரம்பிக்குமுன், கட்டியக்காரன், கூத்துக்கு விஜயம் செய்திருக்கிற பிரமுகர்களின், அந்தஸ்துக் கிரமமாகச் சொல்ல வேண்டும். 'வரிசை தப்பிப் போனால், அவன் கிரிசை கெட்டுப் போவான்' என்று ஊரிலே சொல்லிக் கொள்ளுவார்கள். புதிதாக, அவன், யாரையாவது பிரமுகர்களின் ஜாப்தாவில் சேர்த்துக்கொண்டு விட்டால், போதும்! அன்றைக்குக் கூத்து நடக்காது. ஏகப்பட்ட குழப்பம் தான். 'புதுப் பணக்காரப் பயல் எப்படிப் பிரமுகன் ஆக முடியும்?' என்று கட்சி பேசுவார்கள்.

புதுப் பணக்காரன் சும்மா இருப்பானா? அவனுக்கு ஆட்கள் இருக்க மாட்டார்களா? ஏகப்பட்ட ரகளைதான். கூத்து நின்றுவிடும். கைக்குத்து, துவங்கி விடும். சமயம் பார்த்து, கூத்துக் காரர்கள் நழுவி விடுவார்கள். கட்டியக்காரன்பாடு திண்டாட்டம்தான். அவன் யாருடைய தூண்டுதலின் பேரில், புதுப் பணக்காரனை, பிரமுகர்களின் ஜாப்தாவில் சேர்த்தான் என்று மறுநாள் விசாரணை நடக்கும்.

கட்டியக்காரன் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, தெரியாத் தனத்தால், தான் இவ்வாறு செய்து விட்டதாக, மன்னிப்புக் கோருவான். புதுப்பணக்காரன் தூண்டினான் என்று சொல்லவே மாட்டான்.

கட்டியக்காரனுடைய இந்த இங்கித வினயத்துக்கு, சன்மானம் இல்லாமல் போய்விடுமா? பிடாரிக்காக ஆடும் கூத்து முடிந்த மறுநாள், புதுப் பணக்

காரன், தன் சொந்தச் செலவில், தனிக்கூத்து ஒன்று, தன் இடத்தில் வைப்பான். ஊர்ப் பிரமுகர்கள் போகாமலிருக்கலாம். ஆனால், கூத்தை மற்றவர்கள் பகிஷ்கரித்துவிட மாட்டார்கள்.

நாட்டாமைக்காரர்கள் தங்களுக்குள் அடித்துக் கொண்டதால், எளியவர்கள் கூத்தை விட்டுவிட முடியுமா?

அந்தக் காலத்தில், பொம்மலாட்டம் என்று ஒன்று உண்டு. அதை, இப்பொழுது வெகுவாகப் பார்ப்பதில்லை. புளியங்குடிக் குருக்களின் பொம்மலாட்ட செட், மிகவும் பிரசித்தி பெற்றது என்று தஞ்சாவூரில் சொல்லிக் கொள்ளுவார்கள். பொம்மலாட்டம் அனேகமாக, அரிச்சந்திர நாடகமாகவேதான் இருக்கும்.

இந்தப் பொம்மைகளில், சந்திரமதிப் பொம்மையை ஆட்டுவது தான் ரொம்பக் கஷ்டம். மொத்தம் கயிறுகள் இருபத்தைந்துக்கு மேலிருக்கும். சந்திரமதிப் பொம்மையை ஆட்டி வைப்பவன் நர்த்தனத்தில் தேர்ந்தவனாயிருக்க வேண்டும். சரியான கயிற்றைத் தளர்த்தியோ, சுருக்கியோ, சக்கரவட்டமாக்கியோ, இழுத்தால் தான், பொம்மை நன்றாகவும் பொருத்தமாகவும் 'ஆக்ட்' செய்யும்.

பொம்மலாட்டம் ஒரே இரவில் முடிகிற நாடகம் அல்ல. குறைந்தது பதினைந்து நாட்களாவது பிடிக்கும். அரிச்சந்திர நாடக மயான காண்டம் மட்டும், சுமார் மூன்று அல்லது நான்கு நாள் நடந்தாலும் நடக்கும். மயான காண்டத்துக்குப் பொருத்தமும் தேவையுமான பாட்டுகளை ஒரு நாளில் முடித்துவிட முடியுமா? அல்லது ஒரே நாளில், அழுது தீர்த்துவிட முடியுமா? நம்ம பெரியவர்கள் ரசிகர்க ளல்லவா! எந்தக் காரியத்தை, எப்படி, எவ்வளவு காலம் செய்ய வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியாதா!

★

சர்ச்சில் மயம் ஜகத்

சில காலத்துக்கு முன், பிரிட்டிஷ் பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சில், அமெரிக்காவில் வாஷிங்டனுக்குச் சென்றிருந்தார் அல்லவா; அப்போது இவருடைய ஒரு பேரனின் படம் 'லைப்' என்ற அமெரிக்கப் பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

"பயல் முகத்தில் நல்ல சுறு சுறுப்புக் காணப்படுகிறதல்லவா?" என்று, சர்ச்சிலை ஒரு நண்பர் கேட்டார்.

"ஆமாம்" என்றார் சர்ச்சில்.

"அதில் இன்னும் ஓர் ஆச்சரியம் என்னவென்றால், பயல் உங்கள் மாதிரியே இருக்கிறான்" என்று சொன்னார் நண்பர்.

"அதில் ஒன்றும் ஆச்சர்யம் இல்லை" என்ற சர்ச்சில், "பார்க்கப் போனால் எல்லாக் குழந்தைகளுமே என் மாதிரிதான் இருக்கின்றன" என்றார்.

யார் ராஜதந்திரி?

ராஜதந்திரி என்றால் யார் என்று 'வொர்ல்ட் நியூஸ்' என்ற ஆஸ்திரேலியப் பத்திரிகை பின்வருமாறு லட்சணங் கூறுகிறது: "ராஜதந்திரி யார் என்றால், முதல் கனவான் பொய்யே சொல்கிறார் என்று அறிந்தும், அக்கனவான் சொல்வதைத் தாம் நம்புவது போல் பாசாங்கு செய்யுமாறு இரண்டாவதொரு கனவானைக் கட்டாயப் படுத்தும் விதமாக, அந்த இரண்டாவது கனவான் தம்மை நம்பவில்லை என்று நன்கறிந்தவராகவே, அக்கனவானிடம் பொய் சொல்லக்கூடிய திறமை வாய்ந்த முதல் கனவான்தான்."

உடம்பும் மருந்தும்

குழந்தைகளின் கணை நோய்: கணை நோய், ஆங்கிலத்தில் 'ரிக்கட்ஸ்' என்று சொல்லப்படும். அது ஒரு புதிய நோய் அன்று. வெகு காலத்துக்கு முன் இருந்தே, மருத்துவர்கள் அதைப்பற்றி ஆராய்ந்து வந்திருக்கிறார்கள். 1650-ஆம் ஆண்டு வாக்கில் கிளிசன் என்பவர் எழுதிய ஒரு புத்தகத்தில், அதன் வர்ணனையும் கண்டிருக்கிறது.

கணை நோய் சாதாரணமாகப் பட்டணங்களில் வாழ்க்கை நிலைமைகள் மோசமாக வாய்க்கப்பெற்ற ஏழை வகுப்பினரிடையே தான் காணும் என்று, 'நல்வழி' கூறுகிறது.

கணை நோய் ஒரு குழந்தை நோய். அது குழந்தைகளுக்கு, அவர்கள் பிறந்த ஆறும் மாதத்திலிருந்து பதினெட்டாம் மாதத்துக்குள்ளாக, வரும். சில சமயம், இரண்டு வயது வரையிலும் கூட வரலாம்.

கணை நோயின் காரணம் இப்பொழுது திட்டமாகி விட்டது. உணவில் வைட்டமின்-ஏ போதிய அளவு, அல்லது சிறிதும், இல்லாமையே அந்தக் காரணம். வைட்டமின்-ஏ எந்த எந்த உணவுப் பொருள்களில் அகப்படுகிறது என்று பெற்றோர்களுக்குத் தெரிந்திருத்தல் வேண்டும். காட், ஹாலிபட், சுறா முதலிய மீன்களின் ஈரலிலிருந்து இறக்கப்படும் எண்ணெய்களில் அது அமோகமாக இருக்கிறது, நாம் சாதாரணமாக 'மீன் எண்ணெய்' என்பது காட் மீனுடையது. ஹாலிபட் மீனின் எண்ணெய் ஹாலிவரால் என்று அழைக்கப்படுகிறது. வாழைப் பழத்தில், வைட்டமின்-ஏ சுமாராக இருக்கிறது; அன்னாசிப் பழம், எலுமிச்சம் பழம், ஈச்சம் பழம், அத்திப் பழம், ஆப்பிள், ஆரஞ்சு இவைகளில் மிகவும் சொற்பமாக இருக்கிறது. அது வெண்ணெயிலும் பாலேட்டுக் கட்டியிலும், கைக்குத்தல் அரிசியிலும்கூட உண்டு. காய்கறி வகைகள் ஒன்றிலாவது அது உருப்படியாக இல்லை. மஞ்சள் முள்ளங்கி, முட்டைக்கோசு, லெட்டூசு, பசளை, தண்ணீர்விட்டான் ஆகிய சிலவற்றில் மட்டும், கொஞ்சம் இருக்கிறது.

கணை நோய்க்குக் கீழ்க் கண்ட குணங்கள் இருக்கும். குழந்தையால், ஒன்று அல்லது இரண்டு வயதுக்குப் பிறகும், உட்காரவோ நடக்கவோ முடியாது. அதற்குச் சரியான காலத்தில் பல் முளைக்காது. விசேஷமாக, இரவில் தலையிலும் கழுத்திலும் வெள்ளம் போல் வியர்வை காணும். மேலும், இருமலும், மார்ச்சளியும், வயிற்றோட்டமும், வயிற்று வலியும் உண்டாகும். ஆனால், கணை நோய், பெரும்பாலும், எலும்புகளில்தான் தன்னைப் பலமாகக் காட்டும்.

கணை உள்ள குழந்தைக்கு, அநேகமாக, மார்புக் கூடு கட்டியிருக்கும். மார்பெலும்பு, முன்னால் தள்ளிக் கொண்டு வந்திருக்கும்; குழந்தையைக் கவனமாகச் சோதித்தால், மார்பெலும் பின் பக்கங்களில் நெடுகலும் நெறி கட்டியிருப்பதைக் காண்போம். மார்பெலும்புடன் பழுக்கள் பொருந்தும் இடத்தில், மூட்டுகள் வீங்குவதுதான் இதன்

காரணம் ஆகும். தவிர, மார் பெலும்பின் இரண்டு பக்கங்களி லும் அடியிலிருந்து அக்குளுக்கு நேராக ஒரு பள்ளம் விழுந்திருக் கும். குழந்தை மூச்சு எடுக்கை யில், இது நன்றாகத் தெரியும். ஆனால், இந்தக் குறிகள் கணை நோய் ஒன்றுக்கு மட்டுமே காணுபவையல்ல என்று ஸர் வில் லியம் ஆஸ்லர் குறிப்பிடுகிறார். டான்சில்கள் அதிகமாக வளர்ந் துள்ள குழந்தைகளிடமும் இவை இருக்குமாம். ஆனால், இவைக ளோடு, அடியில் கண்ட குறிக ளும் இருக்குமானால், அது கணை நோய்தான்.

தலை வீங்கிப் பெரிதாகவும் சது ரமாகவும் தோன்றும். நெற்றி யோடு புருவத்துக்குமேல் புடைத் துக்கொண் டிருக்கும். பதினெட் டாம் மாதத்துக்குள்ளாக மூடி விட வேண்டிய உச்சிக் குழி, இரண்டு ஆண்டு வரையிலும் அதற்குப் பிறகும்கூட மூடா திருக்கலாம்.

இனி, கால் எலும்புகளும் விகா ரப்படுகின்றன. நளகம் (குதிரை முகம்), உடற் சுமையைத் தாங்க மாட்டாமல், வளைந்து விடுகிறது. மணிக்கட்டும் கணைக்காலும் வீங் குகின்றன. முதுகந்தண்டும் வளை கிறது. இதனால் குழந்தை உட் காரும் பொழுது, கூன் விழுகி றது. ஆனால், முதுகந்தண்டு கணை நோய்க்கு மட்டும்தான் கோணிக் கூனும் என்பதில்லை; அது பற் றிய வேறு பல நோய்களுக்கும் கோணும்.

பொதுவாக, கணை நோய் உள்ள குழந்தை, தன்னை எவரும் தூக்குவதை விரும்பாது; அழும். தன் பாட்டுக்குப் படுத்துக் கிடக் கவே, அது விரும்பும். இதற்குக் காரணம், அதன் உடம்பெல்லாம் நொந்து போய் விடுவதுதான். உடம்பு மிகுதியாக வியர்க்கும். அடிவயிறு தள்ளும். நோய் உள்ள குழந்தைகளில் அநேகம் எப்பொழுதும் சிடு சிடுப்பாக இருக்கும்; நன்றாகத் தூங்க மாட்டா; மெலிவாக இருக்கும். ஆனால், எல்லாமே அப்படி அல்ல. புஷ்டியான குழந்தைக ளுக்கும்கூட இந்த நோய் இருப்ப துண்டு.

தாய்ப் பால் குடிக்கும் குழந் தைகளுக்கு இந்த நோய் வருவது அபூர்வம். செயற்கை முறையில் உணவு ஊட்டப்படுபவைகளுக் கே, இது சாதாரணமாக வரும். ஊட்டப்படும் பசுவின் பால் நல்ல தரமாக இல்லாவிட்டால், நாள் தோறும் சிறிது மீன் எண்ணெ யையோ அல்லது ஹாலிவரால், ஸூப்பர் டி. கான்ஸண்ட்ரேட் போன்றவைகளையோ குழந்தைக் குக் கொடுத்துவர வேண்டும். ஹாலிவரால், ஒரு நாளைக்குப் பத் துச் சொட்டு வரையில் கொடுக்க லாம்.

சிகிச்சையில் ஒரு முக்கிய மான பகுதி, குழந்தையின் உண வில் வைட்டமின்-வ போதிய அளவு சேர்க்கப்படுவதே ஆகும். அது கிரீமாகவாவது, அல்லது மேலே கண்ட எண்ணெய் ரூபத் திலாவது கொடுக்கப்பட வேண் டும். ஒரு பாட்டில் பாலுக்கு ஒரு தேக்கரண்டி விகிதம் கிரீம் சேர்க்கப்பட வேண்டும். பாலில் தண்ணீர் கலந்திருக்கு மானால், கிரீம் மிக அவசியம். தினம் ஒரு கரண்டி மீன் எண் ணெயும் அவசியம்.

குழந்தை, வெளிச்சத்திலும் காற்றோட்டத்திலும் வாழ வேண் டும். மலக் கழிவு ஒழுங்காக இருக்க வேண்டும். தினம் ஒரு முறையாவது குழந்தையை வெந் நீரில் குளிப்பாட்ட வேண்டும்.

★



நா. அண்ணாமலை

நமது நாடு, நம் ஊர், அதன் மீது பாசம், பெருமை - இவை எல்லாம், நாம் தூரச் செல்லச் செல்ல உண்டாகிறது. நம் நாட்டையும் ஊரையும் விட்டு, சுமார் மூன்று வருஷகாலமாக ஆயிரத்தைநூறு மைல்களுக்கு அப்பால் இருக்கிறோம். பிறகு, அங்கிருந்து ஐந்துநாள் கடலில் பிரயாணம் செய்து நம் நாட்டை நெருங்கி வந்தோமானால், என்ன துடிப்பு உண்டாகிறது, தெரியுமா? ஆசை சொல்லி முடியாது. வேகமாகப் போகும் கப்பல் ஊர்வது போல் தோன்றுகிறது. இப்படி ஊர்வது மிகவும் சகிக்க முடியாமலிருக்கிறது. கடலில் குதித்துக் கப்பலுக்கு முன் நீந்திக் கரைக்குச் சென்று விடுவோமா என்ற அசட்டுத் தைரியம்கூட உண்டாகும்.

சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன் பினாங்கி லிருந்து 'ரசூலா' என்ற கப்பலில் நாகப்பட்டினம் நோக்கிப் பிரயாணம் செய்தேன். நாகப்பட்டினம்நெருங்க நெருங்க மேலே சொன்ன உணர்ச்சிகள் மிகுந்தன.

நாடு விட்டு நாடு செல்லும்போது இடையிலே தோன்றும் விசித்திரங்களில் அல்லது விபரீதங்களில் ஒன்று இந்தக் 'கஷ்டம் ஆபீஸ்.' பற்பல வேடிக்கை நிகழ்ச்சிகளுக்கு உலகெங்குமே பெயர் போனது இது. அதிகாரிகளை ஜனங்களும் ஜனங்களை அதிகாரிகளும் ஏமாற்றவோ மிரட்டவோ பரிபூர்ணப் பிரயத்தினம் செய்யும் இடங்களில் ஒன்று இது. இதன் கதைகள் எல்லாமே ரஸமானவைதான்.

நமது பூமியிலே முளைத்து நீண்டு உயரமாகத் தெரியும் நம் ஊர்ப் பனைமரத்தைக் கண்டவுடன் ஒரு நண்பர் எல்லோரிடமும் அதைச் சுட்டிச் சுட்டிக் காட்டி, குதூகலத்துடன் குதிக்கிறாரே, அது என்? 'நாகூர் ஆண்டவரின் கோபுரம் தெரிகிறது!' என்று ஜனங்கள் கூச்சல் இடுகிறார்கள்; ஐந்து நாளாய்ச் சாப்பிட முடியாமல் படுத்தபடுக்கையாகக் கிடந்த நண்பர் ராமநாதன், அது கேட்டுத் திடீரென்று திடசாலியாக எகிறி முன் வந்து பார்த்து மகிழ்ந்து இடி இடி என்று சிரிக்கிறாரே, அது எப்படி முடிந்தது? இவை எல்லாம் எதை உணர்த்துகின்றன? நமது இயற்கை உள்ளத்தை, நாட்டன்பை.

இந்த ஆசை, பாசம், உணர்ச்சி இவையெல்லாம் அந்த நாகப்பட்டினம் சுங்கத் தீர்வை அதிகாரிகளுக்குத் தெரியுமா? தெரிந்தால், காலை எட்டு மணிக்குக் கப்பலை விட்டிறங்கிய பிரயாணிகளைச் சோதனை செய்ய வேண்டுமென்ற காரணத்துக்காக இரவு பத்து அல்லது பதினோரு மணி வரையில், சப்ஜெயிலில் அடைத்து வைப்பதுபோல் அடைத்து வைப்பார்களா? 'கஸ்டம் ஆபீஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் இந்தச் சுங்கத் தீர்வைக் காரியாலயத்தின் பெயரைச் சரியாக உச்சரிக்கத் தெரியாததால்தான், சில நண்பர்கள் அதைக் 'கஷ்டம்

ஆபீஸ்' என்று கூறுவதாக, வெகு நாள் வரை நான் நினைத்திருந்தேன். நேரே காணும்போது தான் ரகசியம் விளங்குகிறது. உண்மையிலேயே அது 'கஷ்டம் ஆபீஸ்' தான்.

அன்று நாங்கள் சுமார் இரு நூறு பேர் இந்தக் 'கஷ்டம் ஆபீ'ஸில் பரிசோதனைக்காகவும், பின்பு அவர்கள் நோக்கப்படி போடும் தீர்வைக்குப் பணம் கழற்றுவதற்காகவும் காத்திருந்தோம்.

'கஷ்டம் ஆபீஸ்' உத்தியோகஸ்தர் ஒருவர் எதையோ பறிகொடுத்தவர்போல் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார். அவருடைய ஓட்டத்துக்கு இடையூறாகப் பாதையில் கிடந்த ஒரு குரிச்சியை ஆத்திரத்துடன் தூக்கி எறிந்தார். குரிச்சியின் கால் முறிந்தது. முறிந்த சத்தம் கேட்ட திக்கை எல்லோரும் நோக்கினோம். என்ன ஆச்சர்யம்! முறிந்த குரிச்சியின் ஓட்டைக் காலுக்குள்ளேயிருந்து சலசல என்று பவுன்கள் கொட்டின. எல்லோரும் ஸ்தம்பித்து விட்டோம். குரிச்சிக்குச் சொந்தக்காரர், 'கஷ்டம் ஆபீஸை' ஏமாற்ற வேண்டுமென்று குரிச்சிக் காலைக் குடைந்து அதற்குள் பவுன்களைத் திணித்து மூடிக் கொண்டு வந்திருக்கிறார். அவருடைய துர்அதிர்ஷ்டம் இப்படி நேர்ந்துவிட்டது. என்ன செய்வது! அதிகாரியைப் பின்தொடர்ந்தார், பூசாரியைப் பின்தொடரும் ஆடுமாதிரி. பலன் இல்லை; பவுன்கள் பறிமுதலாயின.

இனி என்ன ஆகுமோ என்று நாங்கள் பயந்தோம். காரணமில்லாமல் எங்கள் குரிச்சிகளின் கால்களையும் அந்தக் 'கஷ்டம்' அதிகாரி ஒடித்துப் பரிசோதிக்க வேண்டுமென்றால், என்ன செய்வது? இதை நினைக்க நினைக்க, எங்கள் எல்லாருக்குமே உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது. எனக்குக் கொஞ்ச தூரத்தில் இருந்த ஒரு பிரமுகர் ஒரு பெரிய கல்யாணத் துணி விசிறியால் ஓயாமல் விசிறிக்கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் போய் உட்கார்ந்தேன். இதற்குள் பல 'கஷ்டம்' அதிகாரிகள் படை எடுத்து வந்து, திருடர்களை வளைத்துக்கொள்ளும் போலீஸ்காரர்களைப் போல் எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

எனக்குப் பக்கத்தில் விசிறிக் கொண்டிருந்த செட்டியாரின் அருகில் ஒரு 'கஷ்டம்' அதிகாரி வந்து, மேலும் கீழும் உற்றுச் சந்தேகக் கண்ணோடு பார்த்தார். பிறகு, செட்டியாரிடமிருந்த பெரிய விசிறியைக் கேட்டு வாங்கிக்கொண்டு, "என் ஐயா, பல சிறு ஓலை விசிறிகள் உங்களுக்குப் பக்கத்தில் கீழே கிடக்க, இவ்வளவு பெரிய விசிறியினால் என் சிரமப்பட்டு விசிறிக் கொள்கிறீர்கள்?" என்று கேட்டார். அவர் கேட்டு முடிக்கு முன்பே, செட்டியார் பரபரப்புடன், "அதில் ஒன்றுமேயில்லை, ஸார்; ஒன்றுமேயில்லை" என்று பொரிந்தார். "ஓ! அப்படியானால் இதில் ஏதோ சூதிருக்கிறது" என்று கூவிய 'கஷ்டம்' அதிகாரி, விசிறியின் துணியைப் 'பர்' என்று கிழித்தார். 'கிர்' என்று சில சிறு பொட்டணங்கள் கீழே வந்து விழுந்தன. பொட்டணங்களைப் பிரித்தால், அத்தனையும் வைரங்கள்! அதிகாரியின் முகம் மலர்ந்தது; செட்டியாரின் தலை குனிந்தது. "என்னையா சங்கதி" என்றார் 'கஷ்டம்' அதிகாரி. பரீட்சையில் முழிக்கும் பையன் மாதிரி, செட்டியார் திறுதிறு என்று

விழித்தார். என்ன செய்து மென்ன? வைரம் பறிபோயிற்று.

இந்த இரண்டு சம்பவங்களுக்கும் பிறகு, ஆங்கிலத் துரைமார்கள் அனைவரும் 'இந்தியத் துரைமார்கள்' புடை சூழ எழுந்தருளி, சாமான்கள் சோதிப்புப் படலத்தைத் தொடங்கினார்கள். புதுப் புதுச் சந்தேகங்கள் அவதாரமாயின. எங்கள் சாமான்களுக்குப் பிடித்தது சனியன். நாற்காலிகள் ஒடிக்கப்பட்டன; பெட்டிகள் பிய்க்கப்பட்டன; மெத்தைகள், தலையணைகள் கிழிக்கப்பட்டு, உள்ளிருந்த பஞ்சுக்கு விடுதலை அளிக்கப்பட்டது.

ஓர் ஆங்கிலத் துரை, ஒரு பெட்டியைப் பரிசோதித்தார். பெட்டியின் சொந்தக்காரர், நாட்டுக் கோட்டைச் செட்டியார். வயது சுமார் முப்பதிருக்கும். நன்றாக ஆங்கிலம் கற்றவர். செட்டியாரின் பெட்டியில் மேலாக வைர நகை அடங்கிய கைப்பெட்டி ஒன்று வைக்கப்பட் டிருந்தது.

துரை எல்லாச் சாமான்களுக்கும் தீர்வை போட்டார். அவர் எடுத்த வைர நகையை ஆறுயிர ரூபாய் மதிப்பு வைத்து இரண்டாயிரத்தைநூறு ரூபாய் தீர்வையும் விதித்தார். செட்டியார் நண்பர், "அது அசல் வைரமல்ல. ரங்கூன் கெமிகல் வைரம். என் கணக்குப்பிள்ளைக்காக வாங்கியது. அது ஆறுயிரம் ரூபாய் விலையுள்ளதல்ல. ரூ. 200 தான் பொறும்" என்று வெகுநேரம் வாதாடினார். துரை ஒப்புக்கொள்ள வில்லை; "யாரை எமாற்றுகிறாய்?" என்று ஆவேசமாகப் பேசி, "பணம் கட்டுவதைத் தவிர, வேறு வழியில்லை" என்று சொல்லி விட்டார். பார்த்தார் நண்பர். கொஞ்ச நேரம் யோசித்தபின், "சரி; இப்பொழுது என்னிடம் பணம் இல்லை. ஊருக்குத் தந்தி கொடுத்து நாளைக்கு வரவழைத்துத் தீர்வை கட்டுகிறேன். சாமானைப் பெற்றுக் கொண்டு ரசீது கொடுங்கள்" என்று கேட்டார். துரையும் அதற்குச் சம்மதித்து, உடனே "ஆறுயிரம் ரூபாய் மதிப்புள்ள அசல் வைரம் பெற்றுக் கொண்டிருக்கிறேன். இதற்குத் தீர்வை ரூபாய் இரண்டாயிரத்தைநூறு கட்டிவிட்டு, இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்" என்று எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.

உண்மையில் அது அசல் வைரமல்ல. ரங்கூன் கெமிகல் வைரம் தான். ஆனால், துரையின் 'கஷ்டம் ஆபீஸ்' சந்தேகக் கண்ணுக்கு அது அசல் வைரமாகத் தோன்றி விட்டது. "என்ன செய்யலாம்! செட்டியாரின் துர்அதிர்ஷ்டம்!" என்று நாங்கள் பேசிக் கொண்டோம்.

மறுநாள், நண்பர் இரண்டாயிரத்தைநூறு ரூபாயைக் 'கஷ்டம் ஆபீ'ஸுக்குக் கொண்டு வந்தார். நாங்களும் இன்னும் 'கஷ்டம் ஆபீஸ்'ரால் விடுதலை செய்யப்படாததால், அங்கே அடைபட்டுக் கிடந்தோம். செட்டியார் நண்பர் அந்த ஆங்கிலத் துரையிடம் சென்று, தீர்வை கட்ட ரூபாய் கொண்டுவந் திருப்பதாகவும், வைரத்தை எடுக்கும்படியும் சொன்னார். துரை வைரத்தை எடுத்துக் கொடுத்தார். நண்பர் நாலுதரம் பார்ப்பதுபோல் பாசாங்கு செய்து, பிறகு கம்பீரமாகத் தலை நிமிர்ந்து, துரையை நோக்கி "இது என் வைரமல்ல. என்னுடையது அசல் வைரம். இது ரங்கூன் கெமிகல் வைரம். என்னுடையதைக் கொடுங்கள்" என்றார். துரை குதித் தெழுந்தார்; கொம்பு கிடுகிட்டிச் சத்தம் கேட்ட மஞ்சு விரட்டி மாடு

மாதிரி துள்ளினர். சொல்மாரிகள், வசை புராணங்கள் எல்லாம் ஆங்கிலத் துரையின் வாயிலிருந்து குபுகுபு என்று கிளம்பின. ஆனல், செட்டியார் நண்பர் துளியும் மசியவில்லை. கடைசியில் வைர பரிசோதகர் வரவழைக்கப்பட்டார். அவரும் "இது அசல் வைரமல்ல. இருநூறு ரூபாய் தான் பொறும்" என்று சொல்லி விட்டார். ஆளும் ஜாதியைச் சேர்ந்தவரானாலும் அகப்பட்டுக் கொண்டால் என்ன செய்வது? துரை கெஞ்சினர். செட்டியார் மிஞ்சினர். விஷயம் கோர்ட்டேறியது.

கோர்ட்டில் துரை சொல்லிய வாக்கு மூலம்: "நான் செட்டியாரிடம் வாங்கி வைத்தது அசல் வைரம்தான். ஆறுயிரம் ரூபாய் விலையுள்ளதே. ஆனல், இரும்புப் பெட்டியி லிருந்து யாரோ அதைக் கையாடி விட்டார்கள்."

நீதிபதியின் தீர்ப்பு: "செட்டியாருக்கு, துரையின் ரசீதுப்படி, துரை ஆறுயிரம் ரூபாய் கொடுக்க வேண்டியது. செட்டியார், ரூபாய் இரண்டாயிரத்தைநூறு தீர்வை கட்ட வேண்டியது."

துரை என்ன செய்வார், பாவம்! அப்படிச் சொல்லாவிட்டால்; அவருக்கு வேலை போய் விடுமாம்.

செட்டியார் நண்பர் ரூபாய் ஆறுயிரத்தைப் பெற்றுக்கொண்டு தாராளமாக இரண்டாயிரத்தைநூறு ரூபாய் தீர்வையைக் கட்டினர்.

செட்டியார் நண்பரிடம், "பேஷ்! அன்று நரி முகத்தில் விழித்தீர்கள்போல் இருக்கிறது. நாலாயிரத்து முந்நூறு ரூபாய் சுலபமாய்த் தட்டி விட்டீர்கள்" என்று சொல்லி, நாங்கள் அவரைப் பாராட்டினேம்.

அவரோ "ஆமாம். ஆனல், அநியாயமாக அந்த அருமையான ரங்கூன் கெமிகல் வைரம் போய் விட்டதே. எங்கள் கணக்குப் பிள்ளைக்கு என்ன சமாதானம் சொல்லுவது? அதுதான் வருத்தமா யிருக்கிறது" என்ருர்.

உண்மைதானே; இல்லையா?

★

பழிக்குப் பதில்

பிரிட்டிஷ் கடற் படை வீரன் ஒருவனுக்கு அமெரிக்கக் கடற் படை மீது ஆத்திரம் வந்தது. சில அமெரிக்கக் கடற்படை வீரரிடம் நேரே சென்ருன். அமெரிக்காவையும் அமெரிக்கக் கடற் படையையும் கண்டபடி திட்டினன்.

அமெரிக்க வீரர்கள் கோபங் கொள்ள வில்லை. சாந்தமாகவே இவனை உபசரிக்கத் தொடங்கினர்கள். இவனுக்கு விருந்து பண்ணி, மது வகைகளையும் நிறைய வாங்கிக் கொடுத்தார்கள். மது மயக்கத்தில் பிரிட்டிஷ் வீரன் வெறி கொண்டிருக்கையில், இவனது மார்பிலே ஏதோ வேடிக்கையாகப் பச்சை குத்தியும் விட்டார்கள்.

பிரிட்டிஷ் வீரன், மயக்கம் தெளிந்தபின்பு, தனது மார்பைப் பார்த்தான். அதிலே ஒரு பெரிய அமெரிக்க யுத்தக் கப்பலும் அதன் கீழே "அமெரிக்கா நீடூழி வாழ்க!" என்ற வசனமும் பச்சை குத்தப்பட்டிருக்கக் கண்டான்!

பித்தரின் பாக்கியம்

"பித்துப் பிடித்த மனிதர்கள், தெளிந்த மனமுடைய மனிதர்களைக் காட்டிலும், அதிக எளிதாகத் தங்களுடைய நோக்கங்களை அடைந்து விடுகிருர்கள். ஏனெனில், தர்ம ரீதியான இடையூறுகள் எவற்றையும் அவர்கள் லட்சியம் செய்வதில்லை; மானம், உண்மை, மனச்சாட்சி, பயம் கூடத்தான், இந்த எதுவும் அவர்களுக்குக் கிடையாது."—லியோ டால்ஸ்டாய்.

'பஞ்ச பாண்டியர்'

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

விதி, விதி என்பர்; பூர்வ ஜன்ம பூஜாபலன் என்பர்; எனினும், விதியை மதியால் வெல்லலாம் என்றும் இயம்புவர். தெய்வ சம்மதம் என்றும் சொல்லுவார்கள். பாண்டி நாட்டின் விதியை, பஞ்ச பாண்டியரின் பூஜா பலனை, தெய்வம் வரையறுக்கிறது. கயத்தாற்றூர்ப் பெருமாள், பஞ்சபாண்டியரைக் கைவிடுகிறார்; மதுரை நாயக்க வமிசத்தின் பக்கம் பரிவு காட்டுகிறார். ஆச்சரிய மல்லவா? சரித்திர நிகழ்ச்சியில் இதன் விவரம் பார்ப்போம்.

மாபாரதகாலந்தொட்டு மதுரையம்பதி பாண்டிய மன்னவரின் பழம்பதி. பதினாலாம் நூற்றாண்டிலே, வட பாரிச முகம்மதியர் படாடோபமாக வந்து, மதுரைப் பதியில் புகுந்து, பாண்டிய வேந்தரைத் தென்காசிப் பக்கம் துரத்திவிட்டனர்; இரண்டு தலைமுறை மதுரையிலிருந்து செங்கோலும் (!) செலுத்தி நின்றனர். பின்னர், ஹொய்சால வமிசத்தார் வெகுண்டெழுந்து, முகம்மதியரை வெருட்டியடித்தனர். அதன்பின் பாண்டி வளநாடு விஜய நகர சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டது.

அப்போது பாண்டிய மன்னனாக இருந்தவன் சுந்தர குமாரன். அவன் வமிசம் முளையற்றுப் போய்விட்டது. விஜயநகர சாம்ராஜ்யத்தின் பிரதிநிதியாக, மதுரையிலே விசுவநாத நாயக்கர் முடிசூடிக்கொண்டார். அரிய நாதமுதலியார் அவருக்கு உற்ற துணை; உகந்த பிரதானி; உயர்ந்த தளவாய். புராதன வமிசம் மறைந்து, புதிய வமிசம் தலையெடுக்கையில், அளவிலா அழிம்புகள் நிகழும்; ஆறலைப் போரும் பெருகுவர்; தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரனாகத் தாண்டவமாடுவான்.

அங்கிலையில் பாண்டிய மன்னவனது காதல் கிழத்தியின் குமாரர் ஐவர் கச்சை கட்டிக் கிளம்பினர்; வேற்றரசு முளைப்பதா என்று சீறினர்; அன்னிய அரசைத் தவிடுபொடி பண்ணுவோம் என்று தருக்கினர்; பரம்பரையான சுயவரசை நிலைநாட்டுவோம் என்று நிமிர்ந்தனர்; கள்ளர், மறவர், தொட்டியர், பரவர், வடுகர் முதலிய வீரரைத் திரட்டினர்; பாண்டி நாட்டுக்குத் தாமே உரிமையாளர் என்று முரசு கொட்டினர்; மானமதுரை, பாளையங்கோட்டை, திருநெல்வேலி, இந்த இடங்களை வசஞ்செய்துகொண்டனர்; வீரக் கொடி தூக்கி, வெற்றிக் கொடி நிலைநாட்டவும் முற்பட்டனர்.

அரியநாத முதலியாருக்கு அச்சம் பிறந்துவிட்டது. "விஜயநகர வேந்தன் கிருஷ்ண தேவராயனிடம் வாக்களித்து வந்தோமே; அவ் வாக்குப் பொய்ப்பின், நமது வீரம் என்னாகும்? மீண்டும்

பாரத பூமியின் மகா காவியமான பாரதத்தின் நாயகர் ஐவர். அவரே போன்று நம் மதுரையம்பதியிலும் ஓர் ஐவர் பூத்தனர். அவர் பஞ்ச பாண்டவர்; இவர் பஞ்ச பாண்டியர். அவர் கதையிலே காணும் வீரத்துக்கு இவர் கதையிலே காணும் வீரம் ஏதும் சளைத்ததன்று. எல்லாம் கயத்தாற்றுப் பெருமாளின் திருமுன்னே நடந்த கதையாகும்.

முகம்மதியர் மொய்ம்முடன் முடுகி வர விடுவதா? காதல் கிழத்தியரின் மக்களாயினும், பஞ்சபாண்டியரின் தேசபக்தியே தேசபக்தி! தேசாபிமான வெறியின் முன்னே, நமது வீரமும் வலிமையும் என்னுகும்! என்ன தர்மசங்கட நிலைமை இது! நமது ராஜபக்தியின் முன்னே எதிரிகளின் தேசாபிமானம் எடுப்பாக நிற்கிறது! சோற்றுக் கடனைக் கழிப்போம்; கடமையை ஆற்றுவோம்'' என்று அரியநாத முதலியார் போர்முனையில் குதித்தார்.

கயத்தாற்றின் அருகே ஆறு மாத காலம் கடுஞ் சண்டை நடந்தது. பஞ்சபாண்டியரை மடக்க முடியவில்லை. இரு பக்கத்திலும் எண்ணிறந்தோர் மாண்டு வீழ்ந்தனர். கயத்தாற்றின் அருகே குருதியாறு பெருக்கெடுத்தது; சிர மலைகள் குவிந்தன; கரி பரிகளும் ஆங்காங்கே சிறு குன்றுகளேபோல் செத்து வீழ்ந்தன. உழவுக்கும் தொழிலுக்கும் உரிய ஆள்பலம் குறையலாயிற்று. அந்நிலையில் தளவாயின் தன்மை கண்டு, விசுவநாத நாயக்கரும் வந்துசேர்ந்தார் ஒரு பெரும் படையுடன்.

மீண்டும் மும்முரமாக மூன்று மாதகாலம் மொய்யமர் நடந்தது. அப்போரில் நேர்ந்த உயிர்ச் சேதம் அம்மம்ம! உரைக்குந்தரமன்று. பொருள் சேதமும் புகலும் தரத்ததன்று. தேசாபிமான மேலீட்டினுல் பஞ்ச பாண்டியரின் படைஞர் உயிரைத் துரும்பாக வழங்கினர்; உடலைச் சுதந்தர அக்னி குண்டத்தில் அடுக்கினர்; குருதியையும் ஆகுதிபோல் சொரிந்தனர்; பகைவரை வீச்சொன்றுக்குப் பத்தும் இருபதுமாக வெட்டி வீழ்த்தினர். விசுவநாத நாயக்கருக்கும் அரியநாத முதலியாருக்கும் திகைப்பு மேலிட்டு விட்டது. உடும்பு கையை விட்டால் போதும் என்று விசுவநாதர் வெதும்பினர். அரியநாதரோ அனைத்துங் கண்டு அங்கலாய்த்தார். நாடு வறண்டு போவதைக் கண்டு யாரே சகிப்பர்?

முடிவில் இரு திறத்தாருக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. "எதிர் எதிராக இரு சேனைகளும் நின்று சமர் செய்தல் வேண்டாம். கயத்தாற்றுப் பெருமாளின் சந்நிதிக்கு எதிரே யுள்ள மைதானம் செல்வோம். இரு பக்கத்தாரும் எதிர் எதிராக நிற்போம். ஒவ்வொரு கட்சியி லிருந்தும் ஒப்பற்ற ஒரு வீரன் முன் வரட்டும். அந்த இருவரும் பெருமாளின் முன்னின்று போர் புரியட்டும். எவன் வெற்றி மாலை சூடுகிறுனே, அவன் கட்சியே அரசில் ஆதிக்கம் பெற வேண்டும். உடனே எதிர்க் கட்சியார் போரொழிந்து தோல்வியை ஒப்புக்கொண்டு அடங்கி வாழ வேண்டும் என்பதே ஒப்பந்தத்தின் சாரம்.

பாரதபூமியின் சரித்திரத்திலே பானிபட்டு (Panipat - பாணீபதம்) எனும் நகரம் பிரசித்தி பெற்றது. ஒரு முறை, இரு முறை, மும்முறை அங்கே பெரும் போர் மூண்டது. அப்போது இந்தியாவின் தலைவிதி நிர்ணயமாயிற்று; சுதந்தரமும் பறி போயது; வேற்றரசே வீறு கொண்டது. முதல் பாணீபத யுத்தத்தில் மொகலாய பாபர் வெற்றி மாலை சூடினன்; இங்கே தன் வமிச ஆட்சியை நிலை நாட்டினன்!

இரண்டாவது பாணீபத யுத்தத்தில் ஹெமு எனும் ராஜபுத்திரன் கறுவி எழுந்தான்; இலட்சக் கணக்கான வீரர் அவனைச் சார்ந்து நின்றனர்; சுயவரசை நிலை நாட்டவே அவன் போராடி

ஞன். பாட்டன் பாபர் நாட்டிய அரசைக் காக்கவும், தன் ஆதிபத்தியத்தை நிலை நிறுத்தவும் அக்பர் சக்கரவர்த்தி அருஞ்சமர் ஆற்றினன்; அக்பரால் ஹெமுவை வெல்ல இயல வில்லை. முடிவில் மாய வஞ்சனை, படுமோசம் நிகழ்ந்தது. அதனால் ஹெமு தோல்வியுண்டான். எனினும், நாட்டு மக்களை, வீர ராஜபுத்திரரைக் கட்டி அணைத்துக் கொண்டு கண்ணியமாக நடந்தாலொழிய இந்தியாவிலே காலந்தள்ள முடியாதென்று அக்பர் அறிவு கொண்டான்.

மூன்றும் பாணீபதப் போரிலே மகாராஷ்டிரர் அனைவரும் ஒருபுறம்; முகம்மதியர் அனைவரும் ஒருபுறம். பிரமாதமான, பயங்கரமான, படுமோசமான போர் மூண்டது. அங்கும் துரோகமே விளைந்தது. பதினாயிரக் கணக்கில் வீரர் மடிந்தனர். வீர மகனொருவனை இழவாத மகாராஷ்டிரக் குடும்பம் மருந்தினுக்கும் இல்லை. முகம்மதியரும் கை பிசைந்து, கதி யாதாமோ என்று ஏங்கி நின்றனர். முடிவிலே வீரமகள், விஜயலட்சுமி, மகாராஷ்டிரரைக் கடைக் கணிக்க வில்லை. தேசத்தின் தலைவிதி விபரீதமாக முடிந்தது. தென்னாட்டின் சரிதத்திலும் கயத்தாறு அத்தகைய நிலை வாய்ந்தது.

கயத்தாற்றுப் பெருமாளின் சந்நதியிலே இருதிறத்துப் படைவீரர் அனைவரும் குழுமினர்; பிரபுக்களும் வந்து கூடினர்; பொது மக்களும் வந்து சேர்ந்தனர் வேடிக்கை காண. தெய்வ சம்மதம் எப்படியோ என்று காணப் பலருக்கும் ஆவல் மிகுந்தது. பரம வைரிகளான இருதிறத்தாரும் நிகழ்த்தும் தனிப் போரைக் காணும் ஆச்சரியமும் விஞ்சியது. விஜயநகரஸாம்ராஜ்யப் பிரதிநிதி, மதுரைப் பதிக்கு முடி சூடிக் கொண்ட விசுவநாத நாயக்கர், முன்வந்தார்; மார்தட்டித் தோள் தட்டிக் கோதாவில் இறங்கினர். அவருக்கு முன்பாக ஐம்பதாண்டுக்கு மேலான அரியநாத முதலியார் குதித்தார். இருவருக்கும் வாக்குவாதம் நிகழ்ந்தது. "முடி சூடிக் கொண்டவனே முதலில் இறங்க வேண்டும்" என்றார் விசுவநாதர். 'அன்று அன்று; பிரதானியும் தளபதியுமான நானே முதலில் இறங்க வேண்டும்' என்றார் அரியநாதர்.

பஞ்ச பாண்டியரில் ஒருவன், பாண்டவ வீமனேபோல் புயவலி படைத்தவன், தென்பாண்டி வீமன் என்னும் சிறப்புப் பெயர் கொண்டவன், பஞ்சபாண்டியரின் பக்கம் தனிப்போருக்கு முன்வந்தான். வந்ததும், சபையோர் அனைவரையும் (வைரிகள் உட்பட) வணங்கினன்; காதல் கிழத்தியின் மகனே யாயினும் பரம்பரை யரசைக் காத்தல் கடன் என்றான்; தேசப்பற்றுக் கொள்ளுதல் தீமையோ என்றான். ஜயித்தால் சிம்மாசனம், இல்லையேல் வீரசுவர்க்கம் என்று கர்ஜித்தான்; அனைவரும் ஆசி கூற வேண்டுமென்று கையெடுத்துக் கும்பிட்டான்; பெருமாளையும் 'பெருமானே, என் கடமையை ஆற்றுகிறேன். உன் அருள் யாருக்கோ?' என்று இறைஞ்சினன். சோதரனது மனநிலை கண்டு, மற்றைச் சோதரரோ மெய் சிலிர்த்தனர்; மனம் குளிர்ந்தனர்; மகிழ்வு எய்தினர்; மகாவிஷ்ணுவையும் வணங்கினர். மற்றையோரோ, "என்னே தேசபக்தி! என்னே சுதந்தர வெறி! என்னே பரம்பரைப் பற்று! தாசி மகனயினும் தலை சிறந்தவனே" என்று

வாழ்த்தினர்; மீனுட்சியம்மையை வழுத்தினர்; ஆலவாய்ப் பெருமானைத் துதித்தனர்.

விசுவநாதரும் தென்பாண்டி வீமனும் ஒரு ஜாமநேரம் பல வகையான போர் புரிந்தனர்; முதலில் வாட்போர்; பின்னர் மற்போர். இருவருக்கும் காயம், எங்கும் காயம், குருதி வெள்ளம். ஒருவருக்கொருவர் சளைக்கவில்லை. கர்ஜனை புரிந்தனர்; கம்பீரமாகத் தாக்கினர்; தர்ம யுத்தமே புரிந்தனர். ஒருவரை ஒருவர் வென்று கொல்வதே நோக்கம். இருவருக்கும் உடல் களைப்பு வந்தது. மனம் களைக்கவில்லை. சாரையும் பாம்பும் போல் இருவரும் மல்யுத்தம் புரிந்து புரண்டனர். உடல் எலும்புகள் நறநற வென்று முறிந்தன. ஒருவர் குருதி மற்றவர் முகத்தில் பாய்ந்து, கண்ணை மறைத்தது. பல சொல்லி என்ன?

விசுவநாதர் படுகாயமுண்டார்; தென்பாண்டி வீமனும் அப்படியே. பெருமாளின் கருணை விசுவநாதரின் பக்கமே நின்றது. வீமன் உயிர் விடுத்தான். ஏனைய சோதரர் நால்வரும் 'தெய்வம் நம் பங்கில் இல்லை' என்று போரொழிந்து, மலைநாடு நோக்கிச் சென்றனர். பின்னரே நாயக்கவரசு மதுரையில் நிலைபெறலாயிற்று.

ஆசு கவி காளமேகத்தை அனைவரும் கேட்டிருப்பர். சினிமாவிலும் அவரைப் பிடித்துவிட்டார்கள். ஒரு சமயம் கயத்தாற்றுப் பெருமாளுக்கு உற்சவம் நடந்தது. ஸ்ரீபாதம் தாங்கிகளில் ஒருவன் குறைவா யிருந்தான். அதற்காக நம் காளமேகத்தை வலுக்கட்டாயமாக அமர்த்தினர். முடிவில் அக் கவிஞர் பெருமான் பாடியது:

பாளைமணம் கமழ்கின்ற கயத்தாற்றுப்
பெருமாளே! பழிகாரா! கேள்;
வேளை என்றால் இராவேளை, பதினறு
நாழிகைக்கு மேலாயிற்று; என்
தோளை முறித்ததும் அன்றி,
நம்பியானையுங் கூடச் சுமக்கச்
செய்தாய்
நாளை இனி யார் சுமப்பார்?
எந்நாளும் உன் கோயில்
நாசந்தானே!

கயத்தாற்றுப் பெருமாளின் சம்மதம் அவ்விதம் இருந்தது. நாம் என்ன செய்யலாம்? என்ன தான் சொல்லுவது!

★

கடன்காரருக்குப் பதில்

ஏதாவது அச்சுக்கூடத்துக்கு எழுத வேண்டு மென்றால், காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதினல்தான் சௌகர்யமாயிருக்கும். அதனுலேயே, ''காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்படும் விஷயங்களை யன்றி மற்றவை கவனிக்கப்பட மாட்டா'' என்று, பெரும்பாலும் பத்திராசிரியர்கள் அறிவிக்கிறார்கள்.

மார்க் ட்வேன் என்ற பிரபல விகட எழுத்தாளர், வாலிபத்தில் ஒரு பத்திரிகாலயத்தில் ஆசிரியராயிருந்தார். வறுமையும் கடனும் அவரைச் சூழ்ந்தன. கடன்காரர்களின் 'பில்'கள், கட்டுக் கட்டாய்த் தினந்தோறும் வந்து குவியும். மார்க் ட்வேன் சிறிதும் கவலைப்படாமல், அத்தனை 'பில்'களையும் குப்பைக் கூடையில் போட்டு விடுவார்.

ஒருநாள், ஒரு கடன் 'பில்' காகிதத்தை அவர் ஒதுக்கித் தள்ளியபோது, குமாஸ்தா, ''ஸார், அதன் பின் பக்கத்தைப் படியுங்கள். பணத்தை உடனே நீங்கள் அனுப்பாவிட்டால், வியாச்சியம் தொடுப்பதாக அதில் எழுதியிருக்கிறது'' என்று எச்சரித்தார்.

''ஓ! அதை அவனுக்கே திருப்பி அனுப்பி விடும். 'இரு பக்கத்திலும் எழுதப்படும் விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா' என்ற நமது முத்திரையை அதிலே குத்தி விடும்'' என்றார் மார்க் ட்வேன்.



சூரியனை நோக்கி . . .

தினசரி அருணோதயத்தில் ஏராளமான விமானங்கள் இந்திய விமான நிலையங்களிலிருந்து கிளம்பி கிழக்கு நோக்கிச் செல்கின்றன. ஏன் தெரியுமா? ஜபபானியரின் "உதய சூரிய"க் கொடி இந்தியாவில் நாட்டப்படாமலிருப்பதற்காகத்தான். நமது தினசரி உபயோகத்திற்காக நாம் வாங்கும் பல்வேறு சாமான்களும்கூட விமான உற்பத்திக்கும், விமானிகளின் பயிற்சிக்கும் ஏராளமாகத் தேவைப்படுகின்றன. ஆகவே இச் சாமான்களை நாம் குறைத்து வாங்க வாங்க நமது பாதுகாப்பாளர்களான நமது படைகளுக்கு அவை அதிகமாகக் கிடைக்கும். இதே மாதிரி நமது செலவுகளைக் குறைக்கக் குறைக்க தேசத்திற்குக் கடன் கொடுத்துதவுவதற்கு அதிகப்பணம் மீதப்படும்.

நாம் வேலை செய்கையிலும்சரி, உறங்குகையிலும்சரி, நமது வீர்விமானிகள் அல்லும் பகலும் ஆகாசத்திலிருந்து காவல் புரிந்துகொண்டிருக்கின்றனர். அதுபோல் நாமும் நமது பங்குக்கு ஓரளவுயுத்தசேவைபுரியவேண்டாமா? அதற்கு நமது ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, அதனால் மீதப்படும் பணத்தை தேசத்திற்கு கடன் கொடுத்து உதவுவோமாக.

டிபென்ஸ் ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகள்

...அல்லது டிபென்ஸ் லோன்களைத்தவிர

வேறெதையும் வாங்குமுன் — சற்றே யோசியுங்கள்

ஸர்ட்டிபிகேட்டுகள் உங்கள் தபாலாபீஸில் கிடைக்கும் ரூ. 10-க்கு பத்துவருடத்தில் 3-9-0 லாபம் கிடைக்கிறது.

CPU-26-TM

வெய்யில் காலத்தில்

உங்களுடைய மூளையையும் உடலையும்

T. S. R. & CO.வின்

அரைக்கீரை

★ சந்தனாதி ★

பிரிங்காமல

தைலங்களினால் குளிரச் செய்யுங்கள்

T.S.R. & Co. (வாசனை வியாபாரம்) கும்பகோணம்

சோல் ஏஜண்ட்ஸ்

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைகிராப்ட்ஸ் ரோடு :: திருவல்லிக்கேணி, மதராஸ்

யுத்தகாலச் சிக்கனம் — ஒரு யோசனை

முதலாவதாக ஒவ்வொருவரும் சிக்கன விஷயமாக ஒரு திட்டம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். மனித சம்பாத்தியத்தின் ஒரு கால்பாகம் ஜீவனத்திற்கும், இரண்டாவது கால்பாகம் மறற சௌகரியங்களுக்கும், மூன்றாவது கால்பங்கு தத்தம் நிலைமையை அபிவிருத்தி செய்து கொள்வதிலும் உபயோகப்படலாம். மேற் கூறிய மனித ஜீவன, சௌகரிய, அபிவிருத்திகளுக்கு உரிய காலத்தில் உபயோகப்படுவதற்காக எஞ்சிய நான்காவது கால்பங்கு க்ஷேம நிதியாக சேர்க்கப்படவேண்டும்.

இந்த யோசனையைப் பின்பற்றுங்கள். க்ஷேம நிதியை ஹிந்துஸ்தான் பாலிசி மூலமாகச் சேருங்கள். ஹிந்துஸ்தான் பாலிசி உங்களுடைய வயது காலத்தில் நிம்மதியான வாழ்க்கைக்கு உத்தரவாதமளிக்கிறது. உங்கள் ஆப்தமானவர்களுடைய சௌக்கிய வாழ்வை உறுதிப் படுத்துகிறது. உங்கள் திட்டத்தை இன்றே ஆரம்பியுங்கள்.

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைட்டி, லிமிடெட்

தலைமைக் காரியாலயம்:	சென்னைக் கிளை:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"	"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
6-A, சுரேந்திரநாத் பானர்ஜி ரோடு	107, அர்மீனியன் தெரு
கல்கத்தா	ஜி.டி., சென்னை

அந்த அபூர்வ ஜலதோஷ நிவாரணியை, ஜட்ஜி சதாசிவத்திடம் விற்றுவிட்டு, ஜயராஜ் பட்டபாட்டுக்குப் பலன் இல்லாமல் போகுமா?

ஆச்சர்ய மருந்து

— எம். எஸ். வி.

டாக்டர் ஜயராஜ் ஓர் ஆச்சர்ய மான மருந்தைக் கண்டுபிடித்தார். அவர் கண்டுபிடித்த அந்த 'ஜலதோஷ நிவாரணி' உலகப் பிரசித்தம் அடையாவிட்டாலும் உள்ளூரில் பிரசித்திபெற ஆரம்பித்தது.

டாக்டர் ஜயராஜின்
ஜலதோஷ நிவாரணி.
ஆச்சர்யமான மருந்து.

இப்படி மறுதினமே டாக்டரின் வீட்டு வாசலில் கொட்டை எழுத்தில் ஒரு போர்டு போடப்பட்டது.

தெருவில் போகிறவர் வருகிறவர்களெல்லாம் ஜயராஜின் ஜலதோஷ நிவாரணியை வாங்க ஆரம்பித்தார்கள்.

ஜட்ஜி சதாசிவம் பிள்ளை ஒரு நாள் ஜயராஜ் வீட்டுவாசல் பக்கம் காரில் சென்றுகொண்டிருந்த சமயத்தில், மேற்படி போர்டை அவர் படித்துப் பார்க்க நேரிட்டது.

சதாசிவம் பிள்ளை தமது காரை நிறுத்தினார். சட்டைப் பையிலிருந்த கைக்குட்டையை எடுத்து வாய்க்கு நேராகப் பிடித்து ஒரு தும்மல் போட்டார். அந்தத் தும்மலை அடுத்து மற்றொரு முறை தும்மினார். ஜலதோஷம் அவரைப் பலமாகப் பிடித்திருந்தது.

சதாசிவம் பிள்ளை காரைவிட்டுக் கீழே இறங்கி, இன்னொரு தடவை போர்டைப் படித்துப் பார்த்துவிட்டு, டாக்டரின் அறைக்குள் தடதட என்று பிரவேசித்தார். ஜட்ஜியின் கையில் ஒரு கைத்தடி இருந்தது. ஜட்ஜியின் எதிர்பாராத பிரவேசத்தைக் கண்ட டாக்டர் ஜயராஜ் ஒரு கணம் திடுக்கிட்டார். வேலைக்கார முனிசாமி பின்வாங்கிப் பக்கத்திலிருந்த பீரோவின் பின்னால் பதுங்கினான்.

'அச்ஹூ' என்று ஜட்ஜி ஒரு தும்மல் போட்டார், 'லூயி-கன்' மாதிரி. மறுபடியும் அவர் போட்ட இன்னொரு தும்மலிலே அவரது கைத்தடி, கையைவிட்டுக் குதித்தோடியது. மற்றொரு தும்மலில் அவரது தலைப்பாகை தலையைவிட்டுக் கழன்று அப்பால் விழுந்தது. மூன்றாவது தும்மல், நாலாவது தும்மல்,......பல தும்மல், தும்மு தும்மென்று தும்மித் தீர்த்தார். பிறகு, கம்பீரமாகச் சுற்றுமுற்றும் பார்த்தார்.

"உமது பெயர்தானா ஜயராஜ்?"

ஜயராஜ் சாந்தமான குரலில் "ஆமாம்; என்னால் தங்களுக்கு ....." என்று இழுத்தார்.

ஜட்ஜி தாமாகவே நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார். தும்மல் வரப்போவதை முன்னிட்டு, அவருடைய மூக்குத் துடித்தது;

கண்கள் சுருங்கின ; வாய் அகன்றது. 'அச்ஹூ' என்றொரு பெரிய தும்மல் வெளிக் கிளம்பியது. மறுபடியும் இன்னொரு தும்மலுக்கு அறிகுறியாக அவரது முகம் பலவித பாவங்களைக் காட்டியது. இப்படி நாலைந்து தும்மல்கள் போட்டு ஜட்ஜி அந்த அறையை அதிரச் செய்தார். ஒவ்வொரு தும்மலும் பீரோவுக்குப் பின்னால் இருந்த முனிசாமியைத் தூக்கிவாரிப் போட்டது. ஜயராஜ் மட்டும் புன்சிரிப்போடு நின்று கொண்டிருந்தார்.

பின்பு, மேஜையை ஜட்ஜி ஒரு குத்துக் குத்தினார். அங்கே இருந்த கண்ணாடி ஜாடி கீழே விழுந்து சுக்கு நூறாயிற்று.

முனிசாமி அதைப் பரிதாபத்தோடு பீரோவின் இடுக்கு வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஜயராஜ்! தெருவிலே விளம்பரம் செய்திருக்கும் ஜலதோஷ மருந்து........."

"ஒரு தடவை உபயோகித்தால் போதும்; பாதி ஜலதோஷம் தீர்ந்துபோகும்......" என்றார் ஜயராஜ்.

"நீர்தான் கண்டுபிடித்தீரோ?"

"ஆமாம். நான்தான். மிகச் சிறந்த ஔஷதம். இந்தத் தெருவிலேயே, ஏன்—இந்த உலகத்திலேயே இதுதான் சிறந்தது என்று சொல்லலாம். இந்த ஊரிலுள்ள பிரமுகர்கள், வியாபாரிகள் எல்லோரும் இதைத்தான் உபயோகிக்கிறார்கள். இன்னும்........."

"சரி, சரி; இந்தக் கதையெல்லாம் எனக்குத் தேவையில்லை. உம்முடைய மருந்து ஜலதோஷத்தைக் குணப்படுத்துமா? அதைச் சொல்லும்...அச்ஹூ"

ஜயராஜ் அந்த உடைந்த ஜாடியை அரைக் கண்ணால் பார்த்துக்கொண்டே, "நான் கண்டுபிடித்திருக்கும் இந்த மருந்தில் எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு. வேண்டுமானால் பல நற்சாட்சிப் பத்திரங்களை........." என்றார்.

"காரண்டி கொடுக்க முடியுமா? குணமாகவில்லையென்றால் பணத்தை வாபஸ் செய்வீரா?"

ஜயராஜ் ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்து, "பணம் வாபஸ் கொடுக்கவேண்டிய அவசியமே ஏற்படாது. இங்கே அப்படி வழக்கமும் இல்லை. என் மருந்தை நீங்கள் நம்பலாம். எடுத்துக் கொண்டு போங்கள். நீங்கள் கடுமையான ஜலதோஷத்தால் அவஸ்தைப் படுகிறீர்களென்று தெரிகிறது......" என்றார்.

"ஆமாம். அதற்காகத் தானே இங்கே வந்திருக்கிறேன். அச்ஹூ ... அச்ஹூ .... எனக்கு ஒரு புட்டி மருந்து கொடும். இந்த மருந்து என்னுடைய ஜலதோஷத்தைப் போக்கவில்லை என்றால், நான் மறுபடியும் அடுத்த வெள்ளிக்கிழமை திரும்பி வருவேன். திரும்பி வந்து என்ன செய்வேன், தெரியுமா? உம்முடைய இந்த அறையை ஹதாஹதம் செய்துவிடுவேன். ஜாக்கிரதை. ஆமாம்........" என்று உறுமினார் ஜட்ஜி.

ஜயராஜ் பவ்யமாக வணங்கி, "அப்படியெல்லாம் ஒன்றும் நேராது" என்று சொல்லி, ஜட்ஜியைக் கொண்டுபோய்க் காரில் ஏற்றினார். அவருக்கு அதன்பின் தான் பாதி உயிர் திரும்பி வந்தது. வேலைக்கார முனியனும், விமானத் தாக்குதல் ஓய்ந்தபின்

ஷெல்ட'ரிலிருந்து வெளி வருப வனைப்போல், எழுந்து வந்தான்.

"முனிசாமி!" என்ருர் எஜமான்.

"எஜமான்!" என்று குரல் கொடுத்தான் முனிசாமி.

"நம் வீட்டில் கைத் துப்பாக்கி ஏதேனும் இருக்கிறதா?"

"கிடையாதே!" என்று ஏங்கினன் முனிசாமி.

"இருந்தால் தேவலே. அடுத்த வெள்ளிக்கிழமை மறுபடியும் இந்த ராட்சதன் வந்துவிடுவானே, என்ன செய்வது?"

"பேசாமல் ஜட்ஜி வருகிற சமயம் பார்த்துக் கொல்லேக் கதவு வழியாய்க் குதித்து வெளிக் கிளம்பிவிடலாமே!" என்று வெகு சாமர்த்தியமாக ஒரு யுக்தி சொன்னன் முனிசாமி.

மூன்று தினங்கள் கழிந்தன. ஜட்ஜியின் வரவை எதிர்பார்த்துக் கதவின் பக்கத்திலேயே ஜயராஜ் உட்கார்ந்துகொண்டிருந்தார், கொல்லே வழியாய்க் குதித்தோடத் தயாராய்.

ஆனல், ஜட்ஜ் வெள்ளிக் கிழமை வரவில்லே. சனி, ஞாயிறும் போயிற்று. ஜயராஜ் கொஞ்சம் தைரியமடைந்தார். இனி ஜட்ஜி வரமாட்டார், உபத்திரவம் விட்டது என்ற தைரியம் பிறந்தது. ஆனல், விபரீதமாய் அதற்குப் பின் ஒருநாள் திடீரென்று அகஸ்மாத்தாக அந்த ஜட்ஜி ஒரு பெரிய தும்மல் சகிதம் டாக்டரின் அறைக்குள் திடும்பிரவேசமாய்ப் பிரத்யட்சமானர். வந்தவர் ஜயராஜின் கைகளே இறுகப் பிடித்துக்கொண்டார்.

"நீர்தானே எனக்கு அந்த ஜலதோஷ மருந்தைக் கொடுத்தவர்?........."

"நான்...நான்...ஆனல், நான் மருந்தைக் கொடுக்கும்போதே பணம் வாபஸ் செய்யும் வழக்கமில்லே என்று சொல்லித்தானே கொடுத்தேன்?......"

"வாபஸ்! பணத்தை யார் வாபஸ் கேட்டது? நான் சொல்வதைக் கடைசிவரையில் பொறுமையோடு கேட்டுவிட்டுப் பிறகு பதில் சொல்லும்."

"நீங்கள் தானே சொன்னீர்கள்......?"

"நான் என்ன சொன்னலும் சரிதான். இப்போது சொல்கிறேன், கேளும். நீர் ஒரு பெரிய டாக்டர். மகா ஆச்சர்யமான மருந்தைக் கண்டு பிடித்து விட்டீர். இதோ என் தலேயைப் பாரும்" என்று சொல்லி, ஜட்ஜி தமது தொப்பியைக் கழற்றி அப்பால் வீசி எறிந்தார்: "இப்போது பார்த்தீரா? தலே எப்படி இருக்கிறது?"

ஜட்ஜியின் தலேயை அதிசயத்தோடு பார்த்து விழித்தார் ஜயராஜ். அவருடைய தலேயில் ஏதோ மாறுதல் தெரிந்தது. அது என்ன மாறுதல் என்பது ஜயராஜுக்குப் புரியவில்லே.

"என்ன? பார்த்தீரோ?" என்று உறுமினர் ஜட்ஜி.

"பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். அது என்ன என்று மட்டில்...." என்று இழுத்தார் ஜயராஜ்.

"என்னவா! மயிர் முளேத்திருக்கிறதே தெரியவில்லே? நீர் என்ன குருடஞ? இதற்கு முன்னல் என் தலே எப்படி இருந்தது என்று உமக்குத் தெரியுமா?"

"தெரியும். முன் தடவை நீங்கள் இங்கே வந்திருந்தபோது தும்மினீர்கள். அப்போது உங்

கள் தலையிலிருந்த தலைப்பாகை எகிரி அப்பால் போய் விழுந்தது. அச்சமயம் பார்த்தேன். உங்கள் தலை, வழுக்கையாக இருந்தது....''

''வழுக்கையா! ஒரே சலவைக் கல்தான். இப்போது பாரும், தலை பூராவும் மயிர்! ஆச்சர்யம்!''

''அதிருக்கட்டும். என்னிடம் மருந்து வாங்கிச் சென்றீர்களே ஜலதோஷத்துக்கு; அந்த ஜல தோஷம்......''

''அது இன்னும் குணமாக வில்லை. அச்ஹூ! அதனால் பாதக மில்லை. தலைவழுக்கை போயிற்றல்லவா? இங்கே பாரும்! இந்த நோட்டுகளைப் பெற்றுக் கொள் ளும்'' என்று சொல்லி, தமது சட்டைப் பையிலிருந்து ஒரு கட்டு நோட்டுகளை வாரி எடுத்து, ஜயராஜிடம் கொடுத்தார் ஜட்ஜி.

ஜயராஜ் சந்தோஷம், சந்தேகம், மனத்திகைப்பு மூன்றுங் கலந்தவராய், கை நீட்டி அதை வாங்கிக் கொண்டார்.

''சரி; முன்னே நான் இங்கே வந்தபோது ஒரு கண்ணாடி ஜாடியை உடைத்து விட்டேன் அல்லவா? அதன் விலை என்ன? அதையும் வாங்கிக் கொள்ளும். இந்தாரும்'' என்று மேலும் சில நோட்டுகளைப் பையி லிருந்து தூக்கி வீசினார்.

''நான் போய் வருகிறேன். உம்முடைய ஜலதோஷ நிவாரணி ஜலதோஷத்தைப் போக்கவில்லை. ஆனால், அது ஓர் அகஸ்மாத் சம்பவத்தால் என்னுடைய வழுக்கையைப் போக்கி விட்டது. இரண்டு தினங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு நான் படுத்துத் தூங்கப் போகுமுன், சட்டென்று என் தலை வழுக்கைக்கு மருந்து தடவ மறந்துவிட்ட ஞாபகம் வந்தது. நான் தினசரி படுக்கப் போகு முன் அதைத் தலையில் தடவிக் கொள்வது வழக்கம். உடனே எழுந்திருந்து விளக்கை ஏற்றத் தீப்பெட்டியைத் தேடினேன். அதைக் காணவில்லை. ஆனால், என் கையில் ஒரு 'பாட்டில்' அகப்பட்டது. 'பாட்டி'லில் இருந்த மருந்தைத் தலையில் பூசிக் கொண்டு காலையில் எழுந்து தலையைத் தடவுகிறேன்; தலையில் 'நெறநெற' என்று மயிர் உறுத்துகிறது! அந்தப் பாட்டிலில்தான் உம்முடைய ஜலதோஷ மருந்து இருந்தது. பார்த்தீரா தலையை?'' என்று ஜட்ஜி விரல்களால் தம் தலையைத் தடவிக் காண்பித்தார்.

''ஆமாம்; மயிர் முளைத்திருக்கிறது......'' என்று பற்களைக் காட்டினார் ஜயராஜ்.

''உம்முடைய அற்புதமான மருந்து தலை வழுக்கையைக் கண நேரத்தில் நீக்குகிறது. இப்போது வீட்டுக்குப் போய் அந்த வழுக்கை மருந்தைச் சாப்பிட்டு ஜல தோஷம் போகிறதா என்று பார்க்க வேண்டும். மெத்த அவசரம்; போய் வருகிறேன்......'' என்று கிளம்பிப் போனார் ஜட்ஜி.

இரண்டு தினங்களுக் கெல்லாம் டாக்டரின் வீட்டு வாசலில் வேறு ஒரு புதிய போர்டு தொங்க ஆரம்பித்தது.

> **ஜயராஜின் அதி ஆச்சர்யமான வழுக்கை போக்கித் தைலம். ஜட்ஜி சதாசிவம் அவர்களின் நற்சாட்சிப் பத்திரம் பெற்றது. உலகப் பிரசித்தம் வாய்ந்தது.**

இதுவே அந்தப் புதிய போர்டு.

★

பொம்மை

பொம்மை நல்ல பொம்மை
புத்தம் புதிய பொம்மை
சும்மாச் சிரிக்கும் பொம்மை
சொக்காய் போட்ட பொம்மை

நம்ம நாட்டுப் பொம்மை
நகை போட்ட பொம்மை
அம்மா தந்த பொம்மை
ஆசையுள்ள பொம்மை

உன்னைக் கண்டு சிரிக்கும்
உனக்கொர் முத்தம் கொடுக்கும்
என்னைப் பிரியா மலே
என்றன் கையி லிருக்கும்

—'உமா'

பாலர் கதை:

ஆந்தையின் விருந்து

— 'சாவி'

ஒரு காட்டில் ஒரு பெரிய ஆல மரம் இருந்தது. ஆலமரத்தின் பொந்தில் 'ஹூஹூ' என்று ஓர் ஆந்தை வசித்து வந்தது. ஆந்தை எங்கெங்கேயோ அலைந்தும், அதற்கு ஒரு வாரமாகத் தீனியே கிடைக்கவில்லை. என்ன செய்யும் பாவம்?

பொந்தில் உட்கார்ந்து யோசனை செய்து பார்த்தது. ஒரு யுக்தி தோன்றியது.

"நான் ஒரு விருந்து வைக்கிறேன். அந்த விருந்துக்கு, எலி, முயல், குயில், அணில் இந்த நான்கையும் அழைக்கிறேன்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டது.

உடனே பேனாவும் மசிக்கூடும் எடுத்து வந்து, அந்த நாலுக்கும் அழைப்பு எழுதி அனுப்பிற்று.

எலி, குயில், முயல்,
அணில் அவர்களுக்கு,
அடுத்த பௌர்ணமி
அன்று இரவு
என் ஆலமரப் பொந்தில்
ஒரு விருந்து வைக்கி
றேன். அதற்கு உங்கள்
நல்வரவை
ஆவலுடன்
எதிர்பார்க்கிறேன்.
இப்படிக்கு,
ஹூஹூ ஆந்தை.

இந்த அழைப்பைக் கண்ட எலி சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தது. அந்த எலி இதற்கு முன் எந்த விருந்திலும் கலந்து கொண்டதில்லை.

அணிலோ அழைப்பை வெகு ஜாக்கிரதையுடன் படித்துப் பார்த்தது. இதற்கு முன் அது ஒரே ஒரு தடவைதான் விருந்துக்குப் போயிருக்கிறது. எனவே, சந்தோஷமாக விருந்துக்கு வருவதாய்ப் பதில் எழுதிப் போட்டது.

குயில் தனக்கு வந்திருந்த அழைப்பைப் படித்துப் பார்த்துவிட்டு, கர்வப்பட்டது. "என்னுடைய குரலுக்காகவே இந்த ஆந்தை என்னைக் கூப்பிடுகிறது. விருந்து முடிந்ததும் என்னைப்



பாடச் சொல்வார்கள். முதலிலே கொஞ்சம் பிகு செய்வேன். எல்லாரும் கெஞ்சிக் கேட்டபின் பாடுவேன். என் குரலைக் கேட்டு அனைவரும் ஆனந்தப்படுவார்கள்'' என்று தனக்குத்தானே பெருமையோடு சொல்லிக் கொண்டது.

முயலுக்கு எப்போதும் பசிதான். விருந்து என்றதும், அதற்கு நாக்கில் ஜலம் ஊறியது. ஆனால், இந்த அழைப்பில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தது. ஆகவே, காட்டில் சுற்றி அலைந்து, இன்னும் யார் யாருக்கு ஆந்தையின் அழைப்பு வந்திருக்கிறது என்பதைக் கண்டு பிடிக்க ஆரம்பித்தது. தேடிப் பார்த்ததில், எலி, குயில், அணில் இந்த மூன்றுக்கும் அழைப்பு வந்திருப்பது தெரிந்தது. கடைசியில், தானும் விருந்துக்கு வருவதாக, ஆந்தைக்குப் பதில் எழுதிப் போட்டது.

விருந்தன்று சாயங்காலம் எலி, குயில், அணில் மூன்றையும், தான் வந்து, ஆந்தையின் வீட்டுக்கு அழைத்துப் போவதாக முயல் சொல்லிற்று.

''ஏன்? ஆந்தை நம்மைச் சாயங்காலம் வரச் சொல்லவில்லையே?'' என்று மற்றவை கேட்டன.

''நான் சொல்கிறபடி கேளுங்கள். நன்மை அடைவீர்கள்'' என்றது முயல்.

''சரி'' என்றன மற்றவை.

பௌர்ணமி அன்று சாயங்காலம், எலி, குயில், அணில் மூன்றும் ஆந்தையின் விருந்துக்குப் புறப்படத் தயாராயின. தான் சொன்னபடியே, முயல் வந்து அவைகளை அழைத்துச் சென்றது.

நான்கும் ஆந்தையின் ஆலமரத்துக்குச் சமீபமாய் வந்து சேர்ந்தன. இன்னும் சூரியன் அஸ்தமிக்கவில்லை. பகலில்தான் ஆந்தைக்குக் கண் தெரியாதே; ஆகையால், இவைகள் வந்ததை, அது பார்க்கவில்லை. ஆனாலும், சத்தம் கேட்டுவிடக் கூடாது அல்லவா? முயல் மெதுவாக முன்னே சென்றது. அதைப் பின்பற்றி மற்றவையும் அடிமேல் அடி வைத்து நடந்தன.

''நாமெல்லாம் ஆலமரத்துக்குப் பின்பக்கமாய்ப் போய் ஒளிந்து கொண்டு, விருந்துக்கு ஆந்தை என்னென்ன தயார் செய்து வைத்திருக்கிறதென்று கவனிக்கலாம்'' என்று மற்றவைகளிடம் காதோடு காதாகச் சொல்லியது முயல்.

''ஆமாம்; பின்பக்கம் ஒரு சிறு வளை, ஆலமரத்துக்குள் செல்கிறது. அதற்குள் புகுந்து போய் அங்கே ஒளிந்து கொள்ளலாம். அப்படிச் செய்தால் ஆந்தை நம்மைக் கண்டுகொள்ள முடியாது'' என்றது அணில்.

சந்தடி செய்யாமல், நான்கும் அப்படியே போய் ஒளிந்து கொண்டன. இதற்குள் சூரியன் மறைந்தது. இருள் சூழ்ந்தது. ஆனால், சிறிது நேரத்தில் சந்திரன் உதித்து விட்டது.

சந்திரன் புறப்பட்டதும், பொந்துக்குள் வெளிச்சம் தெரிந்தது. ஆந்தையின் பொந்தில் நாலு காலித் தட்டுகள் காணப்பட்டன. இதைக் கண்ட முயல், '' ''பார்த்தீர்களா! விருந்துக்கு ஒன்றுமே இல்லை! வெறும் காலித் தட்டுகள்!'' என்றது.

மற்றவைகள் உற்றுப் பார்த்தன. ஹூஹூ ஆந்தை இன்னும் மூன்று ஆந்தைகளுடன் பொந்

துக்குள் அப்போதுதான் வந்து நுழைந்தது.

"உட்காருங்கள்; இன்னும் கொஞ்ச நேரத்தில் நமது விருந்து ஆரம்பமாகி விடும். நம்முடைய பட்சணங்கள் வந்து சேர்ந்து விடும். சிறிது நேரம் தான் காக்க வேண்டும்" என்றது ஹூஹூ.

எல்லா ஆந்தைகளும் கிளைகளில் உட்கார்ந்து, எலி, அணில், முயல், குயில் இவைகளின் வரவை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தன.

எலி, முயல், குயில், அணில் நான்கும் இதைக் கேட்டுப் பெருமூச்சு விட்டன. இப்போது தெரிந்து விட்டது! விருந்துக்குத் தாங்களே தான் ஆகாரம் என்பதை அவை தெரிந்து கொண்டன. அணிலைத் தவிர, மற்ற மூன்றும் ஒவ்வொன்ருக நழுவி ஓட்டம் பிடித்தன. அணில் மட்டும் தைரியமாக அந்தச் சிறு வளைக்குள்ளேயே ஒளிந்து கொண்டு, மேலே என்ன நடக்கிறது என்பதைக் கவனித்துக் கொண்டிருந்தது.

ஆந்தைகள், வெகுநேரம் வரை, காத்துப் பார்த்தன. அவைகளுடைய ஆகாரம் வரக்காணேம். ஹூஹூவைப் பார்த்து, "எங்கே ஆகாரம்?" என்று கோபமாகக் கேட்டன மற்ற ஆந்தைகள்.

ஹூஹூ பதில் சொல்ல முடியாமல் விழித்தது.

"என்ன ஆந்தை முழி முழிக்கிருய்! கொண்டா ஆகாரத்தை" என்று சொல்லி, மற்ற ஆந்தைகள் ஹூஹூவின் தலைமீது ஏறி மூக்கால் கொத்திச் சிறகால் அடித்து இம்சை செய்தன. பிறகு, ஹூஹூவைத் தனியே விட்டுப் போயின.

அவைகளெல்லாம் சென்ற பிறகு, அணில் ஹூஹூவைக் கூப்பிட்டுச் சிரித்துக் கொண்டே, "விருந்து எப்படி யிருந்தது?" என்று கேட்டுக் கேலி செய்தது. இப்படிக் கேலியாகக் கேட்டுவிட்டு, ஆந்தையின் பதிலை எதிர் பார்க்காமலே ஓட்டம் பிடித்தது.

ஆந்தைக்கு வெட்கமாய்ப் போய் விட்டது. அன்று முதல் ஆந்தை இன்னும் விருந்தே வைக்கவில்லை!

★

புரட்சிக்காரியின் கருணை

1857-ஆம் வருஷம் சிப்பாய்ப் புரட்சியின் போது, ஜயாஜிராவ் சிந்தியா என்ற குவாலியர் ராஜாவுக்கு, தாமாகவே புரட்சிக்காரர்களை எதிர்க்கவேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று.

"பிரிட்டிஷ் படைகள் நமக்கு உதவிபுரிய வந்துசேரும் வரையில், நாம் எவ்வித நடவடிக்கையும் எடுக்க வேண்டாம்" என்று திவான் ஸர் தினகர ராவ் எவ்வளவோ நற்புத்தி சொல்லியும், ராஜா கேட்கவில்லை.

உற்சாக மிகுதியால், புரட்சிக்காரர் இருந்த திசையில், ராஜா ஒரு பெரிய பீரங்கியால் குண்டு வீசினர். குவாலியரையும் தாக்குங்கள் என்று தங்கள் படைக்குப் புரட்சித் தலைவர்கள் உத்திரவிட்டார்கள். ஜயாஜிராவின் படை தோற்றுச் சிதறியது. ராஜா பிடிபட்டார். புரட்சித் தலைவர்களில் ஒருவரான வீர ஜான்ஸி ராணி, அந்த ராஜாவை நோக்கி, "உன் தலையை இங்கேயே என் வாளால் வெட்டித் தள்ளியிருப்பேன். ஆனல், நீ ஒரு கோழை; அறியாத வாலிபன். ஆகையால்தான், அப்படிச் செய்யாது விட்டேன்" என்ருள்.

பின்னே, எட்டு மாதங்களுக்குப் பிறகுதான், பிரிட்டிஷாரால் புரட்சிக்காரரிடமிருந்து ஜயாஜிராவ் விடுவிக்கப்பட்டார்.

பிளட் விட்டா

(இரத்த சுத்திக்கு)

இஞ்ஜக்ஷன் ட்யூப்ஸ்
கோடைக்கால கட்டிக்கு
— பவுடர் —
மருந்து சாமான்கள்

★

ஸௌத் இந்தியா கார்ப்பொரேஷன்

(மதராஸ்) லிமிடெட்

80, செம்புதாஸ் தெருவு, மதராஸ்

என்றும் மறக்க முடியாத — இணையற்ற பெருமை வாய்ந்தது

ஜூலை 2

★ கற்பினைக் காக்க - கண்கள் அர்ப்பணம்
★ கஷ்டத்தின் எல்லையில் - கடவுளின் அற்புதம்
★ சத்திய வாழ்வில் - தான் கண்ட பொற்பதம்

ஜூலை 2

தம்பதிகள் கண்டு தரிசிக்கும்

அருந்ததி

டைரக்ஷன்: M. L. டாண்டன்

செருகளத்தூர் சாமா
ஹொன்னப்ப பாகவதர்
S. D. சுப்பையா
K. K. பெருமாள்
U. R. ஜீவரத்னம்
M. R. சந்தானலக்ஷ்மி
P. S. சிவபாக்யம்
J. சுசீலாதேவி

N. S. கிருஷ்ணன் — T. A. மதுரம்

கண்டு தரிசியுங்கள்

விவரங்களுக்கு

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட் — சேலம் மதுரை

ஒரிஜினல்

கல்ச்சர் வைரங்கள்

★

தயாரிப்பவர்கள் & உரிமையாளர்கள்

மு. ராமசாமி செட்டி & கோ.,

ஷராப் வியாபாரம், திருச்சினப்பள்ளி.

புத்தக உலகம்

கார்ல் மார்க்ஸ்: ஆசிரியர்: வெ. சாமிநாத சர்மா. வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், வடக்குவெளி வீதி, மதுரை. விலை ரூ 3—0—0.

பொது உடைமைத் தத்துவத்துக்கு, அசைக்க முடியாதபடி, சாஸ்திரீயமான ஆராய்ச்சியின் மூலமாக, அஸ்திவாரம் கோலிய மேதை கார்ல் மார்க்ஸ். பொது உடைமை வாதிகளுக்கெல்லாம் அவருடைய எழுத்துத்தான் வேதமாகும். கார்ல் மார்க்ஸ் ஜெர்மானியர். அவருடைய பெற்றோர் இருவரும் பிறப்பால் ஜெர்மன் யூதர்கள். உலகத்திலே மிக அபூர்வமாக எப்பொழுதோ தோன்றும் மிகச் சில மகான்களில் ஒருவர் கார்ல் மார்க்ஸ். அன்பர் சர்மா சொல்கிறபடி, மார்க்ஸின் வாழ்க்கை முழுதும் போராட்டமயமாகும். ஏழை மக்களின் விமோசனத்துக்காக, சுரண்டப்படுவோரின் விடுதலைக்காக அவர் உழைத்தார்; ஓயாமல் போராடினார். சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகியவை சம்பந்தமாக அவருடைய தத்துவங்கள் எண்ண உலகிலே பெரும் புரட்சியை உண்டு பண்ணிவிட்டன. ஜீவியம் பூராவும் அதிகாரிகளின் ஆத்திரத்துக்கும், வறுமைக்கும், துன்ப துயரங்களுக்கும் அவர் ஆளானார். அவருடைய வாழ்க்கை வரலாறு ஓர் உருக்கமான சரித்திரமாகும். அந்தச் சரித்திரத்தை, மிகுந்த ஆராய்ச்சியோடும், அனுதாபத்தோடும், தெளிவான நடையில், ஆசிரியர் சர்மா வரைந்திருக்கிறார். 'சிருஷ்டி' என்ற அத்தியாயத்தில், கார்ல் மார்க்ஸின் சிக்கலான கொள்கைகளைத் தெளிவாகவும் விரிவாகவும், அவர் விளக்கியிருக்கிறார். அபேதவாதிகள் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய சிறந்த நூல்.

* *

கொரில்லாப் போர் — வெளியிட்டோர்: 'ஜனசக்தி' பிரசுராலயம். 3. ஜோன்ஸ் தெரு. ஜி. டி. சென்னை. விலை: இரண்டரை அணா.

ருஷ்யர்கள் இன்று நாஜிகளை எதிர்த்து வீரமாகப் போராடி வெற்றி பெறுகிறார்கள் என்றால், அதற்கு அங்குள்ள கொரில்லாப் படைகளே ஓரளவு காரணமாகும். அவைகளின் வீரதீரச் செயல்களைப் படிக்கும்போது மயிர்க் கூச்சலிடுகிறது. இந்தக் கொரில்லாப் படைகள் எப்படி அமைக்கப்படுகின்றன? அவைகளுக்கு ஆயுதங்கள் எங்கிருந்து கிடைக்கின்றன? அவைகள் எப்படிப்பட்ட போர் முறையைக் கையாளுகின்றன? இந்த விவரங்களெல்லாம் இப்புத்தகத்தில் விரிவாகத் தரப்பட்டிருக்கின்றன. நம் ஊர் ஏ. ஆர். பி.-க்காரர்கள் இப்புத்தகத்தைப் படித்து வைப்பது நலம் என்று யோசனை கூறுகிறோம்.

* *

இன்ப வாழ்வு: ஆசிரியர்: ப. நீலகண்டன். வெளியிட்டோர்: பாரத மாதா பிரசுராலயம், துறையூர். விலை: அணா 10.

பெண் தெய்வம், அன்புத் தெய்வம், அழகுத்தெய்வம் என்றெல்லாம் வர்ணித்து, தம்பதிகள் 'இன்பவாழ்வு' வாழ்வதற்கான வழியைத் துலக்குகிறார் ஆசிரியர். வாழ்க்கை இன்பத்துக்கு வாழ்க்கைத் துணைவிமட்டும் இருந்தால் போதுமா? ரேடியோ, கம்பன் முதலிய சாதனங்களும் வாழ்க்கைக்குத் தேவையல்லவா? ஆகையால், அவைகளின் பெருமையையும் வெவ்வேறு கட்டுரைகளில் விவரிக்கிறார். இத்தனையாலும் இன்பம் கிட்டவில்லையானால் என்ன செய்வதென்று நீங்கள் அஞ்சுகிறீர்களா? மரணத்திலும் இன்பமிருக்கிறது என்று ஆசிரியர் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஸ்தாபிக்கும் கட்டுரையைப் படித்தீர்களானால், அந்த அச்சம் காற்றாய்ப் பறந்து விடும்.

* *

புயல்: ஆசிரியர்: ரவீந்திரநாத் டாகுர். மொழிபெயர்த்தவர்: த. நா. குமாரஸ்வாமி, பி.ஏ. வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர்.
விலை (சாதாரணம்) ரூ. 4—0—0.
(காலிகோ) ரூ. 5—0—0.

“அவசியமான அலுவல், அரசன்போலே உற்ற ஸந்தர்ப்பத்தைக் கைக்கொள்கிறது; காதலோ வாயிற் படியண்டை ஏங்கி நிற்கிறது” என்கிறார் டாகுர். வாயிற் படியண்டை ஏங்கி நிற்பது மட்டிலுமல்ல; வனவனாந்தரங்களிலெல்லாம் திக்குத்திசை தெரியாமல் அலைந்து, இறுதியிலே தெய்வாதீனமாய் ஒளிகண்டு, இன்பமெய்துகிறது என்று சித்தரிப்பது இந்த நாவல். புயல் அடித்து ஓர் அலங்கோலம் ஏற்படுகிறது. நளினாட்சன் மணந்த கமலாவை, தான் மணந்தவளெனத் தவறாய் எண்ணிய ரமேசன், அவளை அழைத்துச் செல்கிறான். உண்மை விளங்குகிறது அவனுக்கு. ஆயினும் பல சிக்கல்கள் நேர்கின்றன. தன் காதலி ஹேம நளினியை அடைய முடியாமல் தவிக்கிறான். இறுதியில் எல்லாம் சுபமாய் முடிகிறது. இந்தக் கதையை, ஆரம்ப முதல் முடிவு வரையில், அற்புதமாய், மிகுந்த சுவாரஸ்ய மூட்டும் வகையில், டாகுர் வரைந்திருக்கிறார். இனிமையும் தெளிவும் இயல்புமான தெள்ளிய நடை

M211, N36,5
N43.8.4

யில், அன்பர் குமாரஸ்வாமி மொழி பெயர்த்திருக்கிறார். அச்சும் பதிப்பும் அருமையாயிருக்கிறது.

*   *

சோவியத் செஞ்சேனை : ஆசிரியர் : கே. ராமநாதன். வெளியிட்டோர் : 'நவசக்தி' காரியாலயம், மயிலாப்பூர். விலை : அணா 4.

ருஷ்ய செஞ்சேனை வீரர்கள், தரையிலும் வானிலும் கடலிலும் புரியும் போர்கள், பிரமிக்கத் தக்கவையாகும். அவர்களுடைய உன்னத லட்சியங்களையும் லட்சணங்களையும் அருஞ்செயல்களையும் இந்நூலிலே நாம் படிக்கும்போது, நமது உள்ளம் பூரிக்கிறது. அவ்வீரர்கள், தங்களுடைய காதற்கிழத்திகளுக்கு எழுதும் கடிதங்கள்கூட, தேசபக்தியை மூட்டும் கட்டுரைகளாய் இருக்கின்றன. புத்தகம், சுத்த சுதேசியான குடிசைத் தொழில் காகிதத்திலே, அச்சிடப்பட்டும், கண்ணைக் கவரும் விதமாக அமைந்திருப்பது மகிழ்ச்சி தருகிறது.

*   *

ஸீதா : ஆசிரியர் : துவிஜேந்திரலால் ராய். மொழிபெயர்த்தவர் : எஸ். என். சங்கரலிங்க ஐயர். வெளியிட்டோர் : ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி. விலை : ரூ. 1-4-0.

ராவணவத மெல்லாம் முடிந்து, பட்டாபிஷேகம் நடந்து, ராமராஜ்யம் நடந்து கொண்டிருக்கையில், ஊர் வம்புக்குப் பயந்து, ஸீதையை ராமன் காட்டுக்கு அனுப்புகிறான். லவ, குசர்கள் ஜனிக்கிறார்கள். அசுவமேதயாகக் குதிரையை லவன் பிடித்து விடுகிறான். போர் மூள்கிறது. ராமன், மீண்டும் ஸீதையைச் சந்திக்கச் செல்கிறான். ஸீதையைப் பூமாதேவி விழுங்கி விடுகிறாள். இதை, அரிய நாடகமாய் எழுதி யிருக்கிறார் துவிஜேந்திரர். முதலிலிருந்து, இறுதி வரையில், சம்பாஷணை முழுதும், பெரும்பாலும் உயர்தரமான தர்மத்தைப்பற்றிச் சிந்தையைக் கலக்கும் தர்க்கங்களாய் அமைந்திருக்கிறது. மொழிபெயர்ப்பில், வடமொழிச் சொற்கள் ஏராளமாய் விரவி யிருக்கிறது. வடமொழி கற்பதற்குப் பூர்வாங்கமாக இந்த நூலைப் படிக்கலாம் என்று சிபார்சு செய்யலாமோ என்று கூடத் தோன்றுகிறது. இவ்வளவு வடசொற்கள் தேவையில்லை. ஆயினும், நடை நன்றாகவே யிருக்கிறது.

*   *

நீதிநெறி விளக்கம் : (மூலமும் உரையுடனும்) தொகுப்பாசிரியர் : காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை, பி.ஏ. வெளியிட்டோர் : தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயவரம். விலை அணா 8.

தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த நீதிநெறி விளக்கத்தை, அதே ஆதீனத்தின் 24-ஆவது அருட்குரவராக அமர்ந்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த சுவாமிகளின் விருப்பப்படி, அவ்வாதீன வித்வான் காழி. சிவ. கண்ணுசாமி அவர்கள் மூலமும் அரிய ஆராய்ச்சியுமாய்த் தொகுத்துப் பதிப்பித்தது மிக்க பொருத்தமாகும். ஷேக்ஸ்பியர் நாடகங்களின் பதிப்புகள் போல, பல மேற்கோள்கள், மூன்று பேர்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் முதலியவைகளோடு, இப்பதிப்பு, நேர்த்தியான அச்சும் கட்டிடமும் கொண்டதாய் அருமையாய் அமைந்திருக்கிறது. இதன் விலை எட்டணா என்றால்—அதுவும் இந்தக் காகிதப் பஞ்ச காலத்தில்—நம்பவே முடியவில்லை. குறைந்தது மூன்று அல்லது நான்கு ரூபாய் விலை வைக்கக்கூடிய நூலை எட்டணாவுக்கு விற்பது, ஒரு தர்ம கைங்கரியமே யாகும்.

*   *

சோவியத் ஜனநாயகம் : ஆசிரியர் : எஸ். ஷண்முகம், சிந்து பூந்துறை, திருநெல்வேலி. விலை : அணா 12.

ஸோவியத் ருஷ்யாவின் அரசியல் அமைப்பையும் சமூக இயலையும் அறிந்துகொள்ள உலகமெங்குமே ஆர்வம் தோன்றி யிருக்கிறது. ஸோவியத் ஆட்சியில் மக்களுக்குச் சமசந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது, மக்களை நற்பிரஜைகளாக்கும் கல்வி போதிக்கப்படுகிறது, தொழிலாளரின் உரிமைகள் காக்கப்படுகின்றன, பொதுஜனப் பத்திரிகாலயங்கள் நடத்தப்படுகின்றன, பெண்கள் ஆண்களுடன் சரிசமானமாய் வாழ்கிறார்கள் என்ற பல வேறு விஷயங்கள் சுருக்கமாகப் பல புள்ளி விவரங்களோடு இந்தப் புத்தகத்தில் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன.

*   *

சின்னா தேவி : ஆசிரியர். தி. நா. சுப்பிரமணியன். வெளியிட்டோர் : கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர். விலை ரூ. 0-12-0

தன் காதலன் கிருஷ்ண தேவராயர், விஜயநகர சாம்ராஜ்யத்துக்குச் சக்ரவர்த்தியாயிருப்பதற்கு, தான் தடையாயிருக்கக் கூடாதென்பதற்காகத் தியாகம் செய்யும் உத்தமியைப் பற்றிய ரஸமான நாடகம். மிக்க இயல்பாகவும் சுவாரஸ்யமான முறையிலும் அழகான நடையில் ஆசிரியர் எழுதியுள்ளார்.

★

88835

அகோர வெயிலில்
குளிர்ச்சி தருவது

கார்டில்

அகோர வெயிலால் உண்டாகும் எரிச்சலிலிருந்து தடுத்துக்கொள்ள கார்டில் பவுடரை தினசரி உபயோகியுங்கள். முதல்தடவை போட்டுக் கொண்ட உடனே கார்டில் பவுடர் குளிர்ச்சி தருகிறது. முப்பது வருஷங்களுக்கு மேலாக கார்டில் பொதுஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இன்றும் அன்று போலவே அது அகோர உஷ்ணத்தைப் போக்கும்

\- சாதனமாயுள்ளது -

தினசரி கார்டில் உபயோகியுங்கள். அது தலைசிறந்தது

★

குழந்தைகளுக்கு கார்டில்

குழந்தைகள் பராமரிப்பில் கார்டில் பவுடர் தலைசிறந்தது. ஏனெனில் சுபாவமான வாசனை கலப்பற்ற அந்த பவுடரில் குழந்தையின் மெல்லிய தேகத்துக்கு எரிச்சல் தரும் பொருள் ஒன்றும் கிடையாது. இத்துடன் வேறொரு பவுடர் உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை. வெயில் கொடுமையையும் போக்கி சொரசொரப்பான சருமத்தை

— மழமழப்பாக்குகிறது —

பவுடர் தூவுவதற்கு வசதியான மேல்மூடியுடன் கூடிய

பெரிய ஸைஸ் டின் ஒன்று ரூ. 2

ஸ்பென்ஸர் அண்டு கோ., லிமிடெட்

சென்னை

மானுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ்

SPENCER & CO., LTD., MADRAS

400 மைல் பிரயாணம் செய்தார்கள்

நண்பர்: (பிரயாணம் செய்தவரைப் பார்த்து) என்ன ஸார்! பிரயாணம் எப்படி?

பிரயாணி: பிரயாணம் என்னவோ நிரம்பச் சிரமமானதுதான். ஆனாலும், **அசோகா பாக்குத் தூள் இருக்கும்** போது 400 மைல் அல்ல, 4000 மைல் வேண்டுமானாலும் பிரயாணம் செய்துவிடுவேன், ஸார். அசோகா என்ன உற்சாகம் தருகிறது தெரியுமா!

REGD. No 1506 அசோகா MILD SCENTED ASOKA ரிஜிஸ்டர் நெ. 1506

அசோகா

"அவனைப்போல புஷ்டியாக இருக்க வேண்டும் என்று நீ விரும்பவில்லையா"?

வாஸ்தவம்! பையன் எப்பொழுதும் சுறுசுறுப்பாகத்தான் இருக்கிருன் அவனுடைய சக்தி குறையாமல் இருப்பதற்கு வேண்டி ஆகாரத்தைக் கொடுக்கவும், குறைந்துபோன சக்தியை உடனே பெறும்படி செய்யாவிடில் குழந்தை வெகு சீக்கிரத்தில் களைப்புற்று விடுமென்றும், விடமின் கூடியதும், புஷ்டி தரக்கூடிய ஆகாராதிகளினுல்தான் குறைந்த சக்தியை மீண்டும் அடையலாமென்றும் அவன் தாயாருக்குத் தெரியும். இங்குதான் விடமின் சேர்ந்த டால்டா அதிக உபயோகமாயிருக்கிறது. அது ஆகாரத்திற்கு புஷ்டியையும், விடமினும் அளித்து சக்தியுண்டாக்கச் செய்கிறது.

விடமின் சேர்ந்த டால்டா சரீரத்தை திடகாத்திரமாக வளரச் செய்யவும், குறைந்த பலத்தை ஈடு செய்யவும் உதவுகிறது . . . விடமினுடன் சேர்ந்த டால்டா ஓர் சிறந்த ஆகார வஸ்து. அது சக்தியைத் தரத்தக்கது. உணவுகளை டால்டாவினுல் தயார் செய்தால் ஆகாரத்திற்கு அதிக சக்தி கிடைக்கிறது. அநேக உணவுப் பொருள்களில் விடமினும், சக்தியும் குறைவாக இருப்பதால், டால்டாவினுல் உணவுகள் தயாரிப்பது ஓர் சிறந்த முறை. அது பாலர்களுக்கும், விருத்தர்களுக்குங்கூட நல்லது.



விடமின் சேர்ந்த **டால்டா**

தாவர எண்ணெயால் தயார் செய்யப் பட்ட

தென்று உத்திரவாத முள்ளது — சீல் செய்த டின்களில் விற்கப்படுகிறது

HVM. 19-50 TM THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD., BOMBAY

LTK-52

லிப்டன் தேனீர் அருந்துகையில்
ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.

SHAKTI—1.7.43

உத்தரவாதமுள்ள
நவீன நாகரீக
கைத்தறி
லுங்கி
&
ஷர்டிங்
துணிகளுக்கு
சங்கு
மார்க்
TRADE MARK
முகம்மது அபூபக்கர் & கம்பெனி
நூல் & கைநெசவு கைலி வியாபாரிகள்
95, தம்பு செட்டி தெரு, மதறஸ்
65/11-12, லோயர் சிட்பூர் ரோடு, கல்கத்தா — 38, பேச்சியம்மன் ரோடு, மதுரை.



ஊக்கத்துக்கு உயர்துணைவ

எல்லோராவில் கைலாசநாதர் கோவில் மதில
களில் உள்ள சிற்ப நயங்களைக்கண்டு நீங்
கள் அதிசயப்படுகிறீர்கள். அதற்கு ஊக்க
மளித்த சக்தி எது என்பது உங்களுக்குக் கட்
டாயம் தெரிந்திருக்கும். பெண்மையின் லக்ஷி
யம் தெய்வ கலையை அங்கே பெருகிறது.
நமது அன்றாட வாழ்விலும் அது மாறுவ க
எல்லையை மீறுகிறது. பெண் அன்போ ம்
பாசத்தோடும் பணிவிடை செய்வதைப்பே ல்
அதிசயம் வேறு என்ன? நாள் பூர ம்
உழைத்துவிட்டு சோர்வடைந்துவரும் க ண
வனுக்கு ஒரு கோப்பை தேயிலைபானம் தயா
ரித்துக் கொடுப்பதுபோல் திருப்தி அளிப்பது
வேறு என்ன? அன்பு ததும்பும் கோ ப்பை
அவனுக்கு சோர்வை அகற்றுகிறது. அவன்
மனமும் கலகலக்கிறது.

★

"நித்திய கர்மா" என்ற எங்கள் புது
திரங்களுடன் கூடிய புத்தகம் எந்தெ
நேரத்திலெல்லாம் தேயிலை பானம்
கலாம் என்பதைப்பற்றி விவரிக்கிற
இந்த விளம்பரத்தைக் கத்தரித்து உங்
பெயர் விலாசம் முதலியவற்றுடன்
கண்ட விலாசத்துக்கு அனுப்பவும். இ
யத்தேயிலைக் கமிஷனர், இந்தியன்
மார்கெட்டு எக்ஸ்பான்ஷன் போர்டு, தபா
பெட்டி நெ. 2172, கல்கத்தா.

குடும்பத்திற்கு ஏற்ற ஒரே பானம் இந்தியன் டீ



இந்தியன் டீ மார்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK 202

Printed by L. Chidambaram, at the Commercial Printing & Publishing House,
46, Muthumari Chetty Street, George Town, Madras.
Edited and Published by V. Govindan, 31, Coral Merchant Street, G. T., Madras.
Joint Editor: T. J. Ranganathan.